பெண்ணியம்

சொ. செல்வமணி
BA. Tamil 2 Year
2019-2020

## உள்ளே


1. பெண்ணியம் விளக்கம் 1

2. மேலை நாடுகளில் பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 7
   - 2.1 பெண்ணியம் தோன்றக் காரணங்கள் 7
   - 2.2 பெண்களுக்கு வாக்குரிமை 29
   - 2.3 பெண்ணியத்தின் தேக்க நிலை 35
   - 2.4 பெண் விடுதலை இயக்கம் 44
   - 2.5 பெண்ணியத்தின் வளர்ச்சி 52
   - 2.6 பெண்ணியக் கோட்பாடுகள் 59
   - 2.7 பழமைவாதக் குடும்பம் சார்ந்த பெண்ணியம் 77

3. இந்தியாவில் பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 86
   - 3.1 இந்தியப் பெண்ணியம் அறிமுகம் 86
   - 3.2 இந்தியப் பெண்களின் சமூக நிலை (1947–ஆம் ஆண்டு வரை) 87
   - 3.3 முன் முயற்சிகளும் சமூக மாற்றங்களும் 111
   - 3.4 பெண்களும் சட்டங்களும் 148
   - 3.5 பெண்கள் முன்னேற்றத்தில் அரசின் கொள்கைகள் 169
   - 3.6 மகளிர் தற்சார்பு அமைப்புக்கள் 174

4. மேலைநாட்டுப் பெண்ணியமும் இந்தியப் பெண்ணியமும் 198
   - 4.1 வேறுபாடுகள் 198
   - 4.2 இந்தியப் பெண்களின் நிலையை உயர்த்தும் வழிமுறைகள் 203

துணை நூல்கள் 206

# 1. பெண்ணியம்

## விளக்கம்

ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் கலைச் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச்சொல், பெண்ணைக் குறிக்கும் இச்சொல் 'femine' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. 'பெண்' என்னும் சொல்லுக்கு 'பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள்' என்று பொருள். பெண்ணியம் என்ற சொல், 1890-களில் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது. எனினும் இருபதாம் நூற்றாண்டிலேயே இச்சொல் பெருவழக்கில் வந்தது. தமிழில் பெண்ணியம், பெண்நிலை வாதம், பெண்ணுரிமை ஏற்பு என்ற சொற்கள் இதற்குரிய சொற்களாக வழங்கி வருகின்றன. நாம் பெண்ணியம் என்றே வழங்குவோம்.

பெண்ணியத்திற்கு உலகில் உள்ள அனைத்துச் சமூகங்களுக்கும் பொருந்தும்படியான, முக்காலத்திற்கும் உரிய ஒரு விளக்கத்தைக் கொடுப்பதென்பது இயலாததொன்றாகும். இதன் விளக்கம் ஒரு சமூகத்தின் வரலாறு, பண்பாடு, இவற்றைப் பற்றிய உணர்வு, கண்ணோட்டம், செயல் இவைகளைப் பொருத்து மாறுபடும். பெண்ணியத்தின் தொடக்கக் காலமாகிய 17-ஆம் நூற்றாண்டில் இச்சொல் குறித்த கருத்துக்களிலிருந்து, 1980-களில் இச்சொல் குறிக்கும் கருத்துக்கள் மாறுபட்டிருக்கும். இதைப் போன்று உலகில் பல்வேறு சமூகத்தினரும், பல்வேறு நாட்டினரும் இச்சொல்லைப் பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்ட கருத்துக்களைக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, பெண்ணியம் என்னும் பொழுது,

அமெரிக்கப் பெண்ணியம் இந்தியப் பெண்ணியத்தினின்றும் பல கூறுகளில் வேறுபடும்; ஒரே நாட்டைச் சேர்ந்த மக்களிடையே பல்வேறு சாராரின் பெண்ணியக் கருத்துக்கள் மாறுபடும். உதாரணமாக, இந்தியாவில் அந்தணர் கருதும் பெண்ணியம் ஆதி திராவிடர் கருதும் பெண்ணியத்தைப் போல இருப்பதில்லை. மேலும், ஒரே இனத்து மக்களிடையேயும்கூட அவர்களுடைய கல்வி, விழிப்புணர்ச்சி, ஆண், பெண் வேறுபாடு, ஆண் ஆதிக்கம் இவற்றைப் பொருத்து இதன் விளக்கம் மாறுபடும். எனவே, சரண்டலற்ற சமுதாயத்தை அமைக்க விரும்பும் பெண்ணியம், மேற்கூறிய அடிப்படைகளைப் பொருத்து அதன் போராட்டங்களிலும் மாறுபடும். எனினும் பெண்ணியம் என்ற சொல்லுக்குத் தெற்காசிய நாடுகள் "பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளும்" என்ற விளக்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளன என்று கூறலாம். இவ்விளக்கத்தின்படி, பாலின அடிப்படையில் சமூகத்தில் வழக்கிலிருக்கும் ஏற்றத் தாழ்வுகளையும், ஆண் ஆதிக்கத்தையும், ஆண் நாயகத்தையும் அறிந்து அந்நிலையை மாற்ற முயல்கின்றவர்கள் பெண்ணியவாதிகள் ஆவர். இதன்படி பாலின உயர்வு தாழ்வுகளைப் புரிந்து கொள்வது மட்டும் போதாது; அந்நிலையை மாற்ற பெண்ணியவாதிகள் முயலுதல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. எனவேதான் "பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து, அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்" என்று ஒரு வரையறையைக் கார்டன் (Garden) என்பவர் கொடுத்திருக்கிறார். இக் கருத்தையே ஜெயின் என்பவர், பெண்ணியம் என்பதற்கு "பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒரு ஆற்றலை உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும், அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பது" என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்.

மேற்குறிப்பிட்ட விளக்கங்கள் அனைத்தும் சில அடிப்படைக் கூறுகளில் ஒன்றுபட்டிருக்கின்றன. அவற்றில் முதலாவது, பெண்

அவள் பெண்ணாகப் பிறந்த காரணத்திற்காகவே எல்லா சமூகங்களிலும் ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறாள்; வேறுபடுத்தப் பட்டிருக்கிறாள்; சுரண்டப்படுகிறாள்; அடக்கி ஆளப்படுகிறாள் என்பதாகும். இரண்டாவது, பாலினம் என்பது சமூகம் சார்ந்தது. இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே இயற்கையில் அமையப் பெற்ற உடல் மற்றும் உயிரியல் கூறுகளுக்கு சமூகம் கற்பிக்கும் ஏற்றத் தாழ்வுகளையும் உள்ளடக்கியதாகும். பெண்கள் என்னும் இனமானது உடல், உயிரியல் மற்றும் உணர்வு, மனக்கூறுகளில் ஆண்களைவிடத் தாழ்ந்தது என்ற கருத்துருவத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட சமூக இனமாகும். மூன்றாவது, இந்நிலையை மாற்றியமைக்க வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். சிலர், பெண்ணியத்தில் கோட்பாட்டைவிடச் செயலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். செயல் இல்லாவிட்டால் பெண்ணியம் வேற்றுப் பேச்சு; அது தானாகவே அழிந்துவிடும் என்கின்றனர். இதனையே புட்சர் "பெண்ணியம் என்பது, பெண்கள் பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே" என்கின்றார்.

மேலும், பெண்ணியம் பெண்கள் அனுபவிக்கும் எல்லா விதமான அடக்குமுறைகளையும் எதிர்ப்பது மட்டுமன்றி, பெண்களின் மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளையும் ஆராய்ந்து செயற்படுத்துகின்றது. இந்த அடக்குமுறைகள் பெண்ணினத்திற்குப் பொதுவாக இருப்பதால், இந்நிலையை மாற்றப் பெண்களே பாடுபட வேண்டும். பெண்களே ஒன்றுகூடி அவர்களுடைய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவ்ற்றைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகளை முடிவு செய்ய வேண்டும்.

பெண்ணியவாதிகள் ஆண்களை வெறுப்பவர்கள் அல்லர். ஆயின், ஆண் நாயகத்தையும், ஆணாதிக்கத்தையும், ஆண் என்னும் அகம்பாவத்தையும் வெறுப்பவர்கள். ஏனெனில், இத்தன்மைகள்தாம் ஆண் மேலாதிக்கமாகவும், சுயநலமாகவும், ஆக்கிரமிப்பாகவும், கொடுமையாகவும் வெளிப்படுகின்றன. இதன் காரணமாக ஆண்கள் பெண்களைச் சமமாக மதிக்காது, தங்களின் உடமை அல்லது ஒரு பொருள் பெண்கள் எனக் கருதி செயற்படுகின்றனர். இவர்கள்.

பெண்ணியவாதிகளின் எதிரிகளாகின்றனர். பெண்ணியவாதிகள் பெண்ணியக் கருத்துக்களை ஆதரிக்கும் ஆண்களுடன் சேர்ந்து செயற்படவே விரும்புகின்றனர். ஆனால் அவ்வாறான ஆண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இதற்குக் காரணம் ஆண்களும், பெண்களும் வளர்க்கப்படும் சமூகச் சூழ்நிலைகளேயாகும். பெண்களின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் ஆண்களுக்கு எதிரானவை என்ற எண்ணமே ஆண்களின் கருத்தில் மேலோங்கி நிற்கின்றது. அதனால் பெண்ணினத்தைக் கண்டு அவர்கள் அஞ்சுகின்றனர். அன்றியும், ஆண்களைப் பொருத்த வரையில் தாங்கள் இதுவரை அனுபவித்து வந்த அதிகாரங்களை அவர்கள் இழக்க விரும்புவதில்லை. சமூகங்களில் தற்பொழுது நிலவிவரும் பாலியல் பாகுபாட்டின் காரணமாக ஆண்களுக்குக் கிடைத்து வரும் சலுகைகள் ஏராளமானவை. பிறப்பு முதல் இறப்பு வரையில் ஒவ்வொரு விநாடியும் மேலான சமூக மதிப்பு, அன்பு, மரியாதை, சிறந்த உணவு, மருத்துவ வசதி, வெளியுலக வாழ்க்கையில் சுதந்திரமாகப் பேசுதல், தேர்ந்தெடுத்தல், முடிவு செய்தல் இப்படி அனைத்து வகைகளிலும் ஆணாகப் பிறந்த காரணத்தினாலேயே அவர்கள் அனுபவித்து வரும் உரிமைகளை அவர்கள் இழக்க விரும்பமாட்டார்கள். அன்றியும், பெண்களுக்குச் சம உரிமை அளிக்கப்படும்பொழுது, பெண்கள் தங்களுக்குப் போட்டியாக வருவார்கள் என்ற அச்சம் அவர்களை வாட்டுகின்றது. சமூகத்தில் பெண்களின் இடம் வீடுதான் என்ற கருத்தே மேலோங்கி நிற்கின்றது. பெண்களின் திறமையும் உழைப்பும் வெளி உலக வேலைகளில் தேவைப்படும்பொழுது அவர்களை வெளியில் வேலைக்கு அனுப்புகின்றனர். தேவை இல்லாத பொழுது அவர்களைத் தூக்கி எறிந்து விடுகின்றனர். பெண்களின் திறமைக்கு மதிப்பளிக்கும் பொழுது இவ்வாறு செய்ய முடியாது. சமூகத்தில் இத்தகைய ஒரு மாற்றம் வரும்பொழுது இழப்பு பெண்களுக்கில்லை; ஆண்களுக்கே. இதனால் நிச்சயமாக ஆண்கள் இந்த மாற்றத்தை வரவேற்க மாட்டார்கள்.

பெண்ணியம் ஆண், பெண் உறவுகளில் மாற்றத்தை விரும்புகிறது. இது ஒரு இக்கட்டான நிலை. ஆண்- பெண் உறவில்

KaBaddi mani.



மாற்றம் என்னும் பொழுது அது சமூகத்தில் மட்டுமில்லாமல் குடும்பத்திலும் செயற்பட வேண்டியது அவசியமாகும். தந்தை-மகள், கணவன்-மனைவி, அண்ணன் - தங்கை, அக்காள்- தம்பி, தாய்-மகன் என்று பல்வேறு உறவுகளை இது பாதிக்கின்றது. இப்பொழுது குடும்பத்தின் மேல்மட்டத்தில் நிலவும் அமைதி, பெண்கள் அங்கு நசுக்கப்படுவதாலும், சுரண்டப்படுவதாலும், பெண்கள் அவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்வதாலும் ஏற்படுகின்ற ஒன்றே ஆகும். பெண்ணியவாதிகள் ஆண்களுடன் மனவேற்றுமை கொள்ளும் பொழுது, குடும்ப உறவுகளில் பிணைக்கப்பட்ட ஆண்களையும் எதிர்க்க வேண்டி இருக்கிறது. ஆயின், சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கத்திற்குக் குடும்பமே அடித்தளம் அமைத்துக் கொடுக்கின்றது. குடும்பத்தில்தான் தொடங்குகிறது. அதனால் பெண்ணியம் தீவிரமாகச் செயற்படவேண்டிய இடமும் குடும்பமே ஆகும். பெண்கள் ஆண்களுக்கு நிகராக மதிக்கப்படும் போக்கு முதலில் குடும்பத்தில் தோன்ற வேண்டும். ஆணாதிக்கமும், அதனால் ஆண்களுக்குக் கிடைக்கும் தனிச்சலுகைகளும் குடும்பத்தில் மாற்றம் பெற்று அங்கு இரு பாலரும் சமமான முறையில் வளர்க்கப்பட வேண்டுவது அவசியமாகும்.

பெண்ணியம் எல்லாவிதமான பாகுபாடுகளையும் நீக்கி, நேர்மையான, ஆண்களுக்குச் சமமான சமூக அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. அதனால் ஆண்களுக்குச் சில இழப்புகளும் அதைக் குறித்து ஏற்படும் அச்சமும் இருந்தாலும், பல வழிகளில் இதனால் ஆண்களும் பயன் பெறுவர். பாலின சமத்துவம் பெற்ற நிலையில் குடும்பத்திலும், வெளியிடங்களிலும் பெண்கள் தங்களிடம் இயற்கையாக அமையப் பெற்றிருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தி வாழ்வர். தாமாகச் சிந்தித்து தற்சார்புடன் வாழ்வர். இதனால் குடும்ப நிலையிலும், சமூகத்திலும் மனித ஆற்றலும், அதன் பயன்பாடும் பெருகும். ஆண்களுக்கும் பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இருக்காது. அன்றியும், பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்று கேட்கவில்லை, எல்லா சாராரும் சமத்துவம் பெற்ற சமூகம் உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் அணுகு முறையாகும்.

அச்சமூகத்தில் ஆணும் பெண்ணும் பாலினப் பாகுபாடுகள் இன்றி மனிதர்களாக மதிக்கப்படுதல் வேண்டும் என்பதே அதன் கோரிக்கையாகும். இதனால் மனித மேம்பாடே பெண்ணியத்தின் நோக்கம் ஆகும். மக்கள் அடிமைகளாக வாழும் சமூகத்தில் பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் அடிமைகளாகத்தான் வாழ்வர். அவ்வாறான அடிமைச் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டும் என்று கேட்பதில் எந்தப் பொருளும் இல்லை. பெண்ணியம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான, நேர்மையான, சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் கூடிய சமூகம் உருவாக வேண்டுமென்று விரும்புகின்றது. ஆகவே பெண்ணியம் இதுவரை உருவாகாத ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்று உணரலாம்.

# 2. மேலை நாடுகளில் பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

சமூகத்தில் மாற்றங்கள் தோன்றுவது வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையானதொன்றாகும். 18-ஆம் நூற்றாண்டு வரை வழக்கிலிருந்த சமூக மதிப்பீடுகள் அனைத்தும் சமயச்சார்புடையன. வாழ்க்கையின் அனைத்து நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் சமயத்தின் ஒப்புதல் பெற்று, வாழ்க்கை நியதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, முழுநம்பிக்கையுடன் செயற்பட்டு வந்தன. சமூகத்தில் மதம் முழு ஆதிக்கம் செலுத்தியது. அம்மதத்தைச் செயற்படுத்தும் மதத்தலைவர்கள் கடவுளுக்கிணையாக மதிக்கப்பட்டு வந்தனர். சமூகத்தில் நிலவிவந்த தீமைகளும் கொடுமைகளும் மதத்தின் ஒப்புதலோடும், ஆதரவுடனும் சமூகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தக் கூடாது என்ற கொள்கையோடும் காலம் காலமாக நிலைபெற்று வந்தன.

இவ்வாறான சூழலில் மேலைநாடுகளில், குறிப்பாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பெண்ணியம் தோன்றக் காரணமாக இருந்த சமூகப் பின்னணியும், அதன்பின் பெண்ணியம் தோன்றி, வளர்ந்த போக்கும் ஆராயப்படுகின்றது. மேலும், இப்பகுதியில் பெண்ணியக் கோட்பாடுகளும், அதன் நிறை, குறைகளும் ஆராயப்படுகின்றன.

## 2.1 பெண்ணியம் தோன்றக் காரணங்கள்

இந்நிலையில் 18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய சமூகத்தில் சில மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. இதற்கு அடிகோலியவை

புதுமைக் கருத்துக்கள் ஆகும். இப்புதுமைக் கருத்துக்கள் இக்கால கட்டத்தில் தோன்ற ஆரம்பித்ததனால் இக்கால கட்டத்தைப் பகுத்தறிந்து தெளியும் காலம் (age of reason / age of enlightenment) என்றழைக்கின்றனர். இதன்படி, உலகத்தில் வழங்கும் எதையும் காரணகாரியங்களோடு பகுத்தறிந்து, ஆராய்ந்து, தெளிந்து, உண்மை எனத் தெரிந்தவற்றையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்து பரவ ஆரம்பித்தது. இதன் விளைவாக உலக வாழ்க்கையின் கூறுகள் அனைத்தும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாறு ஆராய்ச்சிக்கு உட்படுத்தியவற்றுள் ஒரு பகுதி சமூக மதிப்பீடுகள் ஆகும். சமூகத்தில் காலம் காலமாக வழங்கி வந்த ஏற்றத்தாழ்வுகள், ஆதிக்கம் முதலியவற்றை வலியுறுத்தும் மதிப்பீடுகள் யாவும் விவாதத்திற்கு உரிய பொருள்களாயின. இம்மதிப்பீடுகள் உண்மைக்குப் புறம்பானவைகளாகக் கருதப்பட்டுச் சமத்துவம், தனிமனித சுதந்திரம், குடியாட்சி, எல்லோருக்கும் ஒரே நியதி என்ற புதிய சமூக மதிப்பீடுகள் உருவாகத் தொடங்கின.

### 2.1.1 பிரெஞ்சுப் புரட்சியும் அமெரிக்கப் போரும்

இப்புதிய சமூக மதிப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாக இருவேறு நாடுகளில் இருபெரும் புரட்சிகள் தோன்றின. ஒன்று 1789-இல் விளைந்த பிரெஞ்சுப்புரட்சி; மற்றொன்று 1776-இல் தோன்றிய அமெரிக்கப் புரட்சி பிரெஞ்சு நாட்டில் 16-ஆம் லூயி மன்னரின் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் அல்லல்பட்டுக் கிடந்த மக்கள் திரண்டெழுந்து, மன்னராட்சியை ஒழித்து, மக்கள் ஆட்சியை நிறுவினர். விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற புதிய மதிப்பீடுகள் வலியுறுத்தப்பட்டு, அவை ஏற்றுக் கொள்ளப்பட்டதே இப்புரட்சியின் அடித்தளமாகும். இதே போன்று விளைந்த மற்றொரு புரட்சி அமெரிக்கப் புரட்சியாகும். அமெரிக்கா ஐரோப்பியர், குறிப்பாக ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் நூற்றாண்டுக் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்தது. அமெரிக்க மக்கள் இதை எதிர்த்துப் போர்புரிந்து குடியாட்சியை நிறுவினர். இவ்விரு நாடுகளிலும் சுதந்திரதாகம் வீறுபெற்றெழுந்தது. இதை ஒட்டி மேலை நாடுகளில் விழிப்புணர்ச்சி தோன்றி, இப் புதுக்

கருத்துக்கள் பின்பு ஏற்றுக் கொள்ளப்பட்டன. அமெரிக்கப் போரின் பொழுது தாமஸ் பைன் (Thomas Pine) என்பவர் எழுதிய மனிதனின் உரிமைகள் என்னும் நூலும், பிரெஞ்சுப் புரட்சியின் பொழுது வால்டர் (Walter), டிடராட் (Tedrat), ரூஸோ (Rousseau) போன்றவர்களின் படைப்புகளும் இப்போக்கிற்கு முக்கியப் பங்காற்றின. இவ்விரண்டு புரட்சிகளிலும் பெண்களும் பங்கு கொண்டனர். எனினும், இப்புரட்சிகள் பெண்களின் நிலையில் யாதொரு மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. சமூகத்தில் மற்ற பகுதிகளில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் திறனாய்வு செய்யப்பட்டாலும் ஆண் பெண் இனங்களுக்கிடையே நிலவிய ஏற்றத்தாழ்வுகள் அவ்வாறான ஆய்வுகளின் பொருளாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் இதற்கு முக்கிய காரணம் ஆணும் பெண்ணும் இயற்கையிலேயே மாறுபட்ட தன்மைகள் கொண்டவர்கள் என்ற நிலையில், அவ்விரு பாலினங்களுக்கிடையே நிலவிய ஏற்றத்தாழ்வுகளும் நியாயமானவை என்று கருதப்பட்டதாகும். இதனால் அமெரிக்கப் புரட்சியின் விளைவாக அந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட குடியாட்சியில் இயற்றப்பட்ட அரசியல் சாசனத்தில்கூட ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்து காணப்படவில்லை.

ஆயினும், சமூகத்தில் பெண்கள் தாழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்; அந்நிலை மாறவேண்டும் என்ற கருத்துக்கள் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்தன. இதைப்பற்றி முதலில் மேரி உல்ஸ்டோன் கிராப்ட் (Mary Wollstonecraft) என்ற ஆங்கிலப் பெண்மணி நூல் ஒன்றை எழுதினரர். அவர் ஆண்கள் உரிமைகளை நியாயப்படுத்துதல் (Vindication of the Rights of Man) என்ற புத்தகத்தை முதலிலும், பெண்களின் உரிமைகளை நியாயப்படுத்துதல் (Vindication of the Rights of Women) என்ற புத்தகத்தை அதன் பின்னர் 1792-இலும் எழுதினார். அந்நூலில் அவர் முதலில் பிரெஞ்சுப் புரட்சிக்கு அடித்தளமாக அமைந்த கருத்துக்களை நியாயப்படுத்துகின்றார். மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட பொழுது அவ்வுரிமைகளை அடைய மக்கள் புரட்சி செய்தது நியாயம் என்கின்றார். ஆயின் மக்கள் என்பது ஆண் பெண் இருபாலரையும் உள்ளடக்கியதாகும். அதனால்

ஆண்களுக்கு உரிய உரிமைகளும் நியாயங்களும் பெண்களுக்கும் உண்டு என்பது அவர் வாதமாகும். அவர் கருத்தின்படி, ஆணும் பெண்ணும் இயற்கையிலேயே மாறுபட்ட தன்மைகள் உடையவர்கள் அல்லர்; தற்காலத்தில் பெண்கள் ஆண்களிடமிருந்து மாறுபட்ட குணங்களைப் பெற்றிருப்பதற்கு அவர்கள் வளர்க்கப்பட்ட சூழ்நிலையே காரணம் ஆகும். பெண்மையின் குணங்கள் என்பவை ஆண்களால் பெண்களுக்கு எனத் தீர்மானிக்கப்பட்டவையாகும். உதாரணமாக, அடங்கியிருத்தல் என்ற குணம் முதலில் பெண்களுக்குரியதாகக் கருதப்பட்டு, பின்பு அதுவே காலப்போக்கில் அவர்களுக்கு அழகூட்டுவதாகவும் வர்ணிக்கப்படுகின்றது. பெண்கள் ஆண்களின் ஆதரவில் வாழவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால் பெண்கள் ஆண்களால் விரும்பப்படுகின்றவர் களாக வாழ வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். அவர்கள் காதலிப்பதையும், காதலிக்கப் படுவதையுமே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றனர். இவ்வாறான போக்குகள் பெண்களின் மனம் சரியான முறையில் பண்படவில்லை என்பதையே காட்டுகின்றன. பெண்கள் இவ்வாறு வாழ்வதன் காரணம் அவர்கள் இயற்கையில் மாறுபட்ட குணங்கள் கொண்டவர்களாகப் படைக்கப்பட்டவர்கள் என்பதால் அன்று; சமூகத்தின் வளர்ப்பு முறையினாலேயே ஆகும். சமூகம் அவர்கள் திறமைகளை வெளிக் கொணரச் சரியான சூழ்நிலையை அளிக்கவில்லை. இந்நிலையை மாற்றப் பெண்களுக்குக் கல்வியளிக்கப்பட வேண்டும். இது பெண்கள் ஆண்களை அதிகாரம் செய்வதற்காக அன்று; அவர்கள் தற்சார்புள்ளவர்களாக வாழப் பயிற்சி அளிப்பதற்காகவேயாகும். பெண்கள் பெறும் கல்வி அவர்களை அதிக அன்புள்ள மனைவியாகவும், அறிவுள்ள அன்னையாகவும் செயற்பட வைக்கும் என்று மேரி உல்ஸ்டோன்கிராப்ட் கருதினார். அவர் படைப்பு முதன் முறையாக ஒரு பெண்ணால், பெண்களின் நிலை பற்றி எழுதப்பட்ட நூலாகும். அவர் எழுதிய நூல் அவர் காலத்தில் பிரபலமடையவில்லை. ஆனால் பெண்ணியம் தீவிரமடைந்த பொழுது இந்நூல் பெண்ணியவாதிகளின் வேதமாகக் கருதப்பட்டது. பெண்ணியமும், இந்நூல் வெளிவந்த ஆண்டு தொடங்கியதாகக் கருதப்பட்டது.

இதே போன்று அமெரிக்க மக்கள் போர் முடிந்தபின்பு லேடி அபிக்வேல் ஆட்டம்ஸ் (Lady Abiquail Adams) என்பவர், தன் கணவருக்குப் 'பெண்களை நினைத்துப் பாருங்கள்' (Remember the Ladies) என்ற தலைப்பில் எழுதிய கடிதத்தில், அமெரிக்கப் புரட்சி, பெண்கள் நிலையைச் சீர்திருத்த எந்த ஒரு முயற்சியும் செய்யவில்லை என்றும், பெண்கள் ஆண்களுக்கெதிராகப் போராடித்தான் அதைப் பெற முடியும் என்றும் கூறியிருக்கின்றார்.

இவ்வாறு பிரெஞ்சு ஆங்கிலேயப் புரட்சிகள் பெண்களின் நிலையில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. எனினும், பின்னர் பெண்களின் நிலைமையைப் பற்றிய புதுக்கருத்துக்கள் உருவாக அவை காரணமாயின. பெண்ணியத்திற்கு அடிப்படையான சமத்துவம், சுதந்திரம் போன்ற கருத்துக்கள் முதன் முதலில் எழுந்தது பிரான்ஸ் நாட்டில் ஆகும். ஆனால் அவை ஆதரிக்கப்பட்டு பெண்ணிய இயக்கமாகப் பரிமளித்தது அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமே ஆகும். இதற்குக் காரணங்கள் உள்ளன. அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறியவர்கள் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தவர்கள்; பல்வேறு கலாசர்ரப் பின்னணியைக் கொண்டவர்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து உழைத்து, அமெரிக்காவில் ஒரு புதுமையான சமூக அமைப்பை உருவாக்கினர். அவர்கள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறிய பொழுது அவர்களுடன் குடிபுகுந்த பெண்களும் அம்முயற்சியில் பங்கேற்றனர். அங்கு பெண்கள் ஆற்றிய பங்கிற்கு ஆண்களின் அனுதாபமும் ஆதரவும் கிடைத்தன. இந்நிலை புதுமையான கருத்துக்கள் அங்கு உருவாக ஏதுவான சூழலை உருவாக்கின். இதற்கு மாறாக, இங்கிலாந்து பழமையான கலாச்சாரப் பின்னணியைக் கொண்டது. ஆயினும் பின்பு அங்கு நிலவிய சமூகப் பொருளாதார அரசியல் சூழல்கள்,.படிப்படியாகப் புதுமைக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள ஏதுவான சூழலை உருவாக்கின. இக்கருத்துக்கள் பின்பு பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளிலும், அதன் பின்பு கீழைநாடுக்ளிலும் பரவின. இப்போக்குகளின் காரணமாகப் பெண்ணியக் கருத்துக்கள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் தோன்றி வளர்ந்து பின்பு இந்தியாவிலும் பரவிய வரலாற்றை ஆராய்வது அவசியமாகின்றது.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஏற்பட்ட சில சமூகப், பொருளாதார, மத, அரசியல் மாற்றங்கள், பெண்கள் அவர்களுக்கென்று ஒதுக்கிய வாழ்க்கையின் களமாகிய வீட்டை விட்டு, வெளி உலகிற்கு வந்து, தொழில்களில் ஈடுபட வாய்ப்பளித்தன. இவற்றில் முதன்மையானது பெண்கள் பெற்ற கல்வியறிவாகும்.

### 2.1.2 பெண் கல்வியின் தாக்கம்

முதலாவதாக ஏற்பட்ட மாற்றம், பெண்களுக்குக் கிடைத்த கல்வியறிவாகும். பெண்கல்வி என்பது அதுவரை ஐரோப்பிய நாடுகளில் உயர்குடிமக்களின் தனிச் சிறப்புரிமையாகவே கருதப்பட்டு வந்தது. இந்நிலை மாறி, பின்பு பெண்கல்வி என்பது பெண்கள் தங்களது குடும்பப் பொறுப்புகளை ஏற்று நடத்தத் தேவையான அறிவாகக் கருதப்பட்டது. அதன் பின்பு, அமெரிக்கப் பெண்கள் எவாஞ்சலிக இயக்கத்தின் (Evangelism) மூலம் சமூக, ஒழுக்கச் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொழுது, கல்வி பெண்களுக்குத் தேவையான ஒரு தகுதியாகக் கருதப்பட்டது. பெண்களுக்குக் கல்வி தேவையானதொன்றென்ற எண்ணம் 1820-களிலேயே வலுப்பெற்று, 1830 முதல் 1860 வரையில் பெண்களுக்காகத் தனிக் கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டன.

இங்கிலாந்தில் ஆண்கள் வெளிநாட்டு வியாபாரத்தின் பொருட்டும் காலனி நாடுகளில் வேலையின் பொருட்டும் வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்ததால் உள்நாட்டில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. மேலும் உயர் குடியில் பிறந்த ஆண்கள் திருமணமாகாமல் வாழ விரும்பினர். இதனால் பெண்கள் திருமணம் செய்து கொள்ளும் வயது உயர்ந்தது. மேலும், பெண்கள் தற்சார்புடன் வாழக் கல்வி அவசியமானதொன்றாயிற்று.

### 2.1.3 தொழிற்புரட்சியின் விளைவுகள்

இங்கிலாந்தில் தோன்றிய மற்றொரு சமூகப் பொருளாதார மாற்றம் தொழிற்புரட்சியாகும். இப்புரட்சி தோன்றுமுன்பு குடும்பம் என்பது சமூகத்தின் முக்கியப் பொருளாதாரக்கூறாக இருந்தது. பெரும்பாலும் ஒரு சமூகத்தினருக்குத் தேவையான பொருட்கள்

சொ. செல்வமணி
BA. Tamil 2 year



அனைத்தையும் பல்வேறு குடும்பங்களில் அவற்றின் அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்துத் தயாரித்தனர். தொழிற்புரட்சியின் காரணமாகத் தொழிற்சாலைகள் தோன்றின. இதன் விளைவாகக் குடும்பத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் நகர்ப்புறங்களில் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டன. இதனால் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்தன; மக்கள் வீட்டிற்கு வெளியில் வேலை தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வேலைதேடிக் குடும்பங்கள் நகர்ப்புறங்களுக்குக் குடிபெயர்ந்தன. இது கூட்டுக் குடும்பமுறை மாறி சிறு குடும்பங்கள் தோன்ற வழிவகுத்தது. சிறு குடும்பங்களில் முதியோர்களின் ஆதிக்கமும் அவர்கள் செயற்படுத்தும் சமூகக் கட்டுப்பாடுகளும் குறைந்தன. தொழிற்சாலைகளின் மூலம் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதால், உற்பத்தித்திறன் அதிகரித்தது. வீட்டு வேலைகளை எளிதாக்கும் கருவிகள் பல தோன்றின. இதனால் பெண்கள் வீட்டு வேலை செய்யும் நேரம் குறைந்தது. அவர்களுக்கு அதிக அளவில் ஓய்வு நேரம் கிடைத்தது. இக்காரணங்களினால் நடுத்தர வர்க்கத்துப் பெண்களும் அடித்தளத்துப் பெண்களும் வீட்டிற்கு வெளியில் வேலை செய்ய ஆரம்பித்தனர். பெண்களின் உலகம் வீட்டிற்குள்ளும் ஆண்களின் உலகம் வீட்டிற்கு வெளியிலும் என்ற வரையறை மாறி, பெண்களின் உலகம் வீட்டின் உட்பகுதியிலும் வெளியிலும் விரிவடைய ஆரம்பித்தது.

### 2.1.4 எவாஞ்சலிகத்தினரின் பங்கு

இவை தவிர, மத அடிப்படையிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. இவற்றில் முக்கியமானது எவாஞ்சலிகம் என்ற கோட்பாடு பிரபலமடைந்ததாகும். எவாஞ்சலிகம் பிராட்டஸ்டண்டு கிருஸ்துவ மதத்தின் ஒரு உட்பிரிவாகும். இதன் முக்கிய கொள்கை, மனிதனுக்கு, மனிதன் என்ற தகுதியையும், மதிப்பையும் அளிக்கவேண்டும் என்பதாகும். இம்மதத்தின் மற்றொரு கொள்கை இக்கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமெனில், பிற மதத்தினர் எவாஞ்சலிக மதத்திற்கு மாற வேண்டுமென்பதாகும். இதன்படி மதம் மாற்றும் பணியில் பெண்களும் தீவிரமாக ஈடுபட்டனர். இவ்வியக்கம் அமெரிக்காவில் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19-ஆம்

நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தீவிரமடைந்தது. 1798-ஆம் ஆண்டுக்கும் 1828-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் மதமாற்றம் செய்யப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பேர் பெண்கள் என்னும் பொழுது, பெண்கள் இவ்வியக்கத்தில் எந்த அளவு தீவிரமாக ஈடுபட்டனர் என்பது தெரியவருகின்றது. 1860-களில் பெண்கள் இம்முயற்சியில் முழுநேரம் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதற்கு முக்கியக் காரணம் பெண்களின் இயற்கைத் தன்மைகள் இந்த இயக்கத்தின் தன்மைகளோடு ஒத்துப்போகின்றன என்பதாகும். இக் கருத்தின்படி 'ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கையில் அமைந்த தன்மைகள் மாறுபட்டவை; பெண் அன்பு, பாசம், அருள் இவற்றின் உறைவிடம் ஆவாள்; பெண் இக்குணங்களை அவளது உலகமாகிய வீட்டில் பயன்படுத்தித் தனது குடும்பவாழ்வை பரிமளிக்கச் செய்கின்றாள்; பெண்ணினது இக்குணங்கள் சமூகத்துக்கும் பயன்பட்டு சமூக வாழ்வும் நலன்பெற வேண்டும்' என்று உணரப்பட்டது. அதனால் பெண்கள் இவ்வியக்கத்தில் ஈடுபடுவதை மக்கள் ஆதரித்தனர். பெண்களின் உலகம் வீடு மட்டுமே என்ற வரையறை நீங்கிப் பெண்களின் உலகம் வீட்டிற்கு வெளியிலும் விரிவடைந்தது. எவாஞ்சலிக மதத்தினர் மத மாற்றம் செய்வதுடன் வேறு சில சமூக நலத்திட்டங்களிலும் ஈடுபட்டனர். அகதிகளுக்கும், ஆதரவற்றோருக்கும் பாதுகாப்பளிப்பது குருடர், செவிடர், மனக்குறை, உடற்குறை உள்ளோர் இவர்களுக்கு ஆதரவளிப்பது, இச்செயல்களுக்காக நிதிதிரட்டுவது இது போன்ற செயல்களில் ஈடுபட்டனர். இவ்வியக்கம் தீவிரமாகச் செயற்படாத இங்கிலாந்தில்கூட, 1830-களில் 17 பெண் குழுக்களும், அதன் கிளைகளும் இருந்தன. 1857-இல் பெண்களால் பராமரிக்கப்படாத எவாஞ்சலிக நிறுவனங்கள் இல்லாத ஊரே இல்லை எனும் நிலைமை உருவாயிற்று எனில் பெண்கள் இவ்வியக்கங்களில் ஈடுபட்டதன் தீவிரத்தை உணரலாம். பெண்கள் ஈடுபட்ட இச்செயல்கள் ஆண்களின் மேற்பார்வையில் நிகழ்ந்தாலும் வெளியுலக வாழ்வில் பங்கேற்கவும், குழுக்களை நிர்வகிக்கவும், சட்டதிட்டங்களை இயற்றவும் இவ்வியக்கம் பெண்களுக்கு வாய்ப்பளித்தது.

எவாஞ்சலிகர்கள் ஈடுபட்ட மற்றொரு இயக்கம் விலைமாதரை நல்வழிப்படுத்துதல் ஆகும். நியூயார்க் நகரில் அமெரிக்கப் பெண்கள் இவ்வியக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். விலைமாதரை நல்வழிப்படுத்துவதற்கு மத மாற்றம் செய்வது ஒரு வழிமுறையாகக் கருதப்பட்டது. இம்முயற்சி தீவிரமடைந்த பொழுது இம்முறையைப் பிரபலப்படுத்தி 'ஒழுக்கச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு' (Advocate of Moral Reform) என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக அப்பத்திரிகை முழுவதும் பெண்களாலேயே நிர்வகிக்கப்பட்டது. பெண்கள், விலை மாதரை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டபொழுது, அவர்களுக்கு, அப்பெண்கள் எதிர்கொள்ளும் சில முக்கியமான பிரச்சனைகள் தெரிய வந்தன. அவற்றில் முக்கியமானது சமூகம் ஒழுக்கக் கட்டுப்பாடு எனும் நிலையில் ஆணுக்கொரு நியதியையும் பெண்ணுக்கொரு நியதியையும் கடைப்பிடித்து வருகின்றது என்பதாகும். எவாஞ்சலிக இயக்கத்தில் ஈடுபட்ட பெண்கள் இவ்வாறான சமூக நியதியைச் சாடினர். முக்கியமாக, விலைமாதர் இல்லங்களைச் சோதனையிட்ட பொழுது, கைதான விலைமாதர்கள் தண்டனை பெற்றனர். ஆனால் விலைமாதரோடு பாலுறவில் ஈடுபட்ட ஆண்களுக்கு எந்தவிதத் தண்டனையும் அளிக்கப்படவில்லை. இதனை எதிர்த்து இவ்வியக்கத்தில் ஈடுபட்ட பெண்கள் விலைமாதரோடு பாலுறவில் ஈடுபட்ட ஆண்களும் தண்டிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை எழுப்பினர். இரண்டாவது, விலைமாதர்களது வாழ்க்கைச் சூழல்களை ஆராய்ந்த பொழுது, பெரும்பாலான பெண்களின் வறுமை நிலையே அவர்களது இவ்வாறான வாழ்க்கை முறைக்குக் காரணமாயிற்று என்ற உண்மையும் அவர்களுக்குத் தெரியவந்தது. அதனால் வறுமை நிலைமாற பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படுதல் வேண்டுமென்பது எவாஞ்சலிகர்களது முக்கிய கோரிக்கைகளுள் ஒன்றாக இருந்தது.

இங்கிலாந்திலும் எவாஞ்சலிகர்கள் இவ்வாறான மதமாற்றத்தில் ஈடுபட்டிருந்தாலும், அமெரிக்காவில் பெண் நிலைபற்றி எழுந்த இத்தகைய கருத்துக்கள் இங்கிலாந்தில் ஆரம்ப காலகட்டங்களில் எழவில்லை. இங்கிலாந்தில் ஒழுக்கச் சீர்திருத்தத்திற்கும்

பெண்ணியத்திற்கும் தொடர்புடைய கருத்துக்கள் 1860-70களில்தான் எழுந்தன. அக்காலகட்டத்தில் அமெரிக்காவில் பெண்ணியம் முழுமையான வளர்ச்சியுற்றிருந்தது.

இங்கிலாந்துப் பெண்களிடையே விலைமாதர் வாழ்விற்கும் பெண்ணியத்திற்கும் இடையே உள்ள தொடர்பினைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படக் காரணமாயிருந்தது தொத்துநோய்கள் தடுப்புச் சட்டம் (Contagious Diseases Act) இயற்றப்பட்டமையாகும். இச்சட்டம் 1864, 1866, 1869 என்ற மூன்று ஆண்டுகளில் இயற்றப்பட்டது. இதன்படி விலைமாதர்கள் அனைவரும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுவது கட்டாயமாக்கப்பட்டது. விலைமாதர்களுக்கு நோய் இருப்பது தெரியவந்தால் அவர்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. இதற்கு அவர்கள் உடன்பட மறுத்தால் அவர்களைக் கைது செய்ய முடியும். 1869-ஆம் ஆண்டில்தான் இவ்வாறான சட்டம் எவ்வாறு பெண்களை மட்டுமே குற்றவாளியாகக் காட்டுகின்றது என்ற விழிப்புணர்வு பெண்களிடையே பரவிற்று. இதை எதிர்த்து ஜோசபின் புட்லர் (Josephine Butler) என்பவர் 'தேசியப் பெண்கள் குழு' (Ladie's National Association) என்ற அமைப்பு ஒன்றை நிறுவினார். இதன் மூலம் 17,000 மறுப்புக் கடிதங்களை 50,000 கையெழுத்துக்களுடன் அனுப்பினார். இது பற்றி 900 கூட்டங்களில் மக்கள் பேசி விவாதித்தனர். ஜோசபின் புட்லரது தீவிர முயற்சியின் பலனாகப் பல பெண்கள் விலைமாதர்களாக வாழ்க்கை நடத்துவது தவிர்க்கப்பட்டது. பெண்கள் உடன்படும் வயது (Age of consent) 1875-ஆம் ஆண்டு வரை 12-ஆக இருந்தது. இது 1885-இல் 16 வயதாக உயர்த்தப்பட்டது.

எவாஞ்சலிகர்கள் ஈடுபட்ட மற்றொரு இயக்கம் மக்களிடையே குடிப்பழக்கத்தைத் தவிர்ப்பதாகும். இதுவும் மக்களை நல்வழிப்படுத்தும் இயக்கத்தில் ஒன்றாக மேற்கொள்ளப்பட்டு பெண்ணியத்துடன் தொடர்புடையதாயிற்று. இதில் ஈடுபட்ட பெண்களுக்குப் பல உண்மைகள் தெரிய வந்தன. குடிப்பழக்கம் தீயொழுக்கத்தின் பாற்பட்டது; குடிப்பழக்கம் மனித அறிவை மயங்கச் செய்து அவனை முறைகேடான பால் உறவுகளுக்கு உட்பட வைக்கின்றது. குடிக்கும்

இடங்கள் விலைமாதரது உறைவிடங்களாவும், அவை குடும்பப் பெண்கள் செல்லக் கூடாத இடங்களாகவும் இருக்கின்றன. குடிப்பழக்கத்தினால் குடும்பத்தின் அமைதி கெடுகின்றது. ஆண்களின் வருமானத்தை நம்பி வாழும் குடும்பங்கள், ஆண்களின் குடிப்பழக்கத்தினால் வறுமையில் வாடுகின்றன. குடும்பங்களில் சண்டை சச்சரவுகளுக்கும் இப்பழக்கம் வழிவகுக்கின்றது. எவாஞ்சலிகர்களில் பலர் முதலில் குடியை ஒழிக்கும் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டாலும், குடிப்பழக்கத்திற்கும் பெண்களின் நிலை சீர்கேட்டிற்குமுள்ள நெருங்கிய தொடர்புளை உணர்ந்து இவர்களில் பலர் பின்னர் பெண்ணியவாதிகளாக மாறினர். இப்படி மாறிய பலருள் முக்கியமானவர்கள் லுக்ரிஹியா மோட் (Lueretia Mott), லூசி ஸ்டோன் (Lucy Stone), எலிசபெத் பிளாக்வெல் (Elizebeth Blackwell), கிரிம்கி சகோதரிகள் (Grimke Sisters) முதலியோர் ஆவர்.

அமெரிக்காவுடன் ஒப்பிடும் பொழுது குடியாமை இயக்கத்தில் ஈடுபட்ட பெண்கள் இங்கிலாந்தில் குறைவாகவே இருந்தனர். ஆரம்ப காலங்களில் ஆண்கள் இதில் முக்கிய பங்கு வகித்தனர். 1850-இல் இருந்துதான் இதில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கினர். ஆனால் பெண்களின் வாழ்வைக் குடிப்பழக்கம் எவ்வாறு சீர்குலைக்கின்றது என்பது பற்றி அமெரிக்கப் பெண்களிடையே ஏற்பட்ட அளவு விழிப்புணர்வு இங்கிலாந்தில் பெண்களிடையே எழவில்லை..

எவாஞ்சலிகர்கள் ஈடுபட்ட மற்றொரு இயக்கம் அடிமை ஒழிப்பாகும். ஒரு மனிதன் மற்றொருவனை அடிமைப்படுத்தி ஆள்வது கொடுமையானது; சமத்துவக் கொள்கைக்கு எதிரானது என்ற கொள்கையின் அடிப்படையில் அடிமைப்பண்பாடு ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் இவ்வியக்கத்தில் தீவிரமடைந்தது. இதிலும் பெண்களின் வாழ்வைப் பாதிக்கும் கூறுகள் இருந்தன. தென்னமெரிக்காவில் வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த ஆண்கள் கறுப்புநிற அடிமைப் பெண்களோடு பாலுறவு கொள்வது வழக்கமாக இருந்தது. இப்பழக்கத்தின் மூலம் வெள்ளையர்களுக்கு மற்றொரு வகையிலும் இலாபம் கிடைத்தது. இவ்வுறவின் மூலம் பிறந்த குழந்தைகளும் அடிமைகளாகக்

கருதப்பட்டதால், அக்குழந்தைகளை வெள்ளையர்கள் அடிமைச் சந்தையில் விற்றுப் பொருளீட்ட முடிந்தது. ஆயின் அடிமைப் பெண்களுடன் ஆண்கள் பாலுறவு கொண்டது பெண்களை வேறு வகைகளில் பாதித்தது. இவ்வுறவுகள் பால்வினை நோய்களுக்கு வழி வகுத்தன. அவ்வாறு உறவு கொண்ட ஆண்களின் மனைவியரும், குழந்தைகளும்கூட இந்நோயினால் பாதிக்கப்பட்டனர். அடிமை ஒழிப்பில் ஈடுபட்ட சாரா (Sarah) என்ற பெண்மணி இதுபற்றி விவாதிக்கும் பொழுது, அடிமை ஒழிப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவமுறையில் நியதி வழங்கப்பட வேண்டுமென்று கோரினார்.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் அடிமை ஒழிப்பு இயக்கத்திற்கு ஆதரவாக நிதி திரட்டுவதிலும, கையெழுத்து சேகரிப்பதிலும் பெண்கள் தீவிரமாக ஈடுபட்டனர். இவ்வியக்கத்தில் ஈடுபட்டதன் காரணமாகப் பெண்ணியத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. 1840-ஆம் ஆண்டு லண்டனில் அகில உலக அடிமை ஒழிப்பு மாநாடொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மகாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ள அமெரிக்காவிலிருந்து நான்கு பெண்கள் ஆர்வத்துடன் லண்டன் நோக்கிப் பயணமானார்கள். ஆயின், அவர்கள் லண்டன் போய்ச் சேர்ந்த பிறகு, அவர்கள் பெண்கள் என்ற ஒரே காரணத்தினால் அம்மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அடிமை ஒழிப்பு இயக்கத்தில் முன்னின்று தீவிரமாகப் பாடுபட்டும், அவர்கள் பெண்ணினத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அது பற்றிய விவாதங்களில் ஆண்களுடன் சரிசமமாக கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது அப்பெண்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. அனுமதி மறுக்கப்பட்டு அமெரிக்கா திரும்பி வந்த பெண்கள் அனைவரும் செனாகா பால்ஸ் (Senaca Falls) என்ற ஊரில், 1848-ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஒன்றுகூடிப் பெண்கள் உரிமைகளைப் பற்றி விவாதித்தனர். 1848-ஆம் ஆண்டு கூடிய செனாகா பால்ஸ் பேரவையில் எலிசபெத் காடி ஷான்டர் என்பவரால் அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை ஆதாரமாகக் கொண்டு பெண்களின் உரிமை அறிவிப்பு (Declaration of

the Rights of Women) என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இது பெண்ணியக் கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்தது. அதன் கருத்துக்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

“ஆண்களும் பெண்களும் இயற்கையில் சமமானவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்ற வெளிப்படையான உண்மையை ஏற்றுக் கொள்கின்றோம். அவர்கள் மாற்ற முடியாத உரிமைகளைக் கடவுளின் மூலம் பெற்றுள்ளனர். இவ்வுரிமைகளுள், வாழ்விற்கும், சுதந்திரத்திற்கும், மகிழ்ச்சியுடன் இருப்பதற்கும் தேவையான உரிமைகளைப் பெறவே அரசாங்கம் என்னும் அமைப்பு ஆளப்படுபவர்களின் அனுமதியுடன் நிறுவப்பட்டுள்ளது. அரசாங்கம் தன் க்டமைகைளச் செய்யத் தவறுமெனில் அவ்வரசாங்கத்தால் துன்பப்படுபவர்கள் அவ்வரசாங்கத்திற்குத் தங்கள் ஆதரவை மறுத்துத் தங்கள் பாதுகாப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உத்தரவாதமளிக்கும் வேறொரு அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென வலியுறுத்த வேண்டும் இதுவரை அரசாங்கம் செய்த கொடுமைகளைப் பெண்கள் பொறுமையோடு அனுபவித்திருக்கின்றனர். இப்பொழுது அவர்கள் தங்களுக்குச் சம உரிமை கோரிப் போராட வேண்டியது அவசியமாகின்றது.

“மனித சமூகத்தின் வரலாறு ஆண்கள் பெண்களைத் திரும்பத் திரும்பப் புண்படுத்தி, வஞ்சித்து, பெண்களைக் கொடுங்கோல் ஆட்சிக்கு உட்படுத்தியதையே காட்டுகின்றது. இதற்கு ஆதாரமாக ஆண் பெண்ணுக்கு ஒட்டுரிமையை மறுத்திருக்கின்றாள். அவள் சம்மதமின்றி இயற்றப்பட்ட சட்டங்களுக்குக் கட்டுப்படுமாறு வற்புறுத்துகின்றாள். கீழ்த்தரமான ஆண்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகளைக்கூட அவளுக்கு அவன் கொடுக்கவில்லை. அவளுக்கு ஒட்டுரிமை மறுக்கப்பட்டதால், அவள் சார்பாகக் கருத்துக்களை எடுத்துரைக்க ஆளின்றி, எல்லா வகைகளிலும் அவளை அவன் நசுக்குகின்றான். அவளுக்குத் திருமணமானால், சமுதாயச் சட்டங்களைப் பொறுத்த வரையில் அவளை இறந்தவளாகவே கருதுகின்றான். அவளுடைய எல்லா சொத்துரிமைகளையும், அவள் ஈட்டும் ஊதியத்தின் மேலுள்ள உரிமைகளைக்கூட, அவன் பறித்துவிட்டான். ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை அவளைப் பொறுப்பற்றவளாக

ஆக்கியுள்ளான். அவள் கணவன் எந்தவிதமான தவறுகளையும் செய்யலாம். திருமண முறைப்படி அவள் கட்டாயமாகக் கணவனுக்குக் கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும். கணவனே எல்லா வகையிலும் அவளுக்கு முதலாளி என்று விதித்துள்ளான். சட்டம் அவனுக்கு அவள் மேல் அதிகாரம் செலுத்த உரிமை அளித்துள்ளது. திருமண விலக்கிலும், குழந்தைகளின் பாதுகாப்பிலும் பெண்களின் மகிழ்ச்சியைக் கருத்தில் கொள்ளாது அவனுக்கு மட்டும் எல்லா உரிமைகளும் கிடைக்குமாறு சட்டதிட்டங்களை வகுத்துள்ளான். ஒரு பெண் மணமாகாமல் இருந்தால் அவள் சொத்தின் மேல் வரிவிதித்து அதன் மூலம் அவளை அரசாங்கத்தை ஆதரிக்க வைத்திருக்கின்றான். எல்லாவிதமான உயர்வான தொழில்களையும் தனதென வைத்துக் கொண்டு, குறைந்த ஊதியம் அளிக்கும் வேலைகளுக்கு மட்டுமே அவளை அனுமதித்திருக்கின்றான். அவளுக்குக் கல்லூரிகளில் கிடைக்கும் கல்வியை மறுத்துள்ளான். சர்ச்சிலும் அரசாங்கத்திலும் கீழ்நிலைகளில் உள்ள தொழில்களில் மட்டுமே அவளை அனுமதித்துள்ளான். ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறான சமூக ஒழுக்க நியதிகளை வகுத்துள்ளான். அவள் சார்பாகச் செயற்பட வேண்டியதும் தானே என்று வகுத்துள்ளான். பெண்ணின் மன உறுதியையும், வலிமையையும், சுயகௌரவத்தையும் குறைக்க எல்லா விதமான வழிவகைகளையும் வகுத்து அவளைத் தன்னைச் சார்ந்து வாழவேண்டிய நிலைக்குக் கட்டாயப்படுத்தி வைத்துள்ளான்."

"அதனால் பெண்கள் அமெரிக்க நாட்டுக் குடிமக்கள் என்ற முறையில், எல்லாக் கடமைகளுக்கும் உரிமைகளுக்கும் உரியவர்களாகின்றனர். இதைச் செயற்படுத்த நாங்கள் எங்கள் சக்திக்கு உட்பட்ட எல்லா விதங்களிலும் செயற்படுவோம்."

"இயற்கையான சட்டதிட்டங்கள் கடவுளால் தீர்மானிக்கப் பட்டவை என்ற முறையில் அவை எல்லா வகைகளிலும் மேன்மையானவை. அவை உலகிலுள்ள எல்லா மனிதர்களுக்கும் எல்லா கால கட்டங்களுக்கும் பொதுவானவை. இதற்கு மாறாக உள்ள எந்தச் சட்டமும் உண்மைக்குப் புறம்பானதாகும். அதனால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் இயற்றப்படுகின்றன.

பெண்களின் மகிழ்ச்சிக்கு எதிராக உள்ள எந்தச் சட்டமும் இயற்கைக்கும், உண்மைக்கும் மாறானதாகும். அதே போன்று அவளைத் தாழ்நிலையில் வைக்கும் சட்டங்களும், அவள் மனம் விரும்பியபடி சமூகத்தில் எந்த நிலையையும் அடைய முடியாமல் தடுக்கும் சட்டங்களும், இயற்கைக்கு மாறானவையாகும். அதனால் அவைகளுக்கு அதிகாரம் கிடையாது. பெண் ஆணுக்குச் சமமாகவும் மனித சமுதாயத்தின் மேன்மைக்காகவும் படைக்கப்பட்டுள்ளாள். அதனால் அவள் அவ்வாறே மதிக்கப்பட வேண்டும். பெண்களைக் கட்டுப்படுத்தும் எல்லா சட்டங்களும் அவளுக்கு உணர்த்தப்படுதல் வேண்டும். அவள் தன் நிலைகுறித்து திருப்தியுடன் இருக்கிறாள் என்று தன்னைத் தாழ்வுபடுத்திக் கொண்டோ, அவள் எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிறாள் என்ற அறியாமையையோ வெளிப்படுத்துதல் கூடாது. ஆண் பெண்ணை மதக்கூட்டங்களில் பேசவும், கற்பிக்கவும் ஊக்குவிக்க வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரேவிதமான நற்குணங்களும், நன்நடத்தைகளும் வேண்டும். அதை மீறுபவர்களுக்கு ஒரே விதமான தண்டனைகள் அளிக்கப்பட வேண்டும். பெண்கள் பொதுக்கூட்டங்களிலும், நிகழ்ச்சிகளிலும், பங்கு கொள்ளும் பொழுது அவர்களது தோற்றத்திற்கு முக்கியமளிப்பது கண்டிக்கப்படுகின்றது. அவள் வாழ்வின் எல்லைகள் விரிவாக்கப்பட வேண்டும். பெண் ஒட்டுரிமை பெற வேண்டும். மனித சம உரிமை எல்லா இன மக்களுக்கும் ஒரேவிதமான திறமைகளும், பொறுப்புகளும் உள்ளன என்பதை அடிப்படையாகக் கொண்டது. ஆணும் பெண்ணும் கடவுளால் ஒரேவிதமாகப் படைக்கப்பட்டவர்கள். பெண் ஆணுக்குச் சமமான உரிமைகளையும் கடமைகளையும் பெற வேண்டும். இதற்கு எதிரானவை எல்லாம் மனிதனுக்கு எதிரானவை என்றும் தீர்மானிக்கின்றோம். இந்த வெற்றியை ஆணும் பெண்ணும் சேர்ந்து உழைத்துப் பெற்று இருவரும் எல்லா நிலைகளிலும் பங்கு பெற வேண்டுமெனத் தீர்மானிக்கின்றோம்.

அமெரிக்கப் பெண்ணிய வரலாற்றில் பெண்ணியம் செனகா பால்ஸ் மாநாடு நடந்த 1848-ஆம் ஆண்டிலிருந்து, தொடங்கியதாகக் கருதப்படுகின்றது.

அடிமை ஒழிப்பு இயக்கம் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திலும் பரவியது. அங்கும் இவ்வியக்கம் தீவிரமடைந்தாலும் பெண்கள் அடிமை ஒழிப்பிற்காக நிதி திரட்டுவது, கையெழுத்து சேகரிப்பது போன்ற வேலைகளில் மட்டுமே ஈடுபட்டிருந்தனர். முக்கியமான நிர்வாக அலுவல்கள் அனைத்தையும் ஆண்களே செய்து வந்தனர். பெண்கள் ஆண்களுக்கு உதவியாக மட்டுமே செயற்பட்டனர். அதனால் 1848-இல் பெண்களுக்கு அடிமை ஒழிப்பு மகாநாட்டில் கலந்து கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டதும்கூட, இங்கிலாந்துப் பெண்களிடையே ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படவில்லை.

### 2.1.5 குவாக்கர்களின் பங்கு

புராட்டஸ்டண்டு மதத்தின் மற்றொரு பிரிவினரான குவாக்கர்களும் (Quakar) சமூக ஒழுக்கச் சீர்திருத்தங்களில் பங்கு கொண்டனர். பிற பிரிவினரோடு ஒப்பிடும்பொழுது, இப்பிரிவினர் பெண்களுக்கு அதிக சுதந்திரம் அளித்திருந்தனர். பெண்கள் பாதிரிகள் ஆகவும், பொதுக்கூட்டங்களில் பேசவும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இவர்கள் எவாஞ்சலிகர்கள் போன்று மதமாற்றத்தில் ஈடுபடவில்லை. குடியாமை இயக்கத்திலும், அடிமை ஒழிப்பு இயக்கத்திலும் இவர்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டு, 1848-இல் நடந்த அடிமை ஒ ழிப்பு மகாநாட்டில் பங்கு பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணி லுக்ரியா மோட் என்பவர் க்வாக்கர் பிரிவைச் சேர்ந்த பெண்மணி என்பதாகும். இதன் பிறகு நடந்த செனேகா பால்ஸ் பேரவையிலும், பெண்கள் ஒட்டுரிமை இயக்கத்திலும் குவாக்கர் பிரிவுப் பெண்கள் தீவிரமாகப் பங்கேற்றனர்.

அமெரிக்காவுடன் ஒப்பிடும்பொழுது குவாக்கர்களின் பங்கு இங்கிலாந்தில் குறைவாகவே இருந்தது.

### 2.1.6 யுனிடேரியன்களின் பங்கு

புராட்டஸ்டாண்டு மதத்தின் இன்னொரு பிரிவினர் யுனிடேரியன்கள் ஆவர். இவர்கள் பகுத்தறிவுவாதம், சுதந்திரம், இயற்கை

உரிமை இவற்றில் நம்பிக்கை கொண்டவர்கள். ஒரு மனிதன் இவ்வுலகில் வாழும் வாழ்க்கை முழுவதும் முன்பே கடவுளால் தீர்மானிக்கப்பட்டது என்ற கருத்தை இவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இப்பிரிவினரின் குடும்பங்களில் பெண்களுக்குக் கல்வியளிக்கப்பட்டது. அதனால் ஆரம்ப காலப் பெண்ணியவாதிகளில் பலர் யுனிடேரியன்களாக இருந்தனர். இவர்கள் அமெரிக்கப் புரட்சியின் பொழுது முக்கிய பங்கேற்றனர். பின்பு எவாஞ்சலிசர்களும் தீவிரமாக ஈடுபட்டனர்.

அமெரிக்காவைவிட இங்கிலாந்தில் இவ்வியக்கத்தில் யுனிடேரியன்களின் பங்கு அதிகமானதாகும். மேரி உல்ஸ்டோன் கிராப்ட் ஒரு யுனிடேரியன். யுனிடேரியன்களால் நடத்தப்பட்ட மாதக் களஞ்சியம் (Monthly Repository) என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியர் வில்லியம் பாக்ஸ் (William Fox) என்பவர் பெண்கள் வாக்குரிமையை ஆதரித்து 1832-ஆம் வருடமே ஒரு கட்டுரை எழுதினார். ஹாரியட் டைலர் (Harriet Tylor) என்பவரது பெண்ணுரிமை பற்றிய கருத்துக்களை, அவர் கணவர் ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) என்பவர் பெண்ணடிமை (The Subjection of Women) என்ற கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தினார். இவரது கருத்துப்படி பெண்களின் உரிமை என்பது, ஒரு சமூக வரலாற்றில், அச்சமூகம் அதிகாரத்தின் ஆட்சியில் இருந்து பகுத்தறிவின் ஆட்சிக்கு மாறும் மாற்றத்தின் ஒரு அம்சமாகும். இதில் அவர் ஒரு குடும்பத்தில் கணவன் மனைவியின் மேல் காட்டும் அதிகாரத்தை ஒரு ஆண்டான் அடிமையை அடக்கியாளும் கொடுங்கோன்மைக்கு ஒப்பிடுகின்றார். அதனால் பெண்கள் விடுதலைக்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சி மக்கள் கொடுங்கோல் மன்னரது ஆட்சியிலிருந்து விடுபட எடுக்கப்படும் முயற்சிக்கு ஒப்பாகும் என்கிறார். இவரது கருத்துக்கள் பிற்காலத்தில் இங்கிலாந்தில் பெண்ணியத்திற்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டன. யுனிடேரியன்கள் நாடாளுமன்றச் சீர்திருத்தம், அடிமை ஒழிப்பு முதலியவற்றில் முக்கியப் பங்கேற்றனர். இங்கிலாந்தில் 1865-இல் பெண்ணியவாதிகளான பார்பரா லீ ஸ்மித் (Barbara Leigh Smith) பிஸ்லி பார்க்கர் (Bessie Parker) என்ற யுனிடேரியன் வகுப்பைச் சேர்ந்த இரு பெண்களும், மணமான

Selva Selvapriya Selvamani Selvamani Selvamani

பெண்களுக்குச் சொத்துரிமை கோரி ஒரு குழுவை அமைத்துச் செயலாற்றினர். 1858-இல் இவர்களால் நடத்தப்பட்ட ஆங்கிலேயப் பெண்கள் பத்திரிக்கை (British Women's Journal) பெண்கள் உரிமை பற்றிக் குரலெழுப்பியது. 1859-இல் பெண்களின் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கக் கோரி பெண்களின் வேலை வாய்ப்பினைப் பெருக்கும் குழு (Society for Promoting Employment of Women) என்ற சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, பெண் கல்வி வற்புறுத்தப்பட்டது. இவ்வாறான பெண்களின் நடவடிக்கைகளுக்கு லாங்கன் ப்ளேஸ் (Longan place) என்ற இடம் மையமாகச் செயற்பட்டது. பெண்கள் இதில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பிற்காலத்தில், 1860-களில் இவர்கள் பெண்களின் ஒட்டுரிமைக்காகப் போராடினர்.

இக்கால கட்டத்தில் சில பெண்ணியக் கருத்துக்கள் உருப்பெற்றன. அவை மிதவாத மற்றும் சோஷலிசக் கருத்துக்கள் என்னும் பிரிவுகளில் அடங்கும்.

### 2.1.7 மிதவாதக் கருத்துக்கள்

இரு வேறுபட்ட கருத்துக்கள் இக்காலகட்டப் பெண்ணியத்தில் இடம் பெற்றன. ஒன்று, ஆண்களும், பெண்களும் இயற்கையிலேயே வேறுபட்ட தன்மைகளை உடையவர்கள் என்பதாகும். மற்றொன்று, அவர்கள் ஒரே விதமான தன்மைகளை உடையவர்கள் என்பதாகும். பெண்கள் இயற்கைத் தன்மைகளில் ஆண்களினின்று வேறுபட்டவர்கள் என்ற கருத்துதான் பழங்காலம் முதல் கடைப்பிடிக்கப்பட்டு, பெண்களைத் தாழ்நிலையில் வைக்கவும் காரணமாக அமைந்தது. ஆயின், இதே கருத்து, பெண்கள் சில தன்மைகளில் ஆண்களின்று வேறுபட்டாலும், அத்தன்மைகள் ஆண்களின் தன்மைகளைவிட உயர்ந்தவை என்ற வாதத்திற்கும் வழிவகுத்தது. இக்கருத்தும் மதச்சார்பு பெற்றே விளங்கிற்று. இக்கருத்தே எவாஞ்சலிகப் பெண்களைப் பொதுவாழ்வில் ஈடுபட வைத்தது. இக்கோட்பாடு பெண்களின் பங்கு குடும்பம், குழந்தை வளர்ப்பு இவை தொடர்பாகவே இருக்க வேண்டுமென வற்புறுத்துகின்றது. இரண்டாவது கருத்தான சம வாதத்தின்படி ஆணும் பெண்ணும் ஒரே

வகையான தன்மைகளைக் கொண்டவர்கள் என்று கருதப்பட்டது. இவ்வாதத்தில் குடும்பம் பெண்களைச் சிறைப்படுத்தி நசுக்கும் சமூக அமைப்பாகக் கருதப்பட்டது. அதனால் இக்கருத்துக்களை ஆதரிக்கும் அறிஞர்கள் பெண்கள் வாழ்க்கை முன்னேற முடியாமல் தடுக்கும் குடும்பம் மாற்றப்பட வேண்டுமெனக் கருதினர்.

## 2.1.8 சோஷலிசக் கருத்துக்கள்

இவை தவிர, சோஷ்லிச சமூகத்தை நிறுவ விழைந்த சில முற்போக்குவாதிகள் அச்சமூகத்தில் பெண்களின் நிலை குறித்துத் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். அவர்களது கருத்துக்களில் மேற்குறிப்பிட்ட இருவகைக் கருத்துக்களும் இணைந்து காணப்பட்டன. அவர்கள் ஆணும் பெண்ணும் சமம் என்று கருதியதுடன் பெண்கள் சில வகைகளில் ஆண்களைவிட உயர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடுகின்றனர். செயிண்ட் சிமான் (Saint Semon), ராபர்ட் ஓவன் (Robert Owen), சார்லஸ் புரியர் (Charles Paurier), ஹெம்ப்ரி நாய்ஸ் (Humphrey Noyes) என்பவர்கள் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். இவற்றில் செயிண்ட் சிமானது கருத்துக்களும், சார்லஸ் புரியரது கருத்துக்களும் முக்கியமானவை.

செயிண்ட் சிமான் என்பவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு செல்வந்தர். அவர் பாட்டாளி மக்கள் அனைவருக்கும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டவர். அவ்வாறான சமூகத்தில் மக்கள் ஒரு புது மதத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென விரும்பினார். அம்மதம் பழைய கிருத்துவ மதத்திலிருந்து வேறுபட்டு, ஆனால் கிருத்துவ மதத்தின் முக்கியமான கோட்பாடான அன்பு என்னும் உணர்வின் அடிப்படையில் அமைய வேண்டுமென விரும்பினார். அவ்வாறு அமையும் ஏழைகளின் சமூகத்தில் அறிவும், அன்பும், படைத்த மக்களை உயர்நிலைகளில் அமர்த்த வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

சிமானது கருத்துக்களால் கவரப்பட்டவர்கள் சிமானிய சமுதாயங்களை நிறுவினர். பெண்கள் அன்பின் அடையாளமாகக் கருதப்பட்டதால் இச்சமுதாயங்களில் பெண்களுக்கு உயர்வான இடம் அளிக்கப்பட்டது. இச்சமுதாயங்கள் பெண்களுக்கு சமூகப்,

பொருளாதார, அரசியல் உயர்வை அளித்தன. இச்சமுதாயங்கள் ஒரு துணை மணவாழ்வையோ, மண வாழ்வையோ மறுக்கவில்லை. ஆயின், திருமணங்கள் பொருளாதார அடிப்படையிலோ, சமூக மதிப்பீடுகளின் அடிப்படையிலோ அமையக்கூடாதென வலியுறுத்தின. பெண்களின் சிந்திக்கும் திறனைச் சீர்செய்து, அவர்களை ஆண்களுக்குச் சமமாக விளங்கச் செய்ய வேண்டுமென வலியுறுத்தின.

சார்லஸ் புரியர் (1772 - 1832) என்பவரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவரது கருத்துக்கள் பெண்ணியக் கருத்துக்களுக்கும், பின்பு சோஷலிச வாதத்திற்கும் அடிப்படையாக அமைந்தன. இவர் பெண் இனத்தின் வரலாற்றை விளக்கி, புதிய சமூகம் எப்படி அமைய வேண்டுமென்றும் விளக்குகின்றார். அவர் கருத்துப்படி, வரலாறு மூன்று காலகட்டங்களில் அடங்கும். அவை விலங்காண்டிக் காலம் (Savagery), காட்டாண்டிக் காலம் (Barbarism), நாகரிகக் காலம் (Civilization) என்பவையாகும். மூன்றாவது காலத்தின் உள்ளே அடங்கியுள்ள கருப்பொருள் நான்காவது காலமாகிய இசைவு (Hormony) என்பதற்கு வழிவகுக்கும். அவர் கருத்துப்படி, முதல் கால கட்டத்தில் பெண்கள் ஆண்களுக்குச் சமமான மதிப்பைப் பெற்றிருந்தனர். இரண்டாவது காலகட்டத்தில் ஆண் நாயக சமூகம் அமைக்கப்பட்டு பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். மூன்றாவது நாகரிகக் காலத்தில், பெண்களின் நிலை இன்னும் தாழ்வுற்றது. ஆண்களின் பாலியல் சுதந்திரம் அதிகரித்துப் பெண்களின் பாலியல் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது. மனித வாழ்வு மேம்பட உணர்ச்சிகளே அடிப்படையாக வேண்டும்; பகுத்தறிவு அல்ல என்பது அவரது கருத்தாகும். தற்கால சமூகம் பாலுணர்ச்சியைக் கேவலமானது என்றும், காட்டுமிராண்டித் தனமானது என்றும் புரட்டல் பேசுகின்றது. ஆயின், காதல் என்று அழைக்கப்படும் உணர்ச்சியின் மூலம் பெண்களை அடிமைப்படுத்துகின்றது. தற்காலப் பெண்களுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய கொடுமை அவர்கள் தங்கள் நிலையை எதிர்ப்பின்றி ஒப்புக்கொள்வதாகும். அவர் கருத்துப்படி, ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அளக்கும் அளவுகோல் அச்சமூகத்தில் வாழும் பெண்களின் சுதந்திரமும், முன்னேற்றமுமேயாகும்.

பெண்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சமூகம் சீரழியும். பெண்களுக்கு உரிமைகள் அளிப்பதுதான் சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும். நான்காவது காலகட்டத்தில், பெண்கள் திருமணம் என்ற தளையில் கட்டுண்டுகிடக்க மாட்டார்கள். தனிக்குடும்பம் இருக்காது. சுதந்திரமான அன்பும், பொதுவான குழந்தை வளர்ப்பும் இருக்கும் என்று அவர் கருதினார்.

இத்தகைய கருத்துக்களை ஆதரித்துப் பின்பற்றுபவர்கள், முறையே செமானியன் சமுதாயம், ஒவன் சமுதாயம், புரியர் சமுதாயம், ஒனிடா சமுதாயம் என்பனவற்றை நிறுவி வாழ்ந்தனர். இவை அனைத்திற்கும் பொதுவான கொள்கை, ஆண்களும் பெண்களும் திருமண உறவின்றி விரும்பிய நபர்களுடன் பாலுறவு கொள்வதாகும். இவ்வாறான உறவுகளின் மூலம் பிறந்த குழந்தைகள் அச்சமுதாயங்களில் பொதுவாக வளர்க்கப்பட்டன. இச்சமுதாயங்களில் வாழ்ந்த ஆண்களும் பெண்களும் அவரவர் விரும்பிய வேலைகளைச் செய்ய முடிந்தது. இப்போக்கு வேலைகளில் ஆண் பெண் என்ற பாகுபாடுகளை நீக்கும் என்று கருதப்பட்டது. மேலும், இவ்வாறான வாழ்க்கை முறைகள் பெண்களைக் கடினமான வீட்டு வேலைகளைச் செய்யக் கட்டுப்படுத்தும் வாழ்க்கை முறையினின்றும் விடுவிக்கும் என்றும் கருதப்பட்டது. இச்சமுதாயங்கள் 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பிரபலமடைந்தன. இவை இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் தான் அதிகமாகக் காணப்பட்டன. இத்தகைய சமுதாயங்கள் அமெரிக்காவில் 16ம், இங்கிலாந்தில் 7ம் நிறுவப்பட்டன. இச்சமுதாயங்களின் அடிப்படையான கருத்துக்கள் பகுத்தறிவு வாதத்தின் தொடர்ச்சியாக வந்தவை. எனினும், இவை பாலின உறவுகள், சொத்துரிமை இவற்றில் கூட்டுறவு சமுதாயம் அமைக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்துக்களின் மூலம் ஆரம்பகாலப் பகுத்தறிவு வாதத்தினின்றும் வேறுபடுகின்றன. இச்சமுதாயங்கள் சிலகாலமே இயங்கின. எனினும், இக்கருத்துக்கள் பின்பு சோஷலிசவாதம் தீவிரமடைவதற்கும், பெண்ணியத்தின் புதிய கூறான தீவிரப்பெண்ணியம் 1960-களில் தோன்றுவதற்கும் அடிப்படையாக அமைந்தன. இச்சமுதாயங்களில் காணப்பட்ட சோஷலிசவாதம், அன்பினது புனிதத்தன்மை, எல்லா

உயிர்களிடத்தும் பாகுபாடின்றி அன்பு செலுத்துதல் போன்ற சமயச்சார்புடைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது.

ஆயினும், இச்சமுதாயங்கள் உச்சக்கட்டத்தில் இருந்த 1830-களில் கூட பெண்களின் நிலை குறித்து மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியம் வாய்ந்த கூறுகளான கூட்டு வாழ்வு, வேலையில் பாகுபாடின்மை இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் பொழுது, மார்க்சியத்தின் முக்கிய கோட்பாடான தனிநபர் சொத்துரிமையை அகற்றுதல் என்ற பொருளாதாரக் கோட்பாடு பின்னுக்குத் தள்ளப்படுகின்றது என்ற எதிர்ப்புவாதமாகும். இக்கருத்து வேறுபாடுகள் பின்பு 19-ஆம் நூற்றாண்டு முழுவதும் இங்கிலாந்தில் பரவிய தொழிற்சங்கங்களில் வெளிப்பட்டு நின்றன. ஆண் பெண் சமத்துவக் கோட்பாட்டிற்கு மாறாகச் சில சோஷலிசவாதிகள் பெண்கள் ஆண்களினின்றும் வேறுபட்ட இயல்புகளைக் கொண்டவர்கள் என்ற கருத்தையே ஆதரித்தனர். அதனால் பெண்களின் இயல்பு கம்யூனிச சமூகத்திற்கு எதிரானது என்றும் கருதினர். சிலர், பெண்கள் குறைந்த கல்வி அறிவோடு வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு, ஆண்களின் அதிகாரத்தின் கீழ் வாழ்க்கை நடத்த வேண்டுமெனக் கருதினர். வேறு சிலர் பெண்களின் காம இச்சையினின்றும் ஆண்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்தனர். இவ்வாறான கருத்துக்களால் சில சோஷலிசவாதிகள் பெண்ணியத்திற்கு எதிரிகளாகவும் இருந்தனர்.

செயிண்ட் சிமான், ராபர்ட் ஓவன், சார்லஸ் புரியர், ஜான் ஹம்ப்ரி நாய்ஸ் இவர்களது கருத்துக்களைத் தொடர்ந்து மார்க்ஸிசவாதம் தோன்றி வலுப்பெற்றது. இவற்றிலும் பெண்ணியம் இரண்டாவது நிலையிலேயே இருந்தது. மார்க்ஸிசத்தை நிலைநாட்டிய கார்ல் மார்க்ஸ் கம்யூனிச சமூகத்தைப் பற்றிப் பேசும் பொழுது பெண்களின் நிலையைப்பற்றி அதிகமாக ஒன்றும் குறிப்பிடவில்லை. இவரைவிட பெண்களின் நிலைபற்றி அதிகமாக ஆராய்ந்தவர் ஏங்கல்ஸ். அவர் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கும் பெண்களின் சீர்கேட்டிற்குமிடையே உள்ள நெருங்கிய

S. Selva mani



தொடர்பைப் பொருளாதார அடிப்படையில் ஆராய்கின்றார். பெண்களின் நிலை சீர்கேட்டைந்ததற்கு அவர்கள் சமூக உற்பத்தியினின்றும் விலக்கப்பட்டு, மனித மறு உற்பத்தியில் முடக்கப்பட்டதே காரணம் என்று காட்டுகின்றார். சமூகத்தில் திருமணங்கள் என்பது பெண்களை விலைக்கு வாங்கவும் விற்கவும் ஏற்பட்ட சந்தை என்பது அவர் கருத்து. அதனால் பெண்களின் விடுதலை அவர்கள் மனித மறுஉற்பத்தி, வீட்டு வேலை இவைகளினின்றும் விடுவிக்கப்பட்டு, சமூக உற்பத்தியில் பங்கேற்பதன் மூலமே நிகழ முடியும் என்றும் கூறுகின்றார். இது தனிநபர் சொத்துரிமையை அழிப்பதன் மூலமே நடைபெற முடியும். தனிநபர் சொத்துரிமை அழிக்கப்பட்டால் திருமண உறவுகள் பொருளாதார அடிப்படையிலன்றி, அன்பின் அடிப்படையில் அமையும் என்பது அவர் கருத்து. ஏங்கல்ஸ் திருமணமும் குடும்பமும் அழிக்கப்பட வேண்டுமென்று கூறவில்லை. அவை திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றே கூறினார். அதே போன்று பெண்களின் பழைமையான வேலைகளும் மாறுமென்று கூறவில்லை. இக்காலகட்டம் பெண்ணியத்தின் ஆரம்ப காலமாகக் கருதப்படுகின்றது.

### 2.1.9 முடிவுரை

வெளியுலகத் தொடர்பின்றி குடும்பத்திற்குள் வாழ்ந்துவந்த பெண்கள் கல்வி கற்றதன் பலனாகவும், தொழிற்புரட்சியின் பயனாகவும் வெளியுலக வாழ்வில் பங்கேற்க ஆரம்பித்தனர். அவர்களுக்குப் பெண்களின் வாழ்வில் இழைக்கப்பட்டு வரும் பாகுபாடுகளும், கொடுமைகளும் தெரியவந்தன. இக்கால கட்டத்தில் பெண்களின் நிலைபற்றி எழுந்த கருத்துக்கள், பிற்காலத்தில் மிதவாத, சோஷலிச, தீவிரப் பெண்ணியக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தன.

## 2.2 பெண்களுக்கு வாக்குரிமை

மிகவும் முன்னேற்றமடைந்த நாடுகள் எனக் கருதப்படும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பெண்கள் வாக்குரிமையைக்

கூடப் போராடித்தான் பெற வேண்டியிருந்தது. பெண்களின் வாக்குரிமை என்பது அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் பெண்ணிய இயக்கங்களின் முக்கியக் குறிக்கோளாக 1920 வரை இருந்தது. வாக்குரிமை மட்டுமின்றி, பெண்களுக்கான வேறு பல உரிமைகளையும் சட்ட பூர்வமாகப் பெற பெண்கள் போரட்டம் நடத்த வேண்டியது அவசியமாயிற்று. இது பெண்ணியத்தின் இரண்டாவது கட்டமாகும்.

அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்ற கோரிக்கை செனேகாபால்ஸ் பேரவையில் எலிசபெத் காடி ஸ்டான்டன் என்பவரால் கொண்டு வரப்பட்டது. ஆனால் அது தீர்மானமாக நிறைவேற்றப்படவில்லை. ஏனென்றில் பெண்களின் வாக்குரிமைக்கு முக்கியத்துவம் அளிப்பது பெண்களைப் பாதிக்கும் வேறு சில முக்கியமான பிரச்சனைகளான பெண்களுக்குச் சொத்துரிமை, குழந்தைகள் பாதுகாப்பு, ஆண் பெண் இருபாலருக்கும் இடையே வெவ்வேறான ஒழுக்க விதிமுறைகளை நீக்குதல் போன்ற முக்கியமான கோரிக்கைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிடும் என்ற அச்சம் நிலவியது.

வயது வந்த ஆண்கள் அனைவருக்கும் அமெரிக்காவில் வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவ்வுரிமை நீக்ரோக்களுக்கும், பெண்களுக்கும் மறுக்கப்பட்டிருந்தது. இவ்விருவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற உரிமைக்குரல் எழுப்பப்பட்டாலும் யாருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன. அடிமை ஒழிப்பு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட பலர் நீக்ரோக்களின் நிலைமை பெண்களின் நிலைமையைவிட மோசமானதென்றும், அதனால் இருவர் கோரிக்கைகளையும் இணைத்துப் போராடினால் நீக்ரோக்களின் வாக்குரிமையின் முக்கியத்துவம் குறைந்துவிடும் என்றும் கருதினர். இதனால் பெண்களுக்கு வாக்குரிமையைப் பெறுவதில் தீவிரமாக இருந்த சில பெண்ணியவாதிகள் தனித்துப் போராடுவது அவசியம் என்று கருதி சம உரிமைக்குழு (Equal Rights Association) என்ற அமைப்பை நிறுவினர்.

ஆயினும், அமெரிக்காவின் அரசியலமைப்பின் 75-வது திருத்தத்தில்கூட நிற அடிப்படையில் வாக்குரிமை மறுக்கப்படுவது சட்ட விரோதமாக்கப்பட்டதே அன்றி, பெண்களின் வாக்குரிமைக்கு அது இடமளிக்கவில்லை. அதனால் பெண்ணிய இயக்கங்கள் தேசீயப் பெண்கள் வாக்குரிமைக் கழகம் (National Women Suffrage Association), அமெரிக்கப் பெண்கள் வாக்குரிமைக் கழகம் (American Women Suffrage Association) என்ற அமைப்புக்களின் மூலமும், புரட்சி (The Revolution) என்ற பத்திரிகையின் வாயிலாகவும் பெண்கள் வாக்குரிமைக்காகப் பாடுபட வேண்டிய அவசியமேற்பட்டது. இதற்கு முக்கியமாகப் பாடுபட்டவர்கள் சூசன் அந்தோணியும் (Susan Anthony) எலிசபத் காடி ஷாண்டனும் ஆவர்.

1890-இல் அமெரிக்காவின் 18 நாடுகளில் முனிசிபல் தேர்தல்களிலும், பள்ளி நிர்வாக அமைப்பிற்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் வாக்களிக்கப் பெண்கள் உரிமை பெற்றனர். அமெரிக்காவின் மேற்பகுதியில் உள்ள நாடுகளில், பெண்களின் தீவிர முயற்சி இன்றியே அவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. அதற்குச் சில காரணங்கள் உண்டு. அமெரிக்காவின் மற்ற நாடுகளில், குறிப்பாகக் கிழக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் உள்ள நாடுகளைவிட மேற்குப் பகுதியில் உள்ள நாடுகளில், பெண்களின் எண்ணிக்கை குறைவு. அதனால் அப்பகுதியில் பெண்கள் நிரந்தரமாக வாழ அவர்களுக்குச் சமூக, அரசியல் உரிமைகள் அளிக்க வேண்டியது அவசியமாயிற்று. மேலும், அவ்வாறு உரிமைகள் அளிப்பது பெண்கள் அதிக அளவில் அங்கு வந்து வாழ்வதை ஊக்குவிக்கும் என்றும் கருதினர். இவை தவிர, பெண்கள் வாக்குரிமையைத் தீவிரமாக இப்பகுதியிலுள்ள ஆண்கள் எதிர்க்காததும் ஒரு காரணமாகும். அமெரிக்காவின் மேற்குப் பகுதி நாடுகளில் மக்கள் குடியேறத் தொடங்கிய நாட்களிலிருந்து, ஆண்களுடன் குடியேறிய பெண்கள் ஆண்களுக்குச் சமமாக உழைத்து முன்னேறினர். இது குறித்து அப்பகுதி ஆண்களிடையே பெண்களுக்குப் பெரு மதிப்பிருந்தது.

ஆனால் அமெரிக்காவின் ஏனைய நாடுகளில் பெண்களின் வாக்குரிமைக்கு எதிராகப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. ஆட்சியில்

இருந்த அரசியல்வாதிகள் பெண்களின் வாக்குரிமையை எதிர்த்ததும், பெண்குழுக்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகளும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படுவதற்குத் தடைகளாக இருந்தன. அதனால் 1890-ஆம் ஆண்டு முதல் பெண்கள் வாக்குரிமை இயக்கம் தீவிரமடையத் தொடங்கியது. அந்த ஆண்டு தேசிய அமெரிக்கப் பெண்கள் வாக்குரிமை இயக்கம் (National American Women Suffrage Movement) ஆரம்பிக்கப்பட்டது. இதே போன்று பெரும்பான்மையான அமெரிக்க நாடுகளில் பெண்களின் வாக்குரிமைக்காகப் பாடுபடும் குழுக்கள் தொடங்கப்பட்டன. 1910-இல் வர்ஜினியாவிலும், 1911-இல் கலிபோர்னியா மாவட்டத்திலும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. சோஷலிச இயக்கத்தைச் சேர்ந்த பெண்களும், தொழிலாள வர்க்கப் பெண்களின் நிலையை உயர்த்த வாக்குரிமை உதவுமெனக் கருதிப் பெண்களின் வாக்குரிமைக்கு ஆதரவளித்தனர். இதற்கு அமெரிக்காவின் தென்பகுதி நாடுகளில் எதிர்ப்பு இருந்தது. இதற்கு முக்கியக் காரணம் இப்பகுதியில் இருந்த பருத்தி ஆலைகள், பெண்களையும், குழந்தைகளையும் குறைந்த ஊதியத்திற்கு வேலைக்கமர்த்தி அதனால் பயன்பெற்று வந்ததேயாகும். பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பது அத்தொழில் நிறுவனங்களைப் பாதிக்குமென்று அவை கருதின. மிகுந்த ஆதரவுக்கும் எதிர்ப்பிற்கும் இடையே 1919-இல் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்திருத்தம் அமெரிக்காவில் கொண்டு வரப்பட்டது. ஆயினும் அது 1920-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தான் நிறைவேறியது.

இங்கிலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமையின் முக்கியத்துவத்தை 1830-ம் ஆண்டுகளிலேயே செயிண்ட் சிமானியன்களும், ஓவனைட்களும் உணர்ந்தனர். 1832-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தகுதி உள்ள, திருமணமாகாத பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கக்கோரி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். ஆனால் அமெரிக்காவைப் போலன்றி இங்கிலாந்தில் வயது வந்த எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படவில்லை. அச்சமயம் பெண்கள் வாக்குரிமை கோருவது எல்லா ஆண்களுக்கும் அவ்வுரிமை கிடைப்பதைத் தாமதப்படுத்தும் என்று கருதி

அக்கோரிக்கை நீக்கப்பட்டது. 1851-இல் ஆன்னி நைட் (Anne Knight) என்ற குவாக்கர் பெண்மணியின் முயற்சியால் ஷப்பீல் பெண்கள் வாக்குரிமைக்குழு ஆரம்பிக்கப்பட்டு, பெண்கள் வாக்குரிமை கோரும் கோரிக்கை பிரபுக்கள் சபைக்குக் (House of Nobles) கொண்டு வரப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமெனக்கோரி குவாக்கர்களும், யுனிடேரியன்களும், மிதவாதிகளும், சோஷலிசவாதிகளும் பாடுபட்டனர். பார்பரா லீ ஸ்மித் என்ற பெண்மணி பெண்களின் கல்வியையும், வேலை வாய்ப்புக்களையும் மேம்படுத்த 'லாங்கன் பிளேஸ்' என்ற அமைப்பை நிறுவினர். இவர் பின்பு பெண்களின் வாக்குரிமை இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார். 1867-ஆம் ஆண்டு இவர் பெண்களின் வாக்குரிமையை முன் வைத்து தேசியப் பெண்கள் வாக்குரிமைக்குழு (National Society for Women's Suffrage) என்ற அமைப்பை நிறுவினர். இவர்கள் அனைவரது முயற்சியாலும் பெண்களுக்கு வாக்குரிமைகோரி அரசியல் சபைக்குத் திரும்பத் திரும்பக் கொண்டு வரப்பட்ட மசோதாக்கள் தோல்வியுற்றன. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று, பெண்களில் சிலரே பெண்களின் வாக்குரிமையை ஆதரிக்கவில்லை. மற்றொரு காரணம், இங்கிலாந்தில் உள்ள இருபெரும் அரசியல் கட்சிகளுள் ஒன்றான லிபரல் கட்சியும் (Liberal Party) இதை ஆதரிக்கவில்லை. பெண்கள் பழமைவாதிகள் என்று அவர்கள் நம்பினர். அதனால் பெண்களுக்கு அளிக்கப்படும் வாக்குரிமை இங்கிலாந்தில் பழமையை விரும்பும் கட்சியான பழமைவாதக் கட்சி(Conservative Party)-க்குச் சாதகமாக அமையும் என்று அவர்கள் கருதினர். இங்கிலாந்தின் மற்றொரு அரசியல் கட்சியான தொழிற்கட்சி, (Labour Party) இங்கிலாந்தில் வாக்குரிமை, சொத்துரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டதால் சொத்துரிமை பெற்ற பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பது நாடாளுமன்றத்தில் சொத்துரிமை உடையவர்களது எண்ணிக்கையை அதிகரிக்கும்; அதனால் அது தொழிலாளர்கள் நலன்களுக்குக் கேடு விளைவிக்கும் எனக் கருதி, பெண்கள் வாக்குரிமையை எதிர்த்தது, பழமைவாதக் கட்சி மட்டுமே பெண்கள் வாக்குரிமையினால் தன் கட்சி பலனடையும் என்று நம்பியது.

1880-ஆம் ஆண்டுக்குப் பிறகு, பெண்களிடையே பெண்களது வாக்குரிமையின் முக்கியத்துவம் உணரப்பட்டதன் காரணமாகவும், தொழிற்கட்சி ஆங்கிலேய அரசியலில் பெற்ற முக்கியத்துவம் காரணமாகவும், பெண்கள் வாக்குரிமை இயக்கத்தில் முன்னேற்றம் உணரப்பட்டது. பெண் எழுத்தாளர்கள் ஓட்டுரிமை (Women Writer's Suffrage) அமைப்பு பெண்கள் வாக்குரிமைக்காகப் பாடுபட்டது. நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த, சோஷலிசத்தை ஆதரிக்கும் பெண்கள், பெண் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட்டனர். யுனிடேரியன்களும் இதில் பங்கு பெற்றனர். பெண்கள் வாக்குரிமையின் கோரிக்கை, பெண் தொழிலாளர்களின் வேலையுடனும், தொழிற்சங்க நடவடிக்கைகளுடனும் இணைக்கப்பட்டுப் பெண் தொழிலாளர் களிடையே இது பற்றிய விழிப்புணர்வு ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குப் பெண்கள் கூட்டுறவு இயக்கம் (Co-operative) தன் ஆதரவைத் தொடர்ந்து அளித்து வந்தது. பெண்களிடையேயும் பெண்களின் ஓட்டுரிமைக்கு ஆதரவாளர்கள் அதிகரித்தனர்.

ஆயினும், இம் முயற்சிகளுக்கு எதிரான கருத்துக்களும் நிலவின. தொழிலாளத் தலைவர்களிடையேகூடப் பெண்கள் வாக்குரிமை பற்றி எதிரிடையான கருத்துக்கள் நிலவின. பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்று ஒரு சாராரும், வேண்டாம் என்று மற்றொரு சாராரும், வயது வந்தவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்று ஒரு சாரர்ரும், சொத்துரிமை உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்று மற்றொரு சாராரும், மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தனர். 1918-ஆம் கொண்டு வரப்பட்ட சட்டத்தில், வயது வந்தோர் வாக்குரிமை ஆண்களுக்கும் பெண்களுக்கும் 30 வயதிற்கு மேற்பட்டு உள்ளாட்சி அமைப்புக்களில் தேர்ந்தெடுப்பவர்களாக (Local Government) இருப்பவர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புக்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மனைவியர்களுக்கும், பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கும் கொடுக்கப்பட்டது. இவ்விதம் உரிமை அளிக்கப்பட்டது முழு வெற்றியாகாவிட்டாலும் வெற்றியின் முதற்படியாகக் கருதப்பட்டது.

இதற்கு மாறாகப் பெண்களைப் பற்றி அவர்கள் 'அறிவிலிகள்' என்றும், 'நிலையற்ற எண்ணமுடையவர்கள்' என்றும், 'பழமைவாதிகள்' என்றும் நிலவிய கருத்துக்கள் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படுவதற்கு இடையூறாக அமைந்தன. மேலும், சொத்துரிமையுள்ள ஆண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் மனைவியருக்கும் வாக்குரிமை அளிப்பது ஒரே கருத்துள்ள மக்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் என்றும் மறுப்பு தெரிவிக்கப்பட்டது. பெண்கள் அரசியலில் புகுவது ஆண்களின் நிலைமைக்குப் பாதகமாகும் என்ற கருத்தும் கூறப்பட்டது. மேலும், சில பெண்ணியவாதிகள் திருமணமின்றி குழந்தை பெறுவதை ஆதரித்து வருவதால், பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பது இவ்வாறான முறைகேடுகளை ஆதரிப்பதாகும் என்று கூறிப் பெண்களின் வாக்குரிமையைச் சிலர் எதிர்த்தனர். இவ்வாறான எதிர்ப்புகளுக்கிடையில், 1928-ஆம் ஆண்டு தான் 21 வயது நிறைந்த ஆண்களும் பெண்களும் வாக்களிக்கும் உரிமை பெற்றனர்.

## 2.3 பெண்ணியத்தின் தேக்க நிலை

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் வயது வந்த பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டதிலிருந்து 1960 வரை உள்ள காலகட்டம் பெண்ணியத்தைப் பொருத்தவரை மந்தமான காலம் என்றே கூறலாம். 1920-ஆம் ஆண்டிலிருந்து 1930-ஆம் ஆண்டு வரை உள்ள காலகட்டத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் உள்ள மகளிர் இயக்கங்கள் வாக்குரிமை பெற்றதனால் பெண்களின் முன்னேற்றத்திற்கு இருந்த தடைகள் பெரும்பாலும் அகற்றப்பட்டுவிட்டன என மகிழ்ந்து அவை வேறு கோரிக்கைகள் எதையும் எழுப்பவில்லை, பெண்களும் வெற்றி கிடைத்தது எனக் கருதியதால், மகிழ்ச்சியில் தங்கள் பணிகளைத் தாய், தாரம் என்ற வட்டத்திற்குள் சுருக்கிக் கொண்டு செயலாற்ற முற்பட்டனர்.

### 2.3.1 வாக்குரிமை மட்டுமே தீர்வாகாது என உணர்ந்தமை

காலப்போக்கில் வாக்குரிமை என்பது பெண்களின் நிலையை முன்னேற்றப் பெருமளவு பயன்படவில்லை என்பது உணரப்பட்டது.

வாக்களித்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், கட்சிப் பணிகளில் பங்கு பெறுவதிலும் மட்டுமே பெண்கள் ஆர்வம் காட்டினர். பெண்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே மக்கட்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அமெரிக்காவில் 1958-இல் ஒன்பது பெண்களே தேர்ந்தெடுக்கப் பட்டனர். இங்கிலாந்தில் இந்த எண்ணிக்கை 14-ஆக இருந்தது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் முக்கிய தலைமைப் பொறுப்புக்கள் எதையும் வகிக்கவில்லை. சிற்சில பொறுப்புக்களில் இருந்தவர்களும் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடாமல் கட்சியின் குறிக்கோள்களுக்காக உழைப்பதிலேயே ஆர்வம் காட்டினர்.

இக்காலகட்டத்தில் இரண்டு விதமான விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றன. ஒன்று, பெண்களுக்குச் சமஉரிமை அளிப்பது; மற்றொன்று, பெண்கள் என்ற முறையில் பாதுகாப்பு உரிமை (Protective Legislation) அளிப்பது என்பதே அவை இரண்டுமாகும்.

### 2.3.2 சம உரிமையும் பாதுகாப்பு உரிமையும்

அமெரிக்காவில் பெண்கள் வாக்குரிமைக்காகப் போராடிய இருபெரும் இயக்கங்கள் பெண்கள் கட்சியும் (Women's Party) நவ்சாவும் (NAWSA) ஆகும். இவை, பெண்களுக்குக் கல்வியில் சம வாய்ப்பு, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியம், சட்டத்தில் சமஉரிமை, குழந்தைகளை வேலைக்கமர்த்துவதைத் தடை செய்தல் முதலிய குறிக்கோள்களை அடையப் போராடின. இவ்வாறு உரிமைகளைக் கோரும் பொழுது பெண்கள் நலிந்த பிரிவினர்; ஆதலால் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தின் அடிப்படையில் அவர்கள் அனுபவித்து வரும் சலுகைகளான விதவைகள் உதவித்தொகை, ஆதரவற்றோர் உதவித் தொகை, தொழிற்சாலைகளில் சில சலுகைகள் இவற்றை இழக்க நேரிடும் என்றும் அஞ்சினர்.

இங்கிலாந்தில் பெண்களின் முன்னேற்றத்தில் தொழிற் கட்சியும், பெண்கள் கூட்டுறவுக் குழுவும் முக்கிய பங்கு வகித்தன. ஆரம்பக் காலங்களில் சம உரிமையும், பெண்கள் நலனுக்காக

இயற்றப்படும் சட்டங்களும் எதிர்மாறான கொள்கைகளை உடையவை என்ற கருத்து எழவில்லை. பெண்கள் நலன் கருதிச் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. சில சட்டங்கள் பெண்களுக்கு ஆண்களுக்குச் சமமான உரிமைகளையும் அளித்தன. ஆயின், காலப்போக்கில் இவ்விரு கருத்துக்களுக்குமிடையே பிளவு ஏற்பட்டது. முக்கியமாகப் பெண் தொழிலாளிகள் சம உரிமை வாதத்தை ஏற்றுக்கொண்டால் ஆண், பெண் இருபாலரும் சமமான வேலைச் சூழல்களை, அவை பெண்களுக்கு ஒத்துவராத நிலையில் இருப்பினும், பகிர்ந்து கொள்ள வேண்டும் என அஞ்சினர். ஆனால் அவ்வாறான நிலையில் அவர்களுக்கு ஆண்களுக்குச் சமமான ஊதியம் கிடைக்கும். இதற்கு மாறாக, பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் இரவுவேலைகள், கடின வேலைகள் இவற்றிலிருந்து விலக்கு போன்ற நன்மைகள் கிடைக்கும். இவற்றை ஏற்றுக் கொண்டால் பெண்கள் குறைந்த ஊதியத்தில் கடைநிலைகளில் வேலை பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கும். பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டத்தை ஏற்பது என்பது ஆண்களும் பெண்களும் இயற்கையிலேயே மாறுபட்ட தன்மைகளை உடையவர்கள் என்ற கருத்தை ஒப்புக் கொள்வதாக அமையும் என்று கருதிப் பெண்ணியவாதிகள் பெண்கள் நலத்திட்டங்கள் தேவையில்லை என மறுத்தனர். இது குறித்து விவாதங்கள் பல நிலைகளில் திகழ்ந்து வந்தன.

இக்கால கட்டத்தில், மேலை நாடுகள், அதிலும் குறிப்பாக இங்கிலாந்தும், அமெரிக்காவும் உலகப் போர்களில் ஈடுபட்டன. அது அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையைப் பல்வேறு விதங்களில் பாதித்தது. இரு உலகப் போர்களிலும் அந்நாட்டு ஆண்கள் பெருமளவில் பங்கு பெற்றனர். அதனால் அதுவரை குடும்ப வாழ்வில் மட்டுமே ஈடுபட்டிருந்த பெண்களும் வெளியில் சென்று, பொருளீட்டி, குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாயினர். ஆயின், போர் முடிந்து ஆண்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிய பொழுது முன்பு பெண்கள் பார்த்துவந்த வேலைகளினின்றும் அவர்களை வெளியில் அனுப்பினர். இவ்வாறாகப் பெண்கள் அவசர காலத்துக்கு

உதவுமாறு தயார் நிலையில் வைக்கப்பட்ட வேலையாட்களைப் போன்று நடத்தப்பட்டனர். ஆயினும், பெண்கள் ஆண்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்; அவர்கள் திறமையற்றவர்கள்; வேலைக்குப் புதிதானவர்கள் என்ற கருத்துக்கள் வலிமைபெற்று நின்றதால் இந்நிலை நியாயமானதாகக் கருதப்பட்டது.

பொருளாதாரமந்தநிலை ஏற்படும்பொழுது உடல் உழைப்பை ஆதாரமாகக் கொண்ட வேலைகள் பெண்களுக்கு எளிதாகக் கிடைத்தன. அதனால் அவ்வேலைகளைப் பார்க்கும் பெண்கள் அதிகரித்தனர், அக்குடும்பங்களில் ஆண்கள் பெண்களை அதிகாரம் செய்வதைக் குறைத்துக் கொண்டு குடும்ப வேலைகளிலும் பெண்களுக்கு உதவி புரிந்தனர்.

### 2.3.3 பெண்கள் உற்பத்தியாளர்களாகவும் உபயோகிப்பவர்களாகவும் பயன்படுத்தப்பட்டமை

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்கா ஒரு பணக்கார நாடாக எழுச்சி பெற்றது 1940-களின் கடைசியில் அது செல்வத்தில் திளைத்தது. அங்கிருந்து வெளிவந்த பத்திரிகைகள் அமெரிக்க மக்களின் செல்வச் செழிப்புமிக்க குடும்ப வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டின.

1950-களில் இங்கிலாந்திலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு வாழ்க்கை வசதிகள் பெருகின. பாட்டாளி மக்களின் குடும்பங்களில் கணவனும் மனைவியும் வேலை பார்த்ததால் அவர்களின் வாழ்க்கைத்தரம் நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் போன்று உயர்வடைந்தது. இவ்வாறான மாற்றம் பிற்காலத்தில் வர்க்கப்பிரிவற்ற சமுதாயத்தை நிறுவ வழிகோலும் என்ற நம்பிக்கையை ஊட்டியது.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் ஒரு குடும்பத்தின் பொருளர்தார நிலை அக்குடும்பத்தாரின் சாதனையை உணர்த்தும் வெளிப்பாடாகக் கருதப்பட்டது. அதனால் பெண்கள் தங்கள் திறமையைக் காட்டி தனித்துவத்தை உணர்த்துவதே அவர்கள் வாழ்வின் குறிக்கோளாயிற்று. பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு,

உழைத்து, பொருளுற்பத்தி செய்து, அவ்வாறு உழைப்பின் மூலம் பெற்ற ஊதியத்தைக் கொண்டு பொருள்களை வாங்கி 'அனுபவிப்பதே' வாழ்க்கை முறையாயிற்று. இதனால் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களை விற்பதற்கு பெண்களையே சார்ந்திருந்தனர். கவர்ச்சிகரமான, வசதியான கடைப்பகுதிகள் உருவாயின. பொருட்களை வாங்குவது பெண்களுக்கு மகிழ்ச்சிகரமான வேலையாயிற்று. விளம்பரங்கள் பெண்களையே குறிக்கோளாகக் கொண்டு வெளிவந்தன. வீட்டு உபயோகப் பொருட்கள் அதிக அளவில் விளம்பரப்படுத்தப் பட்டன.

இதைத்தவிர, பொருட்களின் விற்பனைக்கும், விளம்பரங்களுக்கும் உற்பத்தியாளர்கள் பெண்களையும், அவர்கள் உடலழகையும் பயன்படுத்தினர். பாலியல் கவர்ச்சியும், பொருட்களின் கவர்ச்சியும் மக்களின் மனத்தில் குழப்பத்தை உருவாக்கின. இவ்வாறான வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கக் குடும்பத்தில் இரண்டாவது நபரும் வேலைக்குச் செல்வது அவசியம் என்ற சூழ்நிலை உருவாயிற்று. இதன் காரணமாக வேலைக்குச் சென்ற பெண்கள் சாதாரணமான பணிகளிலேயே உழைத்தனர். அவர்களின் வேலையில் மிகுந்த முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

### 2.3.4 பெண்களின் பாலியல் சுதந்திரம்

இந்தக் காலகட்டத்தில், பெண்களுக்குப் பாலியல் சுதந்திரமும் அதிகரித்தது. இதற்குக் காரணங்கள் பல. இரண்டு உலகப் போர்கள் நிகழ்ந்த காலங்களிலும் பெண்கள் வெளியுலக வாழ்வில் பங்குபெற்ற அனுபவம் அவர்களுக்குச் சுதந்திர உணர்வைக் கொடுத்தது. மேலும், அப்போர்களில் ஆண்கள் பங்கு பெற்று மடிந்ததால் மக்கள் தொகையில் பெண்களின் விகிதாசாரம் அதிகரித்தது. பல பெண்கள் சுயமாகத் தனித்து வாழ வேண்டியதாயிற்று. இதுவும் அவர்களுக்குச் சுதந்திர உணர்வை அளித்தது. இவை தவிர, பாலியல் பற்றிய அறிவு, உளவியல் கல்வி, மண உறவுகள் பற்றிய அறிவுரைகள், பெண்கள் தாங்களாகவே உபயோகிக்க முடிந்த கருத்தடைச் சாதனங்கள், மதத்தின் ஆதிக்கம் வாழ்க்கையில் குறைந்தமை இவை யாவும்

பெண்களின் வாழ்வில் பாலியல் கட்டுப்பாடுகளைத் தகர்க்கக் காரணமாயின. இவ்வாறான காரணங்களினால் இக்கால கட்டத்தில் 20 வயதடைந்த ஒரு பெண் தனது வாழ்வில் வயதானவர்களுக்குக் கிடைத்திருக்கும் அனுபவங்கள் அனைத்தையும் பெற்றிருந்தாள். அவள் காதலித்து, குழந்தையைப் பெற்று காதலனால் கைவிடவும் பட்டிருந்தாள். இவ்வாறாக, இக்காலக் கட்டம் பெண்களுக்குப் பாலியல் வாழ்க்கையில் அதிக சுதந்திரத்தை அளித்தது.

### 2.3.5 பெண்களின் தாரம் தாய் எனும் பங்குகள்

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் உலகப் போர் முடிந்து வீடு திரும்பிய வீரர்கள், அமைதியான குடும்ப வாழ்வை ஆவலோடு எதிர்நோக்கினர். பெண்களும் போர்க்காலத்தில் தங்கள் வாழ்வில் அனுபவித்த வாழ்வின் நிலையற்ற தன்மையைப் போக்கி, அமைதியான குடும்ப வாழ்வில் ஈடுபட ஆர்வம் கொண்டனர். பெண்கள் எவ்வளவுதான் கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பினும் அவர்கள் மணம் புரிந்து கொண்டு, குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு குடும்பப் பெண்களாக வாழ்க்கை நடத்துவதிலேயே அவர்கள் வாழ்வு நிறைவுபெறும் என்ற கருத்து இக்கால கட்டத்தில் மேலோங்கி நின்றது. இக்கருத்தை வலியுறுத்தி அதிக அளவில் கட்டுரைகளும், கதைகளும் வெளிவந்தன. அமைதியான குடும்ப வாழ்வே சீரான சமூக வாழ்விற்கு அடிப்படை எனக் கருதப்பட்டது. குழந்தைகளுக்கு அன்னையின் அன்பும் ஆதரவும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. அவற்றைப் பெறாத குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுவதற்குத் தாய்மார்களே காரணம் என்ற கருத்தும் மேலோங்கி நின்றது. 1947 முதல் 1957 வரை திருமணம் புரிந்து கொள்ளும் பெண்களின் விகிதம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அதிகரித்தது. பெண்களின் மண வயது குறைந்தது. அதிக அளவில் குழந்தை நலத்திட்டங்கள் அமுலுக்கு வந்தன. வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாயிற்று. பெண்கள் எவ்வளவுதான் கல்வி கற்றிருப்பினும் குடும்பவேலைகள் அனைத்தையும் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாயினர்.

இக்கால கட்டத்திற்குப் பிறகு, படிப்படியாகப், பெண்கள் திருமணம் புரிந்து கொள்ளும் வயது அதிகரித்தது. குழந்தைப்

பிறப்பு விகிதம் குறைந்தது. உலக வாழ்வின் இன்பங்களை அனுபவிப்பது வாழ்க்கையின் குறிக்கோளாயிற்று. பொருந்தாத திருமணங்கள் இதற்கு இடையூறு என்ற கொள்கை பரவிற்று. இதனால் மணமுறிவுகளும் அதிகரித்தன. இவ்வாறான மதிப்பீடுகள் பெற்றோர் குழந்தைகள் இவர்களுக்கிடையே நிலவி வந்த அன்புப் பிணைப்புகளைத் தளர்த்தின. புது பாலியல் உறவுகள் தேவை என்ற ஆர்வம் எழுந்தது. இது பெண்களுக்குப் புது வாழ்க்கை முறையைக் கொடுத்தது. குடும்பம், என்ற அமைப்புக்குள் சிக்கி, தாய்மை, குடும்பப் பொறுப்புக்கள் இவைகளால் அவதிப்படாது சுதந்திரமான வாழ்க்கை முறையை மேற்கொள்ள மாற்று ஏற்பாடுகள் என்ன என்பதைக் கண்டறியும் துடிப்பு ஏற்பட்டது. இது பெண் விடுதலை இயக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

### 2.3.6 பெண்களின் வாழ்க்கை வாய்ப்புக்கள்

கல்வியே தொழிலுக்கு ஆதாரமாகும். பெண்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியே அடிப்படை. இரண்டாம் உலகப் போரின் பொழுது அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஆரம்பக்கல்வி இலவசமாகக் கிடைத்தது. அமெரிக்காவில் 1920-களிலேயே கல்லூரியில் பயிலும் மாணவர்கள் தொகையில் பாதி பெண்களாக இருந்தனர். ஆயின், பின்னர், அச்சமுகங்களில் குடும்பம், தாரம், தாய் என்ற நிலைகளின் முக்கியத்துவம் மேலோங்கி நின்ற கால கட்டத்தில், கல்லூரி மாணவிகளின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. அமெரிக்காவில் இது 35 சதவிகிதமாகக் குறைந்தது. பாலின அடிப்படையில் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்படுவதைத் தடை செய்யும் சட்டம் இங்கிலாந்தில் 1919-லேயே கொண்டு வரப்பட்டது. ஆயினும், அவர்களுக்கு உயர் கல்வி கிடைப்பதில் அவர்கள் நாட்டுச் சமூகக் கலாசாரக் கூறுகள் தடையாக இருந்தன. அதனால் பிரிட்டனில் 1920-களில் கல்லூரி மாணவர்களில் ஐந்தில் ஒரு பங்குதான் மாணவியர் ஆவர். பொதுவாகக் கல்லூரிகளில் பெண்கள், பெண்களுக்கு உகந்தது எனக் கருதப்படும் கலை, இலக்கியம் போன்ற துறைகளையே தேர்ந்தெடுத்தனர். விஞ்ஞானம் போன்ற

துறைகள் ஆண்களுக்குரிய துறைகளாகக் கருதப்பட்டன. அதே போன்று பெண்களுக்கு உகந்த பணிகளெனக் கருதப்படும் ஆசிரியர் பணி, மருத்துவச் செவிலியர் பணி இவற்றிலேயே பெண்கள் அமர்த்தப்பட்டனர். கல்வித் தகுதியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த பணிகளில் அவர்கள் ஆண்களின் போட்டியை எதிர்நோக்க வேண்டியிருந்தது. வெகு சில பெண்களே உயர்கல்வி கற்று மேல் நிலைகளில் இருந்தனர். அவர்களும் ஆண்கள் பெறும் ஊதியத்தில் 60 அல்லது 70 சதவிகிதமே ஊதியமாகப் பெற்றனர்.

1950-க்கும் 60-க்கும் இடைப்பட்ட காலத்தில் கல்வியறிவு பெற்ற பெண்கள் தாங்கள் புரியும் பணிகளிலும், குடும்ப வாழ்விலும் பல இன்னல்களை அனுபவித்தனர். பழைய சமூக மதிப்புக்கள் மறைந்தன. புதிய சமூக மதிப்புக்கள் என்ன என்பது புரியாத நிலைமை நிலவிற்று. ஆயின், பெண்கள் தங்கள் வாழ்வில் அதிகாரம், வேலை, பாதுகாப்பு, பாலியல் உறவு இவைகளில் ஆண்களுடன் போட்டியிட்டே வாழவேண்டுமென்பது அவர்களுக்குத் தெளிவாகப் புரிந்தது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரும் மகளிர் அமைப்புக்கள் சமத்துவத்திற்காகப் போராடின. அவ்வாறான அமைப்புக்களில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பெண்களும் இருந்தனர். அமெரிக்காவில் தேசிய மகளிர் கட்சி (National Women's Party) தேசிய பணிபுரியும் பெண்களின் வியாபாரக் கூட்டு (National Federation of Professional Women's Business) போன்றவை அவற்றில் சிலவாகும். இங்கிலாந்தில் இதே போன்று பாசட்சொசைட்டி (Fawcett Society), பெண்களின் நிலைக்குழு (Status of Women's Group), பெண்களின் விடுதலைக் குழு (Women's Freedom League), தொழிற்கட்சி இவைகளும் பெண்களின் நலனுக்காகப் போராடின. ஆயின் இவற்றின் கூக்குரல்கள் அரசின் காதுகளில் எட்டவில்லை. இந்நிலை குறித்த அதிருப்தி பெண்களிடையே நிலவிற்று. சமூகத்தில் இதை முதலில் வெளிப்படுத்தியவர்கள் உயர் மட்டத்திலுள்ள பெண்களேயாவர். கல்வி நிலையில் மேம்பட்ட பெண்கள், தாழ்நிலையில் உள்ள பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளை அவர்களின் சார்பாக வெளிப்படுத்தினர். 1960-

களிலிருந்து அவர்கள் அரசாங்கம் பெண்கள் நிலையைச் சீர்திருத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென வாதாடினர். அக்கால கட்டத்தில் ஏற்பட்ட விவாதங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின.

### 2.3.7 முடிவுரை

பெண்மை எனும் இயல்பு என்ன என்பது ஆண்களால் வரையறை செய்யப்பட்டு 40 வருடங்களாக மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டும் வந்துள்ளது. கடைசியாக இவ்விழை அறுபட்டுப் போயிற்று. முதல் உலகப்போரும், ஓட்டுரிமைப் போராட்டமும் பெண்களின் நிலையில் மாறுதல்களை ஏற்படுத்தின. ஆயின், பொருளாதாரத் தேக்க நிலையும், இரண்டாம் உலகப்போரும் அவர்களின் பொருளாதார, அரசியல் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்தன. 1945-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர்கள் குடும்பம், தாய்மை, மனைவி என்ற கோட்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இது போர்க்காலத்தில் பழுதடைந்த சமூகத்தைத் திரும்பவும் நிலைநிறுத்தப் பயன்பட்டது. மேலும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யவும் பெண்கள் ஒரு கருவியாக்கப்பட்டனர். இதனால் மணமான பெண்கள் வேலைக்குச் சென்று பொருளீட்டுவது அவசியமாயிற்று. பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதில் சலிப்புற்றனர். கல்வி கற்ற பெண்கள் தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்த விரும்பினர். இது, 'பெண்கள் வீட்டு வேலைக்காகப் படைக்கப்பட்டவர்கள்; அவர்கள் குழந்தைகளைப் பெறும் இயந்திரங்கள்' என்ற கோட்பாட்டை உடைத்தெறிந்தது. இதனால் ஆண் பெண் பங்கு நிலைகள் விவாதத்திற்கு உள்ளாயின. பெண்கள் தங்களுக்கென்று தனித்துவத்தையும் உறவுகளின் மாற்றங்களையும் தேட முற்பட்டனர். பெண்கள் தாம் விரும்பிய துறைகளில் பரிமளிக்க ஆண்களின் ஆதிக்கம் தடையாக இருக்கின்றது என்பதையும் புரிந்து கொண்டனர். இது குறித்த விழிப்புணர்ச்சி இங்கிலாந்துப் பெண்களைவிட அதிகக் கல்வியறிவு பெற்று வெளியுலக அனுபவம் பெற்ற அமெரிக்கப் பெண்களிடம் அதிகமாக இருந்தது.

## 2.4 பெண் விடுதலை இயக்கம்

1960-ஆம் ஆண்டு முதல் 1980 வரை உள்ள கால கட்டம் பெண் விடுதலை இயக்கம் தோன்றி, வளர்ச்சியடைந்த காலமாகும்.

1928-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்ட பொழுது. அதுகுறித்து உரையாற்றிய ஸ்டான்லி பால்ட்வின் (Stanly Baldwin) என்பவர், "பெண்களின் அடிமைத்தனம் என்ற ஒன்று இருந்திருப்பின் அது சட்டத்தின் அடிப்படையில் நிகழாது. அதனால் சமூகத்தில் ஆண் பெண்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு அரசாங்கம்தான் காரணம் என்று பழி சுமத்த முடியாது. நம்முடன் சேர்ந்து பெண்களும் சம உரிமைகளை அனுபவிப்பர். அதனால் பெண்கள் போராடுவதற்குரிய காரணங்கள் அழிந்துவிட்டன" என்று கூறினார்.

ஆயின், இவ்வாறான எதிர்பார்ப்பிற்கு மாறாக, ஒட்டுரிமை கிடைத்து 50 வருடங்கள் கழித்து 1978-இல் பெண்ணியவாதிகள் லண்டனில் நடந்த ஒரு கூட்டத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தங்கள் கருத்தை, இவ்வாறு தெரிவித்தனர். "பெண்ணியம் ஆரம்பித்து 100 வருடங்களும் பெண்கள் வாக்குரிமை பெற்று 50 வருடங்களும் கடந்துவிட்டன. ஆயினும், நாம் இன்னும் சுதந்திரம் பெறவில்லை. பெண்கள் வாக்குரிமை பெற்றிருப்பினும், ஆண்களுக்குச் சமமான ஊதியம், கல்வி, வேலைவாய்ப்புக்கள் சட்ட சபையில் வாய்ப்புக்கள் இவைகளைப் பெறவில்லை. மேலும், சமூகம் பெண்களுக்குப் பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாப்பு, மற்றும் பல கொடுமைகளிலிருந்தும் விடுதலை, பால்சார் வேலைப் பங்கீடுகளை நீக்குதல், குடும்ப வேலைகளிலிருந்து விடுதலை இவைகளையும் அளிக்கத் தவறிவிட்டது" இவ்வாறான விழிப்புணர்வு, பெண்களின் அடிமை வாழ்க்கை குடும்பம், ஆண்நாயகக் கலாச்சாரம் இவற்றில் உறைந்து கிடக்கின்றது என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியது.

இந்நிலை குறித்து இரண்டு விதமான எதிர்ப்புக்கள் கிளம்பின. ஒன்று மிதவாத சமஉரிமைவாதம்; மற்றொன்ற தீவிரமானது.

ASURAN



### 2.4.1 பெட்டி ப்ரைடனும் (Betty Frieden) மிதவாதப் பெண்ணியத்தின் மறுபிறப்பும்

பெட்டி ப்ரைடன் தனது 'பெண்மையின் மாயை' (Feminine Mystigue) என்ற நூலின் மூலம் 1963-இல் அக்காலக் கட்டத்தில் அமெரிக்காவில் நிலவிய பெண்களின் நிலைமையை வெளிப்படுத்தினார். அவர் முதன்முதலாக அமெரிக்கப் பெண்களின் வாழ்வின் எதிர்காலக் கனவான 'திருப்திகரமான குடும்ப வாழ்க்கை' என்பதில் ஏற்பட்ட அதிருப்திகளையும், விரக்திகளையும் அழகாக எல்லோருக்கும் புரியும்படியாக எடுத்துக் கூறினார். ப்ரைடனே குடும்ப வாழ்வில் ஈடுபட்டுத் தாயாகவும், தாரமாகவும் செயலாற்றி, பெண்கள் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியவர். அவர் அக்காலக் கட்டத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், கதைகள், விளம்பரங்கள் முதலியவை இலட்சியப் பெண்களை எவ்வாறு சித்தரிக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினார். அவை அனைத்தும் பெண்களை இளமையும், குழந்தைத்தனமும், அடங்கிப் போகும் தன்மையும் உடையவர்களாகவும், படுக்கையறை, பாலியல் அறிவு, குழந்தை வளர்ப்பு இவற்றில் மட்டுமே திருப்தி கொள்பவர்களாகவும், ஆண்களைக் கவர்பவர்களாகவும், உணவு, உடை, அலங்காரச் சாதனங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இவற்றில் அமுந்திக் கிடப்பவர்களாகவும் சித்தரித்துக் கொண்டிருந்தன. இப்பெண்களுக்குக் கருத்துக்கள், மனம், உயிர் இவை பற்றிய எண்ணங்களே இல்லை என்பது மேற்குறிப்பிடப்பட்டவைகளின் மூலம் தெளிவாகின்றது. ப்ரைடன், சமூகவியல், உளவியல் வல்லுநர்கள், சாராசரிப் பெண்கள் இவர்களைப் பேட்டி கண்டதன் மூலம் பெண்களிடையே இவ்வாழ்க்கை முறை குறித்து மிகப்பெரிய அளவில் அதிருப்தி நிலவுகின்றது என்பதை உணர்ந்து கொண்டார். ஆனால் இதனைப் பெண்கள் வெளியிட முடியாதவாறு தவித்தனர். இந்நிலை அவர்களை மனஅழுத்தம் உள்ளவர்களாக ஆக்கிற்று. இதனை மறக்க, அப்பெண்கள் மருந்துகளையும், மதுவையும் நாடினர். இந்நிலைக்கு முக்கிய காரணம் ஆண் பெண் இரு பாலரின் குணங்கள் வேறுபட்டவை. அதனால் பாலின அடிப்படையில் சமூகத்தில் நிலவிய வேலைப் பங்கீடு சரியானது

என்ற தவறான கொள்கையாகும். இவ்வாறு இலட்சியப் பெண்களைப் பற்றி உருவாக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள், பெண்கள் மனிதர்களாக வளர்ந்து, மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூட அனுமதிக்கவில்லை என்பது அவர் கருத்து. மனித இனத்தின் அடிப்படைத்தேவை அவர்கள் ஆற்றல்கள் அனைத்தும் வெளிப்பட வேண்டுமென்பதாகும். சுயமதிப்பு என்பது ஒரு மனிதனின் உண்மையான இயல்பு. இது அறிவாற்றல், வெற்றி இவற்றின் அடிப்படையிலேயே அமையும். அவ்வாறு செயல்பட முடியாமல் எப்பொழுது ஒரு பெண் தடை செய்யப்படுகின்றாளோ அப்பொழுது அவள் நோயுற்றவளாகின்றாள்.

இந்நிலைமாற, பெண்கள் தங்களை அர்த்தமுள்ள வாழ்க்கைப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்; திருமணம், தாய்மை இவற்றுடன் வாழ்க்கைப் பணியினையும் இணைத்துச் செயலாற்றப் புதுவிதமான வாழ்க்கைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். இதற்கு சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று ப்ரைடன் தீர்வு கூறுகின்றார்.

'பெண்மையின் மாயை' என்ற இந்நூல் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்திற்று. 1970-இல் இந்நூல் 10 லட்சம் பிரதிகள் விற்பனையாயிற்று. பல பெண்கள் தங்கள் வாழ்வில் அனுபவித்துவந்த துயரத்தை பிரைடன் வெளிக்கொணர்ந்ததற்கு நன்றி தெரிவித்துக் கடிதங்கள் எழுதினர். இந்நூல் பெண்ணியத்தில் ஏற்படுத்திய விழிப்புணர்வு 'பெண்ணியத்தின் இரண்டாவது அலை' என அழைக்கப்படுகின்றது.

ப்ரைடன், பெண்கள் அனுபவிக்கும் பிரச்சனைகள், சமூகக்கலாசார, அரசியல் சம்பந்தப்பட்டவை எனக் கூறினார். இந்நிலையை மாற்ற சமுதாயப் புரட்சி ஏற்படவேண்டுமென விரும்பினார். பெண்கள் சமூக வாழ்வில் முழுமையாகப் பங்குபெறத் தடையாக இருக்கும் குறைபாடுகள் தகர்க்கப்பட வேண்டுமென விரும்பினார். இதற்காக தேசியப் பெண்கள் அமைப்பு (National Organisation for Women) தே.பெ.அ. (Now) என்ற அமைப்பை நிறுவி அதன் முதல்வராகப் பணி புரிந்தார்.

இதேபோன்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய மற்றொரு நூல் ஜெர்மன் கிரீர் (Germaine) எழுதிய 'சிறைவாச மனைவி' (Captive Wife) என்பதாகும்.

**2.4.1.1 தேசியப் பெண்கள் அமைப்பு (தே. பெ. அ.)**

தே.பெ.அ. என்பது 19-வது நூற்றாண்டில் ஆரம்பித்த, பெண்கள் முன்னேற்றம் கருதி, சமூக, அரசியல் உரிமைக் கோட்பாடுகளைப் புதுப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நிறுவப்பட்ட அமைப்பாகும். இது அமெரிக்கப் பெண்கள் சமூக வாழ்வில் ஆண்களுக்கிணையாகப் பங்கு பெற வேண்டுமென்ற நோக்கத்தில் செயல்பட்டது.

தே.பெ.அ.-ன் நோக்கம் இருவகைப்பட்டது. ஒன்று, தற்சமயம் சமூகத்தில் நிலவிவரும் பால் பாகுபாடுகளை அமுலிலிருக்கும் சட்டத்தின் துணையுடன் எதிர்ப்பது; இரண்டாவது, அமெரிக்க மக்களுக்குப் பெண்களுக்குரிய புதிய சமூகநிலைகள், பங்குப் பணிகள் இவை பற்றிய கருத்துக்களை உணர்த்துவதாகும்.

இவ்வமைப்பு பெண்களுக்கு அரசியல் சாசனத்தில் சம உரிமை, வேலைகளில் பாலினப் பாகுபாடுகளை நீக்கச் சட்டம், குழந்தைப்பேற்று விடுப்பு, சமூக நலத்திட்டங்கள், குழந்தைக்காப்பு நிலையங்கள், பெண்களுக்குச் சமமான கல்வி வாய்ப்புக்கள், ஏழை மக்களுக்கு வேலைப்பயிற்சி வாய்ப்புக்கள், பெண்கள் குழந்தைகள் பெற்றுக்கொள்வதைத் தாங்களே முடிவு செய்துகொள்ளும் உரிமை, பெண்களுக்குப் பாதுகாப்புச்சட்டம், மணமுறிவு, மதத்தில் சமஉரிமை முதலியவைகளை அரசு அளிக்க வேண்டும் எனவும், பெண்களை விளம்பரங்களில் உபயோகப்படுத்துவது, பெண்களுக்கு எதிரான கொடுமைகள் இவைகளை எதிர்க்க வேண்டுமெனவும் தீர்மானித்தது. இவ்வமைப்பின் முயற்சியால் 1967-ஆம் வருடம் அமெரிக்க ஜனாதிபதி ஜான்சன் 11375 -ஆவது ஆணையின் மூலம் அரசாங்க வேலைகளில் பால் பாகுபாடு காட்டக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்.

தே.பெ.அ. ஒரு மிதவாதப் பெண்ணிய இயக்கமாகச் செயற்பட்டது. இதைப் போன்று பல்வேறு பெண்ணிய இயக்கங்கள்

பெண்களின் உரிமைக்காகப் போராடின. அமெரிக்காவில் நிகழ்ந்ததைப் போன்று ஒன்றுசேர்ந்த பெண்ணிய அமைப்புக்களும், போராட்டங்களும் இங்கிலாந்தில் நிகழவில்லை. இங்கிலாந்தில் நடுத்தர வர்க்கப் பெண்கள் தங்கள் நிலைபற்றி பழமையான கருத்துக்களையே கொண்டிருந்தனர்.

## 2.4.2 தீவிரப் பெண்ணியத்தின் தோற்றம்

1960 முதல் உள்ள காலகட்டத்தில் தனிமனித சுதந்திரம் ஒன்றே வாழ்க்கையின் குறிக்கோளாக அமைந்தது. இக்கால இளைஞர்கள் தங்கள் காலத்தில் வழக்கிலிருந்த சமூக மதிப்புக்களை எதிர்த்தனர். போர்க்காலத்தில் அரசியல்வாதிகள் அவர்களுக்கு வாக்களித்திருந்தபடி அவர்களுக்குக் கிடைத்த பணக்கார வாழ்வையும்கூட எதிர்த்தனர். அதனால் இக்காலத்தில் பல்வேறுபட்ட நோக்கங்களைக் கொண்ட இயக்கங்களும், போராட்டங்களும் நிகழ்ந்தன. கறுப்பர் உரிமை இயக்கம் (Black Civil Rights Movement), கறுப்பராற்றல் இயக்கம் (The Black Power Movement), சமாதான இயக்கம் (Peace Movement), புதிய மார்க்சிய இடதுசாரி (New Marxist New Left), இளைஞர் எதிரிடை பண்பாடு (Youth Counter Culture), ஹிப்பி இயக்கம் (Hippi Movement) போன்றவை தீவிரமாகச் செயற்பட்டன. இவை அனைத்திலும் பெண்களும் பங்கு கொண்டனர்.

பெண்கள் இப்போராட்டத்தின் மூலம் பெற்ற சில அனுபவங்கள், ஆண்களிடமிருந்து பெண்கள் தனியாகப் பிரிந்து தீவிரமாகப் போராட வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கின. அமெரிக்காவில் கறுப்பு இன மக்களுக்கு அரசியல் சட்டத்தில் உரிமைகள் அளிக்க வேண்டுமெனக்கோரும் இயக்கத்தில் பெண்கள் பங்கு கொண்டனர். ஆயிரக்கணக்கான வெள்ளை இனக் கல்லூரி மாணவர்கள் கறுப்பு இன மக்களுடன் சேர்ந்து போராடினர். 1964-ஆம் ஆண்டு கறுப்பு இன மக்களுக்கு அவ்வுரிமைகள் கிடைத்தன. அதன்பின்பு அவர்கள் தங்களுடன் சேர்ந்து போராடிய வெள்ளை இனத்தவரைத் தூக்கி எறிந்துவிட்டனர். இப்போக்கு, இவ்வியக்கத்தில் ஈடுபட்டிருந்த பெண்களுக்குச் சில உண்மைகளை உணர்த்திற்று. அவற்றில் முக்கியமானது, மிதவாதத்தின் மூலம்

தமிழ் தலைவாசல்



பெறப்படும் சில சட்ட உரிமைகள் பெண்களின் வாழ்வில் உண்மையான உரிமைகளை அளிக்காது; மேலும் சமூகத்தில் சுரண்டப்படுபவர்கள் சுரண்டுபவர்களிடமிருந்து பிரிந்து செயற்பட்டே ஆக வேண்டும் என்பனவாகும். இவர்களின் கருத்துப்படி, தே.பெ.அ. நசுக்குபவர்களின் கைப்பாவையாகச் செயற்பட்டு வருகின்றது. வெள்ளை இன ஆண்கள் பெண்களுக்குச் சில சட்ட உரிமைகள் நடைமுறையில் செயற்படாவண்ணம் தடுத்து நிற்கின்றனர். இந்நிலை மாற சமூகத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் தேவை என்பதாகும்.

இதன் வெளிப்பாடாக மாணவர்களின் அஹிம்சை ஒருங்கிணைப்புக்குழு (Student Non-Violent Co-ordinating Committee) ஒன்று மாணவிகளிடையே ஆரம்பமாயிற்று. ஆயின், இக்குழுவின் செயற்பாடுகளில் அதன் உறுப்பினர்கள், கறுப்பு இனத்தவர்கள், பெண்கள், மூன்றாம் உலக நாட்டினர் இவர்களை நடத்தும் முறை சரியில்லை என்று மனம் வருந்தினர். 1964-ஆம் ஆண்டு இதன் ஒரு கூட்டத்தில் பெண்களைப் பற்றிய ஒரு கட்டுரையை வாசித்தளிக்க பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மற்றொரு மாணவர்கள் சங்கமாகிய மக்களாட்சியை நாடும் மாணவர்கள் சங்கத்திலும் (Students for a Democratic Society) பெண்களைப் பற்றிய பிரச்சனைகள் எழுப்பப்பட்ட பொழுது அதற்கான விளக்கங்கள் அளிக்கவில்லை. இவ்வாறு பல இடங்களில் ஏற்பட்ட கசப்புணர்வைப் பெண்கள் வெளிப்படுத்தினர். இடதுசாரிகளின் சிற்சில குழுக்கள் ஒன்று சேர்ந்து புது அரசியலை நாடும் தேசீய அமைப்பு (The Natioanl Conference for a New Politics) என்ற ஒன்றை ஏற்படுத்தின. இதிலும் 1967-ஆம் ஆண்டு ஷுலாமித் பயர்ஸ்டோன் (Shulamith Firestone) என்பவரும், ஜோ.ப்ரீமன் (Jo. Freeman) என்பவரும் பெண்கள் பிரச்சனைகள் பற்றிப் பேச முற்பட்டபொழுது இதே விதமான எதிர்ப்பு எழுந்தது. இதனால் சிகாகோ நகரில் மேற்குப் பக்கக் குழு (Westside Group) என்ற ஒன்றை ப்ரீமன் ஆரம்பித்து அதன் கொள்கைகளை பெண் விடுதலை இயக்கத்தின் குரல் (Voice of Women's Liberation Movement) என்பதன் மூலம் பரப்பினர். தீவிரப் பெண்கள் (Radical Women) என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.

இவ்வாறாகச் சிறிய குழுக்கள் ஆண்களின் அதிகாரப் போக்கை எதிர்த்துத் தோன்ற ஆரம்பித்தன.

1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி பழமைவாதப் பெண்மையின் சமாதி (Burial of Traditional Womenhood) என்ற ஒரு நிகழ்ச்சியைப் பெண்ணியவாதிகள் ஏற்பாடு செய்தனர். ஆயின் இதை ஒரு கேலிக்குரிய நிகழ்ச்சியாகப் பத்திரிக்கைகள் சித்தரித்தன.

1968-ஆம் ஆண்டு அமெரிக்கப் பெண்கள் அழகிப் போட்டி (Miss America) நியூசெர்சியில் உள்ள அட்லாண்டிக் நகரத்தில் நடைபெற்றபொழுது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பெண்ணியவாதிகள் பெண்களை அழகுபடுத்தும் சாதனங்கள், உள்ளாடைகள் முதலியவற்றைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதேபோன்று பெண்ணியவாதிகள் 1968-இல் ஆண்களை மட்டம் தட்டும் இயக்கம் (Society of Cutting up Man) என்ற அறிக்கையை வெளியிட்டனர்.

புது மார்க்சியவாதிகளும் (Neo Marxists) இப்போராட்டங்களில் கலந்து கொண்டாலும் அவர்கள் மார்க்சியத் தொடர்பின்றி பெண்ணியத்திற்கான தனிக் கொள்கைகளை வகுத்துக் கொள்ளவே விரும்பினர்.

இவ்வாறாக, 1969-க்குள் சுமார் 500 பெண் விடுதலை அமைப்புக்கள் தோன்றின. சில அரசியலிலும், சில தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவு தேடுவதிலும், சில கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் இவைகளில் பெண்ணியக் கோட்பாடுகளை உருவாக்குவதிலும் முனைந்தன.

1969-ஆம் ஆண்டு தீவிரப் பெண்ணியக் குழுக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தே.பெ.அ.-ல் உள்ளது போன்று பெண்களுக்காக 40 கோரிக்கைகளை வகுத்தன. அவற்றில் முக்கியமானவை ஆண்களுக்குச் சமமான கல்வி, வேலை வாய்ப்புகள், பெண்களுக்குக் கருக்கலைப்பு உரிமை, 24 மணி நேர குழந்தை பாதுகாப்பு நிலையங்கள், பெண்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்துவதைத் தடை செய்வது போன்றவைகளைக் குறித்தவை. இவை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டன.

இவ்வாறு, தீவிரப் பெண்ணியவாதிகள் ஆண்நாயக அமைப்பை எதிர்த்து விழிப்புணர்வை ஏற்படுத்த விட்ட அறைகூவல் மிகவும் தீவிரமானது. ஆண்நாயக அமைப்பினால் ஆண் பெண் இருபாலருக்கிடையே ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி வர்க்கம், இனம் இவற்றைவிட ஆழமானது.

### 2.4.3 இங்கிலாந்தில் பெண்ணுரிமையின் ஆரம்பம்

இங்கிலாந்தில் நடுவர்க்கப் பெண்கள் தங்கள் நிலை பற்றி பழமையான கருத்துக்களையே கொண்டிருந்தனர். ஆயின் இக்காலக் கட்டத்தில் இளைஞர்கள் கலாச்சாரம் என்ற புதிய அலை தோன்றியது. தீவிர சம உரிமைக் கூட்டுறவு இளைஞர் பண்பாடு (Ultra Democratic Co-operative Ethos of the Youth Culture) என்பது மேலை நாடுகளின் அதிகாரம், சுரண்டல் இவைகளை எதிர்த்ததுடன், அணு ஆயுதத் தயாரிப்பிற்கும் எதிர்ப்பு தெரிவித்தது. பின்பு, இது வியட்நாம் போரையும் எதிர்த்தது. மாணவர்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். இவற்றில் பெண்கள் அதிக அளவில் பங்கு பெற்றனர். தனி மனித சுதந்திரம் என்பது மிகவும் மதிப்புள்ள ஒன்றாகக் கருதப்பட்டது. மேலும் 1950 முதல் 1960 வரை பிராய்ட் எதிர்ப்பு உளவியல் பிரபலமாயிற்று. இது சுதந்திரமான பாலியலை ஆதரித்தது. இளைஞர்களிடையே பல எதிர்ப்புக்கள் தோன்றின. உதாரணமாக, ஹிப்பிக்கள், ஆண் பெண் வேற்றுமைகள், சமூகத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வேறுபட்ட பங்கு நிலைகள் முதலியவற்றை எதிர்த்தனர்.

அமெரிக்காவைப் போலன்றி இங்கிலாந்தில் ஆரம்ப கால முதலே பெண்ணியம் புரட்சிகரமான மார்க்சிய, சோஷலிசக் கருத்துக்களில் ஆரம்பமாயிற்று. ஆரம்ப காலப் பெண்ணியவாதிகள் 20 முதல் 35 வயதுடைய, கல்லூரிகளில் பயின்ற, அரசியல் ஈடுபாடுடைய பெண்கள் ஆவர். அவர்கள் கல்லூரியில் பயின்ற காலத்தில் மார்க்சிசம் தீவிரமடைந்திருந்தது. அப்பெண்கள் மார்க்சிச அனுதாபிகளாயிருந்தனர். அவர்கள் அதிகாரம், அந்நியப் படுத்தப்படுதல் இவைகளை வெறுப்பவர்கள். இங்கு பெண்களின் குறைகளை முதலில் வெளிக் கொணர்ந்தவர்கள் சமூகத்தின்

மேல்மட்டத்திலுள்ள பெண்களன்று; கூலி வேலை செய்யும் பெண்களே ஆவர். மார்க்சியத்தை ஆதரிக்கும் பெண்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டு, உழைக்கும் பெண்களின் நிலையை மேம்படுத்த முயற்சிகள் எடுத்துக் கொண்டனர். ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமஊதியம், குழந்தைகள் காப்பகம், விலைவாசிக் கட்டுப்பாடு, சமூக நலத்திட்டங்கள், இவற்றைக்கோரி அவர்கள் போராடினர். இவ்வமைப்புக்களில் ஆணாதிக்கம் அதிகமாக இருந்தது. அவர்கள் முதலாளித்துவத்தை எதிர்த்தது போன்று ஆணாதிக்கத்தை எதிர்க்கவில்லை. அதனால் அமெரிக்காவைப் போல் இங்கிலாந்தில் பெண்ணுரிமை இயக்கம் என்ற ஒன்று தீவிரமாகச் செயற்படவில்லை.

ஆயின், இங்கிலாந்து நாட்டுப் பெண்கள் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் செயற்பட்ட பெண்ணுரிமை இயக்கங்களைப் பற்றி அறிந்திருந்தனர். அகில உலக ட்ராட்ஸ்கிய மார்க்சியக் குழு (The Trotskyist International Marxist Group) என்பது பிரிட்டனில் பெண்ணுரிமைக்காக ஆரம்பிக்கப்பட்ட முதல் அமைப்பாகும். இதுவன்றி, தீவிரவாதக் குழுக்கள் இங்கும் அங்குமாகத் தோன்றின. இவை லண்டனில் நடந்த உலக அழகிப் போட்டி, இலட்சிய இல்லக் கண்காட்சி இவைகளை எதிர்த்தன. அமெரிக்காவைப் போல இங்கிலாந்தில் பெண்ணியப் போராட்டங்களுக்கு அவ்வளவு ஆதரவு இல்லை. பெண்கள் தேசிய ஒருங்கிணைப்புக்குழு (Women's National Co-ordinating Committee) என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு இது சம ஊதியம், சம கல்வி வாய்ப்புக்கள், இலவச கருத்தடைச் சாதனங்கள், தேவையான பொழுது கருச்சிதைவு செய்து கொள்ளும் உரிமை இவைகளுக்காகப் போராடியது. எனினும் பெரும்பாலும் பெண்ணியக் குழுக்கள் சிறுசிறு குழுக்களாகவே தோன்றி செயற்பட்டன. அவைகளிடம் பொருளாதார வசதியோ, செயற்படுத்தும் வழிமுறைகள் பற்றிய ஒழுங்கான திட்டங்களோ கிடையாது.

## 2.5 பெண்ணியத்தின் வளர்ச்சி

1970-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரை பெண்ணியம் பல்வேறு கோணங்களில் பரந்து வளர்ச்சி பெற்றது.

### 2.5.1 அமெரிக்காவில் பெண்ணியத்தின் வளர்ச்சி

அமெரிக்காவில் பெண் உரிமை இயக்கம் ஒரு தேசீய இயக்கமாகச் செயற்பட்டது. இதில் தேபெஅ: முக்கியப் பங்கேற்றது: இதன் உறுப்பினர்கள் அதிகரித்துக் கொண்டே இருந்தனர்.

1970-களிலிருந்து மிதவாத, சோஷலிச, தீவிரவாதப் பெண்ணியவாதிகளிடையே இருந்த பிளவுகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இவை இரண்டு பெரும் பிரிவுகளாகச் செயற்பட்டன. ஒன்று, மிதவாதப் பெண்ணியம்; இரண்டாவது, தீவிரவாத சோஷலிசப் பெண்ணியம். இவை தவிர, பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் குறித்துப் பல்வேறு பெண்கள் குழுக்கள் அமைக்கப்பட்டன. வேலை பார்க்கும் பெண்களின் நிலையை உயர்த்த, மணவிலக்கு குறித்த சட்டங்களைத் திருத்த, பெண்கள் அரசியலில் அதிக அளவில் பங்குபெற, கறுப்பு இனப்பெண்களின்; நிலையை உயர்த்த, இப்படிப் பெண்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தனித்தனி அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பெரும்பாலான அமெரிக்கப் பெண்கள் ஏதாவது ஒரு பெண்கள் அமைப்பில் உறுப்பினராக இருந்தனர். பெண்கள் அனைவருக்கும் பொதுவான சங்கம் இருக்கின்றதா என்பது பற்றி ஒருவரும் கவலை கொள்ளவில்லை. எனினும் பெண்களின் குரல்கள் உலகம் முழுவதும் பரவின.

பெண்களைப் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகள் சரியான முறையில் உலகிற்குப் படம் பிடித்துக் காட்டவில்லை. 1968-ஆம் ஆண்டு பெண் உரிமை இயக்கங்கள் உலக அழகிப் போட்டியை எதிர்த்ததைப் பத்திரிக்கைகள் தவறாகச் சித்தரித்தது இதற்கு ஒரு உதாரணமாகும். இதற்கு முக்கியக் காரணம் தகவல் தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் ஆண்களின் வசம் இருந்ததாகும். இவை பெண்களை ஆண்கள் பார்க்கும் கோணத்திலிருந்தே எந்த ஒரு நிகழ்ச்சியையும் விளக்கிவந்தன. இவை பெண்கள் வீட்டுப் பதுமைகளாக இருந்து கொண்டு, சமையல் வேலை செய்து கொண்டு, குடும்பத்தை நிர்வகித்து, குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ள

வேண்டும் என்ற கொள்கையையே வலியுறுத்தின. மேலும், இவை முதலாளித்துவ சமூகத்தில் உற்பத்தியான பொருட்களை விற்பதற்குப் பெண்களை வியாபார நோக்குடன் பயன்படுத்தின. இந்நிலைகளை மாற்றி, பெண்களைப்பற்றிய புதுக்கருத்துக்களைப் பரப்பி, அவர்களது வெளி உலகப் பங்கேற்பை ஆதரித்து, அவர்கள் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற கருத்துக்களை வலியுறுத்தும் நோக்கத்துடன் பத்திரிகைகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாயிற்று.

இந்நோக்கங்களோடு 1968-ஆம் ஆண்டு பெண் விடுதலை இயக்கக் குரல் (Voice of Women's Liberation Movement) என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. 1968-இல் தீவிரப் பெண்ணியக் கோட்பாடுகளைப் பரப்பும் முதலாண்டுக் குறிப்புகள் (Notes from the First Year) என்ற பத்திரிகையும், 1969-இல் சோஷலிசப் பத்திரிகையான பெண்கள் ஒரு விடுதலை இதழ் (Women: A Journal of Liberation) என்பதும் வெளிவந்தன. 1970-ஆம் ஆண்டு பெண்களின் வீடு (Ladies Home) என்ற பத்திரிகையில் பெண்கள் இதழொன்றை வெளியிடக்கோரி பெண்ணிய இயக்கங்கள் ஆர்ப்பாட்டம் செய்தன. அதே வருடம் எலி (Rat) என்ற பத்திரிகை பெண்கள் வசம் வந்தது. பின்பு நமது முதுகின் வெளியே (Off our Backs), நான் பெண் இல்லையா? (Arn't I a woman?), ஒவ்வொரு பெண்ணும் (Every Women), நான் இல்லை மகளே (It Arn't me Babe), இன்றைய பெண்கள் (Women Today), பெண்கள் பேசினார்கள் (Spokes Women), எம்.எஸ். (MS) எனும் பத்திரிகைகளும் வெளிவந்தன. கல்விப் பத்திரிகைகளான தேடல் (Quest), குறியீடு (Sign) முதலியவைகளும் 1975-ஆம் ஆண்டு வெளிவந்தன. பெண்களின் பதிப்பகமான மகளின் டயானா அச்சகம் (Daughter's Inc Diana Press), பெண்ணிய அச்சகம் (Feminist Press) முதலியவைகளும் பிரபலமாயின.

இப்பத்திரிகைகள் பெண்களுக்கு அரசியலில் விழிப்புணர்வை உண்டாக்கின. இவை பல்வேறுபட்ட பெண்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்தின. வீட்டு வேலைக்கு மனைவிக்கு ஊதியம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை எடுத்துக்கூறின. இதேபோன்று 24 மணிநேர குழந்தைக் காப்பகம் தேவை என்பதையும் வலியுறுத்தின

கருக்கலைப்பு என்பது பெண்களின் உடல், உள்ளம், ஆரோக்கியம் அவள் உடலை உபயோகப்படுத்துவது இவை குறித்ததாகும். அதனால் இதில் முடிவு செய்ய வேண்டியவர்கள் பெண்களே என்னும் கருத்து பரவலாயிற்று. இப்பத்திரிகைகளின்மூலம் பாலியல் சுதந்திரமும், பாலுறவு பற்றிய அறிவும் வளர்ந்தது. இவற்றின் விளைவாகக் கருத்தடைச் சாதனங்கள் உபயோகத்திற்கு வந்தன. இவை பாலுறவில் பெண்களுக்கு அதிக சுதந்திரத்தை அளித்தன. ஆனால் பாலுறவு சுதந்திரம் பெண்களைவிட ஆண்களுக்கே அதிக நன்மைகளை அளிக்கின்றது என்பதும் உணர்த்தப்பட்டது. இரு பாலருக்கிடையே பாலுறவு கொள்வது, பெண்களுக்கிடையே பாலுறவு கொள்வது என்ற கொள்கைகளின் அடிப்படையில் பெண்ணியவாதிகள் பிளவுபட்டு நின்றனர். பெண்களுக்கிடையே பாலுறவு கொள்வது என்ற கொள்கையை தே.பெ. அ. ஒப்புக் கொள்ளவில்லை.இது பின்னர் பெண்உரிமைக் கூட்டங்களில் பெரும் பிரச்சனையாக வெடித்தது.

இப்பிரச்சனையை 1960-களில் சோஷலிச்ப் பெண்ணிய வாதிகளும், தீவிரப் பெண்ணியவாதிகளும் விவாதத்திற்கு உட்படுத்தினர். இது தவிர, மிதவாதப் பெண்ணியம் தே.பெ.அ. போன்ற சிறந்த அமைப்பைக் கொண்டு செயற்பட்டது. அவர்களும் இவ்விவாதத்தில் பங்கு கொண்டனர். ஆனால் சோஷலிசம் அமெரிக்காவில் பரவிய பொழுது அதற்கு எதிராக அமெரிக்காவில் நிலவிய கருத்துக்கள் சோஷலிசப் பெண்ணியத்தை மறுக்கக் காரணமாயின. 1975 களில் சோஷலிசப் பெண்ணியம் என்பதே அமெரிக்காவில் இருபெரும் பிரிவுகளாக அமைந்தது. தீவிரப் பெண்ணியவாதிகள் தங்கள் கொள்கைகளில் தீவிரமாக இருந்தனர். 1968-ஆம் ஆண்டிலிருந்து ஓரினக்கலவியம் பெண்ணியத்தில் புகுவதை பெட்டி `ப்ரைடன் போன்றோர் தடுத்து நிறுத்த முற்பட்டனர். ஆனால், தீவிரப் பெண்ணியவாதிகள் மிதவாதப் பெண்ணியவாதிகளை, 'சுயநலமிக்கவர்கள், அரசாங்கத்திற்குத் துணை போகின்றவர்கள், கல்வியில் மேம்பட்டுப் பணிபுரியும் பெண்களின் நலனில்` மட்டுமே அக்கறை கொண்டு செயற்படுகின்றவர்கள் என்று குற்றம் சாட்டினர். அதே குற்றச்

சாட்டுக்களைக் கறுப்பு இனப்பெண்களும் கூறினர். மிதவாதப் பெண்ணியம் தளர்வுற்றிருந்தாலும் அது எல்லோருக்கும் தெரிந்த அமைப்பாக, அவர்களுக்கென்ற வழிமுறைகளைத் திட்டமிட்டுச் செயலாற்றும் திறன் கொண்டதாக இருந்தது. கல்வி கற்று, பணிபுரியும், நடுத்தரவர்க்கப் பெண்கள் இதன் பெரும்பான்மையான அங்கத்தினர்களாக இருந்தனர் தீவிரப் பெண்ணியவாதிகள் சமூக மாற்றத்தை வேண்டி போராட்டங்களில் ஈடுபடினும் சிதறுண்ட அமைப்பாகவே செயற்பட்டனர்.

### 2.5.2 இங்கிலாந்தில் பெண்ணியம்

இக்காலகட்டத்தில் இங்கிலாந்திலும் பல்வேறுபட்ட நோக்கங்களுடன் பெண்ணியவாதிகள் சிறுசிறு அமைப்புக்களாகச் செயற்பட்டனர். அவர்களை ஒன்று திரட்டிச் செயற்பட வைப்பது கடினமாக செயலாக இருந்தது. ஆயினும், 'பெண்களின் தேசிய ஒருங்கிணைப்புக்குழு', என்ற ஒன்று எல்லாப் பெண்உரிமை இயக்கங்களையும் ஒருங்கிணைத்துச் செயற்பட வழிவகை செய்யும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது. அது அடுத்த வருடமே மறைந்துவிட்டது. ஆயின், தேசிய அளவில், சமவேலைக்குச் சம ஊதியம், கல்வியில் சம வாய்ப்பு, இலவச கருத்தடைச் சாதனங்களைப் பெறுவது, 24 மணிநேரக் குழந்தை காப்பகம் இவைகளைக் கோரிச் செயற்படுவது என எல்லாப் பெண்ணுரிமை இயக்கங்களும் முடிவு செய்தன.

பெண்களைத் தகவல் தொடர்பு சாதனங்களில் தவறாகப் பயன்படுத்துவதைச் சீரமைக்க பெண்களின் தகவல் தொடர்பு குழு (Women's Media Group) என்ற ஒரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. மேலும், திருகாணி (Shrew), மார்க்சிசப் பத்திரிகையான சோசலிசப் பெண் (Socialist Women), தனித்த முதுகெலும்பு (Spare Rib), பெண்களின் குரல் (Women's Voice), சிவப்பு விரிப்பு (Red Rag), பெண்களைப் பற்றிய அறிக்கை (Women's Report), கம்யூனிசப் பெண்கள் பத்திரிகையான இணைப்பு (Link), லெஸ்பியன் பத்திரிகையான (Sappho), பெண்கள் பேசுகிறார்கள் (Women Speaking), பெண்களின் போராட்டச் செய்தி (Women's Struggle

S. Jebamani.



News), ஸ்கார்லட் பெண்கள் (Scarlet Women), போன்ற பத்திரிகைகளும் தொடங்கப்பட்டன. இவை எல்லாம் பெண்கள் தங்களைப் புரிந்து கொள்ளவும், தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் உதவின. மகளிரியல் எனும் பெண்கள் பற்றிய கல்வித்துறை பிரபலமடைந்ததைத் தொடர்ந்து, அத்துறை தொடர்பான M.F., பெண்ணிய விமரிசனம் (Feminist Review) என்னும் நூல் முதலியவைகளும் வெளிவர ஆரம்பித்தன. ஜெர்மைன் க்ரீர் எழுதிய பெண்ணிய யூனக் (Female Enuch) 1970-களில் பிரபலமடைந்ததைத் தொடர்ந்து, இவ்வாறான நூல்களை வெளியிடுவதில் பதிப்பகங்கள் ஆர்வம் காட்டின. காட் மில்லட் (Kate Millet), ஷெய்லா ரோ போதம் (Shella Row Botham) போன்றவர்களது படைப்புக்கள் மலிவுப்பதிப்புக்களாக வெளிவந்தன. பின்பு, பெண்களே பதிப்பகங்களைத் தொடங்கி நடத்த ஆரம்பித்தனர்.

இவ்வாறாகப் பத்திரிகைகளின் மூலமும், ஆர்ப்பாட்டங்களின் மூலமும் பெண்ணியவாதிகள் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்தனர். 1970-இல் நடந்த உலக அழகிப் போட்டிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். பெண்ணிய இயக்கங்கள் பெண் தொழிலாளர்களின் பிரச்சனைகளை வெளிக் கொண்டு வந்தன. இதனால் பெண்ணிய இயக்கங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்குமிடையே நட்புறவு நிலவியது. பொது உரிமை தேசிய குழு (The National Council for Civil Liberties) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அது பெண்களின் உரிமைக்காகப் போராடியது. சம ஊதியம், பெண்களின் உரிமைகள் இவைகளைப் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டும் வெகுகாலமாக அமுலாக்கப் படாமையால் பெண்ணிய இயக்கங்கள் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரப் போராடின. இவை தவிர, பெண்ணிய இயக்கங்கள் பெண்கள் தங்கள் பொருளாதாரத் தேவைகளுக்காகக் கணவர்களைச் சார்ந்திருக்கும் நிலை மாறி, பெண்களுக்குத் தனியாக பொருளாதார உதவிகளும், உரிமைகளும் கிடைக்கப் போராடின. இவ்வியக்கம் 1975-இல் ஆரம்பித்ததைத் தொடர்ந்து பெண்களுக்கு மேலும் சில உரிமைகள் கிடைக்க ஆரம்பித்தன. மேலும், பெண்கள்

தங்கள் குடும்பத்தில் வீட்டு வேலைகளைச் செய்வதற்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டுமெனவும், 24 மணிநேர குழந்தைக் காப்பகங்கள் தேவை எனவும், பெண்களுக்குக் கருக்கலைப்புச் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டுமெனவும் இவ்வியக்கங்கள் போராடின.

அமெரிக்காவைப் போன்று இங்கிலாந்திலும் ஓரினக்கலவி கொள்வது குறித்து பெண்ணிய இயக்கங்களிடையே கருத்து வேறுபாடு நிலவியது. 1975-76-களில் ஓரினக்கலவிப் பெண்களின் கருத்தரங்குகள் நடைபெற்றபொழுது அப்பெண்களை ஆண்கள் தாக்கினர். இது பெண்ணியவாதிகளின் கோபத்தைத் தூண்டியது.

இங்கிலாந்தில் முதலில் சோஷலிஸ்டுகளுக்கும் மிதவாதிகளுக்குமிடையே பெண்களின் நிலை குறித்து கருத்து வேறுபாடுகள் நிலவின. பின்பு தீவிரப் பெண்ணிய வாதிகளின் குழுக்களுக்கிடையே வேற்றுமைகள் எழுந்தன. 1975-1978-களில் பாலியல், இதன் மூலம் பெண்கள் சுரண்டப்படுதல் இவை பற்றிய விவாதங்களே மேலோங்கி நின்றன. ஆரம்ப காலங்களில் ஓரினக் கலவிக்குப் பெண்ணியத்தில் மதிப்பு இல்லை. எனினும், காலப் போக்கில் அவர்களின் நிலை பெண்ணியத்தில் உறுதியாயிற்று. இது சோஷலிசப் பெண்ணியவாதிகளின் பங்கைக் குறைத்தது. இதனால் ஏற்பட்ட முக்கிய மாற்றம் பெண்ணியம் பொருளாதார சமத்துவக் கொள்கைகளினின்றும் விலகி, 'ஆண்களிடமிருந்து விடுதலை பெறுவது' ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. ஓரினக்கலவி கொள்பவர்கள் பெண்ணியத்தில் சிறுபான்மையோராக இருப்பினும், அவர்களுக்கு மற்ற பெண்களைவிட சில வகைகளில் அதிக வசதிகள் இருந்தன. அவர்களுக்குக் கணவன், குழந்தைகள் இவர்களைக் கவனிக்கும் பொறுப்பு இல்லை. அவர்களுடன் வசிக்கும் பெண்களும் பெண்ணியக் கோட்பாட்டில் ஈடுபாடு உடையவர்களாக இருந்ததால் அவர்கள் பெண்ணிய இயக்கங்களில் தீவிரமாகப் பங்கேற்க முடிந்தது. இதன் பின்னர், தீவிரப் புரட்சிகரப் பெண்ணியம் (Militant Revolutionary Feminism) என்ற அமைப்பு

ஏற்படுத்தப்பட்டு, இது ஆண்களின் அதிகாரத்தின்மீது தீவிரத் தாக்குதல் நடத்தியது. ஆண்களுடன் பாலுறவு வைத்துக் கொண்டு, அவர்கள் தரும் அதிகாரங்களையும் சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டு ஆண்களுடன் போராட முடியாது என்பது இவர்களது கருத்தாகும். அதனால் அவர்கள் எல்லாப் பெண்களும் ஆண்களுடன் பாலுறவு கொள்வதையும், ஆண்களுக்கு ஆதரவளிப்பதையும் நிறுத்திக் கொண்டு, ஒரு புரட்சிகரமான சமூக மாறுதலை ஏற்படுத்த வேண்டுமெனக் கருதினர். இவ்வாறாக, தீவிரப் பெண்ணியம் வலுப்பெற்றது. சோஷலிசப் பெண்ணியத்திலும் பாலியல் சுதந்திரம் முக்கியமான பிரச்சனையாயினும், அது அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகளிலிருந்து விலக வகைசெய்யக்கூடாதென அது விரும்பியது. ஆனால், சோஷலிசத்தில் ஆணாதிக்கத்தையும் முதலாளித்துவத்தையும் தொடர்புபடுத்தி ஒரு பெண்ணியக் கோட்பாட்டை உருவாக்க முடியாத நிலையில் சோஷலிசம் பெண்ணியத்திலிருந்து விலகிற்று.

## 2.6 பெண்ணியக் கோட்பாடுகள்

பெண்ணியம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை பெண்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்டும், சுரண்டப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும் வாழ்வதன் காரணங்களையும் அந்நிலையை மாற்ற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளையும், சமூகச் சீர்திருத்தவாதிகள் பல்வேறு காலகட்டங்களில் ஆராய்ந்திருப்பதைக் கண்டோம். இவர்களது கருத்துக்கள் 'பெண்ணியக் கோட்பாடுகள்' எனப்படும். இக்கோட்பாடுகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை மிதவாத, மார்க்சிச, சோஷலிச, தீவிரவாதப் பெண்ணியங்கள் எனப்படும். ஒவ்வொரு பிரிவும் பெண்களின் தாழ்நிலையின் காரணங்கள் பற்றியும், அக்காரணங்களை மாற்ற மேற்கொள்ள வேண்டிய வழி முறைகளைப் பற்றியும் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. மேலும், ஒவ்வொரு பிரிவும் காலப் போக்கில் தம் கருத்துக்களை மாற்றிக் கொண்டிருப்பதையும் காண முடிகின்றது.

### 2.6.1 மிதவாதப் பெண்ணியம்

#### 2.6.1.1 பெண்ணடிமையின் காரணங்கள்

பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் முதன் முதலாகத் தோன்றிய பெண்ணியக் கருத்துக்கள், மிதவாதப் பெண்ணியம் என்னும் பிரிவில் அடங்கும். பிரான்சு நாட்டில் உருப்பெற்ற சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை என்ற பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிப்படையாக அமைந்த கருத்துக்களும், அமெரிக்காவில் சுதந்திரம், தன்னாட்சி என்ற கருத்துக்கள் வலுப்பெற்றதன்மூலம் விளைந்த அமெரிக்கப் போரும், தனிமனிதனுக்குச் சுதந்திரமும், முக்கியத்துவமும் அளிக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தோன்றியவை. அவை, 'ஒவ்வொரு மனிதனுக்கும் சில பிறப்புரிமைகள் உள்ளன. அவை அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுதல் வேண்டும்' என வலியுறுத்தின. சுதந்திரம் என்ற மதிப்பு, எல்லா மதிப்புகளையும்விட மேலானது என்ற கருத்து அக்காலத்தில் மேலோங்கி நின்றது. ஆயின், இச்சுதந்திர எழுச்சி தோன்றிய ஆரம்ப காலத்தில் இவ்வுரிமைகள் அனைத்து மத, இன, வர்க்கத்தைச் சார்ந்த ஆண் மக்களுக்கு மட்டுமே தேவை என வலியுறுத்தப்பட்டது. இவை பெண்களுக்கும் தேவை என்று யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. இதற்குச் சில முக்கியக் காரணங்கள் இருந்தன. முதலாவது, பெண்கள் ஆண்களைவிட பகுத்தறிவுத் திறனில் குறைந்தவர்கள் என்ற கருத்து அக்கால மக்களிடையே நிலைத்திருந்தது. அதனால் அவர்கள் மனிதர்கள் என்ற தகுதியைப் பெறத் தகுதியற்றவர்கள் என்று அவர்கள் கருதினர். இரண்டாவது காரணம், பெண்கள் முதலில், 'பெண்கள்' என்ற மதிப்புக்களின் அடிப்படையில்தான் உணரப்படுகின்றனர். பின்புதான், 'மனிதர்கள்' என்ற அடிப்படையில் உணரப்படுகின்றனர். அதனால் பெண்கள் அவர்களுக்குரிய தனியான திறமைகளின் அடிப்படையில் உணரப்படவில்லை. ஆனால், ஆண்களைப் பொருத்த வரையில், அவர்கள் தங்கள் தகுதிகளின் அடிப்படையில் உணரப்படுகின்றனர். இவ்வாறான கருத்துக்களும், நம்பிக்கைகளும் பெண்களுக்குத் தனிமனித சுதந்திரம் தேவை என்று நினைப்பதற்கே இடங்கொடுக்காதவாறு தடை செய்தன.

Selva



மிதவாதப் பெண்ணியத்தில் மனிதர்களைப் பற்றிய இரண்டு கருத்துக்கள் முக்கியப் பங்கு வகித்தன. ஒன்று, காரண காரியங்களை ஆராய்ந்து பார்க்கும் திறமை; இரண்டாவது, தனிமனித சுதந்திரம். முதல் கருத்தின்படி பெண்களுக்கும் காரண காரியங்களை ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவுத்திறன் உள்ளது என்ற கருத்து மிதவாதப் பெண்ணியவாதிகளால் விவாதங்களின் மூலம் விளக்கப்பட்டது. இரண்டாவது, பெண்ணும் ஆணைப்போல் ஒரு தனி நபர் என்பதாகும். பெண் ஆணின் போகப்பொருள் அன்று என்ற கருத்தும் நிறுவப்பட்டது. அதனால் ஆணைச் சார்ந்து பெண் வாழும் நிலை மாறி, அவளுக்குத் தனிமனித உரிமைகளும், சுதந்திரமும் தேவை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறான சமூகச் சூழலில், ஆரம்பகால மிதவாதப் பெண்ணியவாதிகள் பெண்களுக்குத் தனிமனிதப் பிறப்புரிமைகளைக் கோரினர். இவர்கள், அக்கால கட்டங்களில் தீவிரமடைந்திருந்த சமத்துவம், மக்களாட்சி முதலிய தனிமனித சுதந்திரக் கருத்துக்களுக்கும், நடைமுறையில் பெண்கள் அடிமைகளாக எவ்வித சுதந்திரமுமின்றி நடத்தப்படுவதற்கும் இடையில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டினர். ஆரம்ப காலகட்டத்தில் 1792-இல் மேரி உல்ஸ்டோன் கிராப்ட் எழுதிய 'பெண்களின் உரிமைகளை நியாயப்படுத்துதல்', 1848-இல் செனாகாபால்ஸ் பேரவையின் அரசியலமைப்பு, 1869-இல் ஜான் ஸ்டூலட் மில்லின் படைப்பான 'பெண்கள் அடிமையைப் பற்றி' முதலிய படைப்புக்கள் இக்கருத்துக்களையே வலியுறுத்துகின்றன.

ஆரம்ப கால மிதவாதப் பெண்ணியவாதிகள் பெண்களின் முக்கியமான இடம் குடும்பமே என வலியுறுத்தினர். இவர்கள் ஆண் பெண் இருபாலருக்கிடையே வழக்கத்திலுள்ள வேலைப் பங்கீடுகளை எதிர்க்கவில்லை. ஆயின், இவ்விரண்டு வேலைகளுக்கிடையே உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாது; இரண்டும் சமமாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

### 2.6.1.2 பெண்கள் முன்னேற்ற வழிமுறைகள்

மிதவாதப் பெண்ணியவாதிகள் சமூகத்தில் பெண்கள் தாழ்நிலை அடைந்திருப்பதற்குச் சமூகத்தில் நிலவிவரும் சில

குறைபாடுகளே காரணம் என்று கருதினர். அதனால் அவற்றைச் சில சீர்திருத்தங்களின்மூலம் சரிசெய்துவிட முடியும் என்று நம்பினர். அவர்கள் கருத்துப்படி, இம்மாற்றங்களுக்குப் புரட்சிகள் எதுவும் தேவையில்லை. மேலும் புரட்சி என்பது தற்பொழுது சமூகத்தில் நிலவிவரும் சுதந்திரத்தையும் அழித்துவிடும் என்று அச்சமுற்றனர்.

பெண்களின் தாழ்நிலையை மாற்ற அவர்கள் காட்டிய வழிகள் சில. அவற்றில் முக்கியமானது, பெண்களுக்கு உரிமைகள் அளிக்க வகை செய்யும் சட்டச் சீர்திருத்தங்கள் ஆகும். ஏனெனில் பெண்ககளின் தாழ்நிலைக்கு அக்காலத்தில் அவர்களுக்கு உரிமையளிக்கும் வகையில் சட்டங்கள் கிடையாது. இவ்வாறான உரிமைகளில் முக்கியமாக அளிக்க வேண்டியது சொத்துரிமையும், பொது (Civil) உரிமையும் ஆகும். மேலும், திருமணம் என்பது கணவன் மனைவியருக்கிடையே உள்ள உடன்பாடாகக் கருதப்படல் வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். பெண்கள் தங்கள் உரிமைகளை உணருமாறு அவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டுமென்றும், பெண்களைப் பற்றி சமூகத்தில் நிலவும் தவறான கருத்துக்களை நீக்கி, அவர்களைப் பற்றிய நல்ல கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். இம்மாற்றங்களை அவர்கள் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது, பொது மக்களுக்குப் புதுக் கருத்துக்தளைக் கல்வியின் மூலமும், மக்கள் தொடர்புச் சாதனங்களின் மூலமும் பரப்புவது, சட்டத்தைப் பயன்படுத்துவது முதலிய வழிமுறைகளின் மூலம் கொண்டு வர முடியும் என்று நம்பினர். கற்பழிக்கப்பட்ட பெண்கள், கொடுமைகளுக்குள்ளான பெண்கள், அபலைகள் முதலியோருக்கு ஆதரவு இல்லங்களையும் அவர்கள் நடத்தினர். குழந்தைகள் காப்பகங்களும் செயற்பட்டன. ஒவ்வொரு ஆணும், பெண்ணும், தன்னை மேம்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் உயர வேண்டுமென்பது அவர்களது நோக்கமாகும்.

### 2.6.1.3 பிற்கால மிதவாதப் பெண்ணியம்

பிற்கால மிதவாதப் பெண்ணியவாதிகள் பெண்களின் நல்லியல்புகள் என்று சமூகம் சித்தரிக்கும் இயல்புகள் அவர்களை

வீட்டிற்குள் சிறைப்படுத்தி, அவர்களுடைய ஆற்றல்கள், உந்துதல்கள் இவைகள் வெளிப்படாதவாறு அடக்கி, அவர்களுடைய சுய மதிப்பைக் கெடுக்கின்றது என்று கருத்துத் தெரிவித்தனர். இதை அவர்கள் 'பெண்மை என்னும் மாயை' என அடித்துக் கூறினர். இந்நிலைமாறப் பெண்கள் தங்களை அர்த்தமுள்ள வாழ்க்கைப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், திருமணம், தாய்மை இவற்றுடன் வாழ்க்கைப் பணியையும் இணைத்துப் புதுவிதமான வாழ்க்கைத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் விரும்பினர். இது ஒரு பெண்ணின் முக்கியமான இடம் குடும்பமே என்ற ஆரம்பகாலப் பெண்ணியக் கருத்தினின்றும் வேறுபட்டு நிற்கின்றது.

### 2.6.1.4 மிதவாதப் பெண்ணியத்தின் குறைபாடுகள்

மிதவாதப் பெண்ணியம் ஒரு சீர்திருத்தவாதம். இது வர்க்க, இன, பால்சார்ந்த அடக்குமுறைகள் பெண் இனத்தை நசுக்குவதைப் பற்றி ஆராய முற்படவில்லை. மேலும், இது பெண் இனத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஆணாதிக்க மதிப்புகளை எதிர்ப்பதற்குப் பதிலாக, அவற்றை ஒப்புக் கொள்கின்றது. அதனால் பெண்களின் தாழ்மை நிலை பற்றிய சரியான விளக்கங்களைக் கொடுக்கத் தவறிவிட்டது.

### 2.6.2 மார்க்சியப் பெண்ணியம்

காரல் மார்க்ஸும், ஏங்கல்சும் கம்யூனிசக் கருத்துக்கள் பரவக் காரணமானவர்கள். மார்க்ஸின் கருத்துக்களை ஏஞ்சல்ஸ் 'குடும்பம், தனிச்சொத்துரிமை, அரசு இவற்றின் தோற்றம்' (Origin of the Family Private Property and the State) என்னும் நூலில் விளக்குகின்றார். இக்கருத்துக்கள் மார்க்சியப் பெண்ணியத்திற்கு அடிப்படையாக அமைந்தன.

### 2.6.2.1 பெண்ணடிமையின் காரணங்கள்

ஏங்கல்சின் கருத்துப்படி, பொருள் முதல்வாதக் கொள்கையின் அடிப்படையில் கூறப்படும் வரலாற்றில், சமுதாய வாழ்வின்

தேவைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் பொருளுற்பத்தியும், மனித மறு உற்பத்தியும் சமுதாயத்தின் வரலாற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகும். இந்த இரண்டு காரணிகளும் தொழிலாளர்களின் முன்னேற்ற நிலையுடனும், குடும்ப நிலையுடனும் சேர்ந்து வரலாற்றில் ஒரு கால கட்டத்தின் சமுதாய அமைப்பை உருவாக்குகின்றன. அவர் கருத்துப்படி, பெண்கள் குடும்பத்தின் மூலம் தாழ்நிலை அடைவதே முதன் முதலாக உருவாகின்றது. அதைத் தொடர்ந்து அடிமை வர்க்கம் தாழ்த்தப்படுவதும் நிகழ்கின்றது. இவை இரண்டும் தனிநபர் சொத்துரிமையின் தொடக்க விளைவுகள் ஆகும். அதனால் தனிநபர் சொத்துரிமை அழிக்கப்படுவதன் மூலம் பெண்களின் தாழ்நிலையும், அடிமை வர்க்கத்தின் தாழ்நிலையும் மறையும் என்பது அவர் கருத்து.

பெண்கள் தாழ்நிலை அடைந்த வரலாற்றை அவர் பின்வருமாறு விளக்குகின்றார். சமூகத்தின் ஆரம்பகால கட்டத்தில் தனிநபர் சொத்துரிமை கிடையாது. மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்து பலருடன் பாலுறவு கொண்டு மக்களைப் பெற்றெடுத்தனர். அதனால் ஒரு குழந்தைக்கு அதன் அன்னையைத்தான் அடையாளம் தெரியும். தந்தை யாரெனத் தெரியாது. இவ்வாறான சமூகங்களில் தாய்வழிச் சமூக அமைப்பு வழக்கிலிருந்தது. பெண்களுக்கு மதிப்பு இருந்தது. ஆண்களும் பெண்களும் செய்யும் வேலைகளில் உயர்வு தாழ்வு பாராட்டப் பெறவில்லை. பின்பு, தனிநபர் சொத்துக்கள் அதிகரிக்க, அதிகரிக்க, மனிதனுக்கு மற்ற மனிதர்களின் உழைப்பு தேவைப்பட்டது. இது மிருகங்களை வளர்க்கத் தொடங்கிய கால கட்டத்திலிருந்து ஆரம்பமாயிற்று. ஆணுக்குப் புதுவிதமான செல்வங்கள் சேர்ந்தன. இதை அவன் தனக்குப் பிறந்த குழந்தைகள் மட்டுமே வாரிசாக அடைய வேண்டுமென விரும்பினான். இதற்கு உதவியாக ஒரு பெண் ஒரு ஆணை மட்டுமே மணம் புரிந்து, அவனுக்குக் குழந்தைகள் பெற்றெடுக்குமாறு வலியுறுத்தினான். இந்தக் கட்டாயம் ஆண்களது வாழ்வில் இல்லை. இக்கட்டத்தில் தாய்வழிச் சமூகமுறை மாறி, தந்தைவழிச் சமூகமுறை ஆரம்பமாயிற்று. ஏஞ்சல்ஸ், இதனைச் சமூகத்தில் பெண் இனத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வி என விவரிக்கின்றார். பெண்,

வீட்டில் ஆணுக்கு அடிமையாக வேலை செய்துகொண்டு; அவனது உடற்ப்சிக்கு இரையாகிக், குழந்தை பெறும் இயந்திரமாக மட்டும் வாழத் தொடங்கினாள். இதனால் சரித்திரத்தில் முதல் வர்க்க நசுக்குதல், ஆண், பெண்ணை ஒரு நபர் மணத்தின் மூலம் கட்டுப்படுத்தியதன் மூலம்தான் ஆரம்பமாயிற்று என்கிறார் ஏங்கல்ஸ். பழங்காலக் கம்யூனிசக் குடும்பங்களில் பெண்கள் வீட்டைப் பராமரிப்பது, ஆண் வெளியில் சென்று பொருளீட்டுவதற்குச் சமமான சமூக மதிப்பைப் பெற்றிருந்தது. ஆயின், ஆண் நாயக ஒரு நபர் மணத்தில், பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகள் ஒருவனுக்கு மட்டுமே செய்யும் தனி வேலைகளாயின. இதற்குச் சமூக மதிப்பு கிடையாது. பெண்கள் பொது வாழ்வில் ஈடுபடுவது தடைப்பட்டது. அதனால் பெண்களின் தாழ்நிலை சமூகத்தில் ஆண் பெண் இருபாலரும் செய்யும் வேலைகளுக்கு அளிக்கப்பட்ட மாறுபட்ட மதிப்புகளினால் ஆரம்பமாயிற்று. இதே நிலைதான் முதலாளித்துவக் குடும்பத்திலுள்ள பெண்களது வாழ்விலும் காணப்பட்டது என்கின்றார் ஏங்கல்ஸ்.

இயந்திரமயமாக்கப்பட்ட சமூகத்தில், பெண்களும் வெளியே சென்று உழைத்துப் பொருளீட்டும் கட்டத்தில், அவர்கள் ஆண்களிடமிருந்து விடுதலை பெறுகின்றனர். அதனால் தொழிலாள மக்களிடையேதான் உண்மையான அன்பின் அடிப்படையிலான திருமணங்களும், பெண்க்ளின் சுதந்திரமும் காணப்படுகின்றன. இங்கு சொத்து இல்லாததால் ஆண்நாயகத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை எதுவும் இல்லை. ஆயினும், பெண்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்தாலும் வீட்டு வேலை செய்வது, வெளி வேலை செய்வது இவற்றில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலையிலேயே உள்ளனர். சமூக வேலைகளில் ஆண்கள் மட்டுமே குடும்பத்தின் பிரதிநிதியாகச் செயலாற்றுகின்றனர் என்றும் ஏங்கல்ஸ் விளக்குகின்றார்.

### 2.6.2.2 பெண்கள் முன்னேற்ற வழிமுறைகள்

மார்க்சிசக் கருத்துப்படி, உண்மையான சமூக சமத்துவம், ஆண், பெண் இருபாலரும் சட்டப்படி சம உரிமைகளை அனுபவிப்பதன்

மூலமே செயற்பட முடியும். இது பெண் இனம் முழுவதும் பொதுத் தொழில்களில் ஈடுபடுவதன் மூலமே நடைபெற முடியும். அதற்கு அடிப்படையாக, ஒரு நபர் மணம் சமூகத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பகுதியாக இருப்பது தவிர்க்கப்படுதல் வேண்டும். வரப்போகும் சமுதாயப் புரட்சியின் மூலம் சொத்துக்கள் சமுதாய உடைமையாகும்பொழுது, வாரிசு முறையில் பெற மிகக் குறைந்த சொத்துக்களே இருக்கும். ஒரு நபர் மணமுறையின் அடிப்படையான தனிநபர் சொத்துரிமை தகர்க்கப்படும். அப்பொழுது ஒரு நபர் மணமும் தகர்ந்துவிடும். தனிக்குடும்ப நிர்வாகம் சமூக நிறுவனத்திற்கு மாற்றப்படும். குழந்தை வளர்ப்பும் கல்வியும் பொதுப் பணிகளாக மாறும். ஆண் பெண் உறவுகள் அன்பின் அடிப்படையில் அமையும். அதனால் திருமண உறவுகள் ஒருமண உறவாகவே இருக்கும். இதில் ஆணின் ஆதிக்கம் மறையும்.

இந்நிலை மாற ஒரு புரட்சி தேவை. இதில் பெண் தொழிலாளர்கள் ஆண் தொழிலாளர்களோடு இணைந்து போரிட வேண்டுமேயன்றி, மற்ற வர்க்கப் பெண்களோடு இணைந்து செயற்படக்கூடாது என்று ஏங்கல்ஸ் கூறுகின்றார்.

### 2.6.2.3 குறைபாடுகள்

ஐரோப்பிய நாடுகளில் பெண்ணியம் வளர்ச்சியுற்று, பெண்கள் உயர்கல்வி பெற்ற காலத்தில் மார்க்சியக் கோட்பாடு வலிமை பெற்று விளங்கியது. அக்காலத்தில் உயர்கல்வி பெற்ற பெண்ணியவாதிகள், மார்க்சியத்தில் நம்பிக்கை கொண்டவர் களாக இருந்தனர். இங்கிலாந்துப் பெண்ணியவாதிகளிடையே இக்கோட்பாடே வலிமையுற்றிருந்தது. ஆயின், அவர்கள் தொழிற் சங்கங்களுடன் இணைந்து பெண்களின் உரிமைகளுக்காகப் போராடிய காலத்தில், மார்க்சியம் பெண்களின் அடிமைத்தனத்தின் காரணங்களையும் அவற்றைக் களையும் வழிமுறைகளையும் சரியான முறையில் விளக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டனர். முதலாளித்துவம் எவ்வாறு ஆண் நாயகத்தால் பயனடைகிறது என்பதை விளக்கும் அதே சமயத்தில், ஆண் நாயகம் முதலாளித்துவத்தின் துணையின்றித் தனித்து எவ்வாறு செயற்படுகின்றது என்பதை மார்க்சிசம் விளக்க முயலவில்லை.

உதாரணமாக, தனிநபர் சொத்துரிமையும் முதலாளித்துவமும் ஏற்படுவதற்கு முற்பட்ட காலகட்டங்களிலும், பெண் எனும் வர்க்கம் ஆண் வர்க்கத்தால் நசுக்கப்பட்டு வந்திருக்கின்றது; அதற்கான காரணங்களை மார்க்சிசம் விளக்க முற்படவில்லை. அதேபோன்று தனிநபர் சொத்துரிமை அழிக்கப்பட்டால் பெண்கள் ஆண்களுக்கிணையான சமூக மதிப்பைப் பெறுவார்கள் என்பதும் உண்மையன்று. தனிநபர் சொத்துரிமைகள் அழிக்கப்பட்ட கம்யூனிச நாடுகளிலும் பலவிதங்களில் பெண்கள் ஆண்களைவிடத் தாழ்நிலையில் உள்ளனர் என்பதும் வெளிப்படையாகும். மேலும், இங்கிலாந்தில் தொழிற்சங்கப் போராட்டங்களில் பெண்கள் ஈடுபட்டபொழுது, அவர்களுக்கு ஆண் தொழிலாளர்களிடம் இருந்து தகுந்த ஆதரவு கிடைக்கவில்லை. இதனால் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து போராடுவது தகுந்த பயனளிக்குமா என்ற வினாவும் பெண்ணியவாதிகளிடையே எழுந்தது.

### 2.6.3 சோஷலிசப் பெண்ணியம்

சோஷலிசக் கருத்துக்கள் ராபர்ட் ஓவன், சார்லஸ் புரியர், செயிண்ட் சிமான்ஸ் முதலியோரது கோட்பாடுகளில் ஆரம்ப காலங்களிலேயே பரவிக் கிடந்தன. அவர்கள் ஏற்றத் தாழ்வுகளற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்க முயன்றனர்.

1973-களில் மார்க்சிசக் கோட்பாட்டில் நம்பிக்கை உள்ள அமெரிக்கப் பெண்ணியவாதிகள், மார்க்சிசம், பெண்ணியம் ஆகிய இரண்டு கோட்பாடுகளுக்கும் இடையில் காணப்படும் கருத்து வேறுபாடுகளை ஒழுங்குபடுத்தவும், பெண்கள் அனுபவிக்கும் எல்லா விதமான நசுக்குதலின் காரணங்களையும் அறிந்து அவற்றை நீக்கும் முறைகளை ஆராயவும் பெண்ணியக் குழுக்களை ஏற்படுத்தினர். தனித்தியங்கிய பெண்ணியவாதிகளும், மார்க்சிசவாதிகளும்கூட இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த முயற்சியின் விளைவாக ஏற்பட்டதுதான் சோஷலிசப் பெண்ணியம் / பெண்ணிய சோஷலிசம். இது பெண்ணியக் கருத்துக்களின் மூலமும் மார்க்சியக் கருத்துக்களின் மூலமும் பெண்ணடிமையின் காரணங்களை ஆராய முற்பட்டது.

### 2.6.3.1 பெண்ணடிமையின் காரணங்கள்

ஜூலியட் மிட்சல் (Juliet Mitchell) என்பவர் தனிநபர் சொத்துரிமையை அழித்து விடுவதால் மட்டும் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றார். தனது கருத்துக்களை அவர் பின்வருமாறு விளக்குகின்றார். பெண்கள் ஏன் எல்லா சமூகங்களிலும் நசுக்கப்படுகின்றார்கள்; எவ்வாறு நசுக்கப்படுகின்றார்கள் என்பதனை ஆராய்வது முக்கியம். இதை நான்கு முக்கியக் கூறுகளில் மறுஆய்வு செய்ய வேண்டும். அவை உற்பத்தி, மனித மறு உற்பத்தி, பாலியல், குழந்தை வளர்ப்பு என்பனவாகும். பெண்கள் பொது வேலைகளிலிருந்து விலக்கப்பட்டதற்கு அவர்களது உடற்கூறுகள் காரணமன்று; சமூகமே காரணம். அதனால் பெண்கள் சமூகத்தில் ஆண்களுடன் வேலைகளைச் சரிசமமாகப் பகிர்ந்து கொண்டாலும், சமூக நிலையும், சமூகத்தின் மதிப்புகளும் மாறாதவரை பெண்களுக்குச் சமத்துவம் கிடைக்காது. இரண்டாவது, பெண்கள் குழந்தை பெறும் வேலையின் காரணமாகக் குடும்பத்தில் முடக்கப்பட்டுள்ளனர். அதனால் குடும்பம் என்ற அமைப்பை அழித்துவிட்டால் பெண்கள் விடுதலை அடைவர் என்ற கருத்தும் சரியல்ல. இது குடும்பத்தின் பங்குப் பணிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால் ஏற்பட்ட தவறு. இப்பங்குப் பணிகளை ஆராய்ந்து அவற்றைத் தகர்க்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குடும்பத்தில் மனித மறுஉற்பத்தி, பாலியல், குழந்தை வளர்ப்பு, இவை முக்கிய பங்குகள் ஆகும். இதில், மனித மறுஉற்பத்தி குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் எளிதில் கிடைப்பதன் மூலம் கட்டுப்படும். குடும்பத்தில் ஆண் பெண்களுக்கிடையே நிலவும் சமத்துவமற்ற அதிகாரம், ஆண், பெண்ணைச் சுரண்ட அனுமதித்தது. இருவருக்கும் சமமான பாலியல் சுதந்திரம் கிடைக்கும்பொழுது இந்நிலை மாறும். அப்பொழுது குடும்பம் தேவையற்றதாகும். பெண்கள் குழந்தைகளைப் பெறுவதால் அவர்களே குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்ற கொள்கையை மாற்ற வேண்டும். இதனால் குடும்பம் என்பது பொருளாதாரத்தோடு மட்டும் சம்மந்தப்பட்டதன்று; வேறு நிலைகளோடும் சம்மந்தப்பட்டதென விளங்கும்.

சோஷலிசப் பெண்ணியம் எல்லாப் பெண்களும் பாலின அடிப்படையில் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்ற கருத்தை ஒப்புக்கொண்டாலும், சமூகத்தில் பல்வேறு வகைப்பட்ட கூறுகளும் பெண்களை நசுக்கக் காரணமாயுள்ளன என்பதையும் ஒப்புக் கொள்கின்றது. நாடுகள், இனம், வயது, அறிவுத்திறன், மதம், வர்க்கம் இவைகளும் பாலினப் பாகுபாடுகளினூடே செயற்படுகின்றன என்று வலியுறுத்துகின்றது. அதாவது, உலகம் முழுவதும் பெண்கள் அனைவரும் ஒரே வர்க்கமாக நசுக்கப்படுகின்றனர். ஆனால் அதே சமயத்தில் தாம் சார்ந்த மற்ற கூறுகளோடு, தம் இன ஆண்களோடு சேர்ந்தும் பல்வேறு விதமான நசுக்குதல்களுக்கு உட்படுகின்றனர். அதனால் பாலினமோ, வர்க்கமோ நசுக்குதலின் அடிப்படைக் காரணி என்று விவாதிப்பதைவிட, எல்லாப் பிரச்சனைகளும் பெண்களைத் தாக்கும் பிரச்சனைகள்தான்; அதனுடன் வர்க்க, இனப் பிரச்சனைகளும் அடங்கும் என்று கொள்வது பொருத்தமாகும். அதனால் பெண்களின் பிரச்சனைகளை மற்றப் பிரச்சினைகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்காமல் முழுமையான கண்ணோட்டத்தோடு நோக்க வேண்டும். இக்காரணங்களினால் பெண்கள் தங்கள் பிரச்சனைகளுக்காகப் போராடும் பொழுது மற்ற சோஷலிசப் புரட்சிகரக் குழுக்களோடு ஒன்று சேர்ந்து போராட வேண்டுமென்பது அவர்கள் கருத்தாகும்.

சோஷலிசப் பெண்ணியவாதிகள், மார்க்சிசத் தத்துவத்தில் காணப்படும் பொருளுற்பத்தி என்ற கருத்தை மனித மறு உற்பத்தி உள்ளிட்ட வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும், உள்ளடக்குமாறு விரிவுபடுத்தினர். அவர்கள் கருத்துப்படி, மனித மறுஉற்பத்தி என்பது குழந்தைகளை ஈன்றெடுப்பதுடன் மட்டும் நின்றுவிடும் பணியாகாது. அது உயிரைப்படைப்பதுடன், மக்களை வளர்த்து, ஆளாக்கி, சமூக நிலைக்குத்தக்கவாறு உருவாக்கி, சமூகத்திற்குத் தொழிலாளர்களை வழங்கும் பணியுமாகும். அதனால் உற்பத்தி என்னும் சொல் மனித மறு உற்பத்தியையும் குறிக்குமாறு விரிவு படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

சோஷலிசப் பெண்ணியம் பெண்களின் வேலை என்ற பதத்திற்கும் புதிய விளக்கத்தை அளித்தது. பெண்கள் வீட்டில் செய்யும் வேலை வெளியில் ஆண்கள் செய்யும் வேலைக்கிணையான

Selvamani

மதிப்பைக் கொண்டது. ஆனால் அதற்கு தகுந்த மதிப்போ, ஊதியமோ அளிக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டிற்று. சோஷலிசப் பெண்ணியவாதிகள் தீவிரப் பெண்ணியவாதிகளைப் போன்று வாழ்க்கையில் தனி மனித அனுபவமே புற உலக அனுபவம் என்ற கருத்தைக் கொண்டவர்கள். அதாவது வாழ்க்கையின் வெளி, உட்பகுதிகள் என்ற பாகுபாட்டை நிராகரிக்கின்றனர்.

சோஷலிசப் பெண்ணியம் மார்க்சிச நோக்குடன் தீவிரப் பெண்ணியத்தையும் சேர்த்து நோக்குகின்றது. இது வர்க்கப் பாகுபாட்டுடன் பாலினப் பாகுபாட்டையும் அழிக்க வேண்டுமெனக் கருதுகின்றது. இது முதலாளித்துவத்தையும் ஆண் நாயகத்தையும் ஒழித்து, சமூகத்தின் எல்லாவிதமான சுரண்டுதல்களையும் நீக்கி, ஆண்மை பெண்மை என்ற பாகுபாடற்ற சமூகத்தை நிறுவப் பாடுபடுகின்றது.

### 2.6.3.2 பெண்கள் முன்னேற்ற வழிமுறைகள்

மிதவாதப் பெண்ணியவாதிகளைப் போலன்றி சோஷலிசப் பெண்ணியவாதிகள், சமூக அமைப்பே குறைபாடுள்ளது. அதனால் சமூக அமைப்பைப் புரட்சியின் மூலம் மாற்ற வேண்டுமென விழைகின்றனர். மேலோட்டமான சீர்திருத்தங்கள் முழுமையான பலனளிக்காது என்பது அவர்களது கொள்கையாகும். சோஷலிசப் பெண்ணியவாதிகளும், பெண்கள் ஆண்களிடமிருந்து பிரிந்து, தனித்த குழுக்களாகப் போராட வேண்டுமென்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர். பெண்களின் விடுதலைப் போராட்டத்தில் சமூக அமைப்பு மட்டுமல்லாது ஆண்களும் இவர்களுக்கு எதிரிகள்தான். உலகம் முழுவதும் நிலைபெற்றிருக்கும் சமூக அமைப்பு ஆண்களுக்குச் சாதகமாகவே உள்ளதால் ஆண்கள் தற்போதுள்ள சமூக அமைப்புக்கெதிராகப் போராட முன்வரமாட்டார்கள். இந்நிலையைப் பெண்ணியவாதிகளும், சோஷலிசவாதிகளும் பெண்ணிய இயக்கத்தில் மும்முரமாக ஈடுபடும்பொழுது உணர்ந்து கொண்டனர். சில ஆண் சோஷலிசவதிகள் பெண்களின் விடுதலையை முக்கிய குறிக்கோளாகக் கொள்வது தனிநபர் சொத்துரிமையை அழிக்கும் நோக்கத்தைப் பின் தள்ளிவிடும் எனப்

பயந்தனர். சிலர் பெண்களுக்கு எதிரிகளாவும் இருந்தனர். பெண்களின் இயல்பு சோஷலிசப் புரட்சிக்கு எதிரிடையாக உள்ளது எனச் சிலர் குறை கூறினர். வேறு சிலர், பெண்களின் காம உணர்ச்சியில் இருந்து ஆண்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று எச்சரித்தனர். இக்காரணங்களினால் பெண்ணிய வாதிகள், ஆண்கள் தங்கள் தாழ்நிலையை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர்; பெண்களின் தாழ்நிலையைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை என உணர்ந்து அதிருப்தியுற்றனர். இவ்வெண்ணங்களினால் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகத் தனித்துப் போராட வேண்டுமென்ற எண்ணம் சோஷலிசப் பெண்ணியவாதிகளிடையே வலுப்பெற்றிருந்தது.

சோஷலிசப் பெண்ணியவாதிகள் ஆண்களைப் போன்று பெண்கள் பொது வேலைகளில் ஈடுபடவேண்டும்; பெண்கள் தங்களது தனிவேலை அல்லது குடும்ப வாழ்க்கை முறைகளினால் கட்டுப்படுத்தபடக் கூடாதென வலியுறுத்தினர். மேலும், தற்கால இயந்திர வளர்ச்சி பெண்கள் உடல் வலிமை குறைந்தவர்கள், அதனால் சில வேலைகளுக்குப் பயன்படமாட்டார்கள் என்ற எண்ணத்தை மாற்ற உதவும் என்றும் நம்பிக்கை தெரிவித்தனர்..

சோஷலிசப் பெண்ணியவாதிகள் பெண்கள் ஆண்களுக்குச் சமமாகப் பொது வேலைகளில் ஈடுபட அவர்களுக்குச் சம கல்விவாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும். என வலியுறுத்தினர்.

குடும்பம் என்ற அமைப்பை அழிக்க வேண்டும்; குடும்பம் அல்லாது வேறு வகையான வாழ்க்கை முறைகள் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதும் இவர்களது வழி முறைகளில் ஒன்றாகும். கூட்டு வாழ்க்கை, சுதந்திரமான மண உறவுகள், இவைகள் பெண்களுக்குக் குழந்தைப் பேற்றிலிருந்து சுதந்திரம் அளிக்கும். பிறந்த குழந்தைகளுக்குப் பெற்றோர் பெயர் தெரியாவிட்டால் சமூகத்தால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படாத நிலைமாற வேண்டும்; குழந்தை வளர்ப்பு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பவையும் இவர்களது வழிமுறைகள் ஆகும்.

Re S. Selvamani
S. Selvamani

### 2.6.3:3 குறைபாடுகள்

பெண்கள் பாலியல் காரணங்களினால் நசுக்கப்படுவதற்கும், முதலாளித்துவ வர்க்கத்தினரால் நசுக்கப்படுவதற்கும் அடிப்படையில் வெவ்வேறு காரணங்கள் உள்ளன என்பதை சோஷலிசப் பெண்ணியவாதிகள் ஒப்புக் கொள்கின்றனர். ஆயின், அவர்களால் ஆண்நாயகத்தின் அடிப்படையான காரணத்தைக் கண்டுகொள்ள இயலவில்லை. அதே போன்று, முதலாளித்துவத்திற்கும் ஆண் நாயகத்திற்கும் அடிப்படையில் உள்ள தொடர்பையும் அவர்களால் சரியான முறையில் விளக்க இயலவில்லை. இவை பற்றிய கருத்து வேறுபாடுகளினால் சோஷலிசப் பெண்ணியம் இடதுசாரி, வலதுசாரி என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்தது. 1980-களில் இடதுசாரிகளின் கை அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் ஓங்கிய பொழுது சோஷலிசப் பெண்ணியம் வீழ்ச்சியுற்றது.

### 2.6.4 தீவிரவாதப் பெண்ணியம்

தீவிரப் பெண்ணியம், 1960-களில் தொடங்கி பெண்ணியத்திற்கும், அதன் அமைப்பிற்கும் புது விளக்கங்களை அளித்தது. இதில் ஈடுபட்ட பெண்கள் அரசியலில் புது இடதுசாரியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

தீவிரவாதப் பெண்ணியவாதிகளின் வாதம், பெண்களின் இயற்கையான தன்மைகள் என்ன என்பதை மையமாகக் கொண்டது. மிதவாதப் பெண்ணியவாதிகளும், சோஷலிசப் பெண்ணியவாதிகளும் பெண்களும் ஆண்களைப் போன்று சுதந்திரமான மனிதர்கள் என்பதை ஒப்புக் கொண்டனர். இது பெண்ணியத்தின் மையக் கருத்து, ஆனால் அவர்கள் ஆண்களும் பெண்களும் சில தன்மைகளில் வேறுபடுகின்றனர் என்று கருத்து கொண்டனர். அதனால் 19-ஆம் நூற்றாண்டு மிதவாதப் பெண்ணியவாதிகள், பெண்களின் இயற்கையான தன்மைகள் அவர்கள் குடும்பத்தில் வாழ்ந்து கொண்டு, தாய், தாரம் என்ற கடமைகளை நிறைவேற்றத் தகுதியுடையவர் களாக்குகின்றது என நம்பினர். சோஷலிசப் பெண்ணியவாதிகளும் பெண்களின் இயற்கையான தன்மைகள் ஆண்களிடமிருந்து வேறுபடுகின்றன என்றே கருதினர். அவர்களது வேலைகளைத் தனிநபர் வட்டத்திலிருந்து பொதுவட்டத்திற்கு மாற்றுவது, பாலினத்

தன்மைகளை மாற்றாது என விவாதித்தனர். ஆயின், தீவிரவாதப் பெண்ணியவாதிகள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பாலியல் சார்ந்த மாறுபட்ட தன்மைகள் எதுவும் கிடையாது என மறுத்து, அதன் அடிப்படையில் சமூகத்தில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் வேலைப் பங்கீடுகள் நியாயமற்றவை என விவாதித்தனர்.

### 2.6.4.1 பெண்ணடிமையின் காரணங்கள்

தீவிரவாதப் பெண்ணியத்தின் முதல் கோட்பாடு பெண்கள் ஒரு நசுக்கப்பட்ட வர்க்கத்தினர் என்பதாகும். அவர்களது கருத்துப்படி, பாலினப்பாகுபாட்டின் அடிப்படையில் அமைந்த நசுக்குதல் பொருளாதார அடிப்படையிலமைந்த நசுக்குதலைவிட சமூகத்தின் தன்மைகளை அதிக அளவில் பாதிக்கின்றது என்பதாகும்.

தீவிரவாதப் பெண்ணியத்தின் முக்கிய கருத்து, ‘பாலியல் அரசியல்’ என்பதாகும். இதில் அரசியல் என்ற சொல் அதிகாரத்தின் அடிப்படையிலான உறவைக் குறிக்கும். ஒரு பகுதியினர் மற்றொரு பகுதியினரை ஆள்வது இதன் இயற்கையான இயல்பு. இதுவரை ஆண் பெண் இரு பாலருக்கிடையே இருந்து வந்த உறவை ஆராய்ந்தால் சரித்திரம் முழுவதும் ஆண்கள் பெண்களை அடிமை கொண்டிருப்பது தெரியவரும். ஆண்கள் பெண்களை ஆள்வதைத் தங்கள் பிறப்புரிமையாகக் கொண்டுள்ளனர். இதுதான் இன்றைய சமூகத்தில் இருக்கும் அடிப்படையான, சமூகத்தின் எல்லாக் கூறுகளிலும் பரவி நிற்கும், சமூகக் கலாச்சாரக் கோட்பாடாகும். ஆண் நாயகத்தின் மிகப் பெரிய வலிமை, அது எல்லா சமூகங்களிலும் ஆண்டாண்டு காலமாக வழக்கிலிருக்கின்றது என்பதாகும். பாலியல் வேறுபாடுகள் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளன. அதனால் அவை இருக்கின்றன என்பதே உணரப்படுவதில்லை. இக்காரணத்தினால் அவை இயற்கையானவை என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒருவரும் அது குறித்து வினாக்கள் எழுப்புவதில்லை. இதற்குச் சாதகமாக சமூகம் வாழ்க்கையின் தனி மனித அனுபவங்கள் வேறு: புற உலக அனுபவங்கள் வேறு எனப் பாகுபடுத்தி வைத்தது. ஆயின், தீவிரப் பெண்ணியவாதிகள் பொதுவான, மரபு சார்ந்த அரசியல் நிறுவனங்களை ஆராய்ந்து பெண்கள் ஏன் நசுக்கப்படுகின்றனர்

என்பதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்க முயன்றனர். இதன் மூலம் அவர்களுக்குத் தெரிய வந்த உண்மை தனிமனித அனுபவமும் ஒரு அரசியல்தான் (Personal is Political) என்பதாகும். அதாவது, தனிமனித வாழ்வில் பெண்கள் நசுக்கப்படுவது போன்றே பொதுவாழ்விலும் நசுக்கப்படுகின்றனர் என்பதாகும். சமூகத்தில் பெண்கள் நசுக்கப்படுவது மறைமுகமாவும், வெளிப்படையாகவும் சமூகத்தின் ஒவ்வொரு கூறிலும் நிகழ்கின்றது. மனித மறு உற்பத்தி, மேலும், சமூக நிறுவனங்களான திருமணம், கட்டாய இருபாலர் உடலுறவு, தாய்மை போன்றவற்றின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டும், தனி நபர்கள் சமூகத்தில் இப்படித்தான் வாழவேண்டுமென சமூக மயமாக்கப்பட்டும், வழக்கத்திலிருக்கும் சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளுமாறு பெண்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

தீவிரவாதப் பெண்ணியவாதம் நான்கு முக்கிய கோட்பாடுகளில் அடங்குகின்றது. அவை ஆண் நாயகம், குடும்பம், பாலியல், பெண்களின் வரலாறு என்பவைகளாகும். ஆண்நாயகக் கூறுகள் சமூகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அடங்கியுள்ளன. இதை வலியுறுத்த எழுந்த நிறுவனம் தான் குடும்பம். இங்கு ஆண் பெண் இருபாலருக்கிடையே வேறுபடுத்தப்பட்ட வேலைப் பங்கீடுகள் உள்ளன. இங்குதான் ஆண்களும், பெண்களும் ஆண்நாயகச் சமூகத்திற்கியைந்தவாறு உருவாக்கப்பட்டு, ஆண் நாயகத்தைப் பலப்படுத்துகின்றனர். இது ஆணாதிக்கத்தின் அடித்தளமாகும். அடுத்தது, பாலியல் உறவுகள். ஒரு நபர் மணம் என்ற விதிமுறை பெண்ணுக்கு மட்டும் தான் விதிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்குக் கிடையாது. இதுவும், ஆண் பெண்ணின் பாலியல் மீது கொள்ளும் ஆதிக்கத்தைக் குறிக்கின்றது. இந்நிலையை மாற்ற பெண்களின் வரலாற்றை ஆராய்வது முக்கியம். சமூக மாற்றத்தில் எப்பொழுது, ஏன் பெண்கள் ஆண் நாயகத்தால் கொடுமைப்படும் வழக்கம் தோன்றியது என்பதை உணர்ந்தால்தான் அந்நிலையை மாற்றும் வழிவகைகளை ஆராய இயலும்.

தீவிரவாதப் பெண்ணியவாதிகள் ஆண்களை எதிரிகளாகக் கருதுகின்றனர். ஆண் நாயகத்தால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள், மதிப்பீடுகள் எல்லாவற்றையும் மாற்ற வேண்டுகின்றனர்.

### 2.6.4.2 பெண்கள் முன்னேற்ற வழிமுறைகள்

தீவிரவாதப் பெண்ணியம், ஆண்களால் ஏற்பட்ட நிறுவனங்கள் மட்டுமல்லாது, ஆண்களே பெண்களுக்கு எதிரிகள் எனக் கருதுகின்றது. அதனால் பெண்கள் ஆண்களை எந்த வகையிலும் சாராது, பிரிந்து வாழ வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர். இதனால் எல்லா தீவிரப் பெண்ணியவாதிகளும் பெண்களுக்குள் உடலுறவு கொள்வதை ஆதரித்து, ஆண்களுடன் உடலுறவு கொள்வதை எதிர்த்தனர். மேலும், ஆண்நாயக அமைப்பிற் கெதிராகப் பெண்களை மட்டும் கொண்ட நிறுவனங்களை அமைப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டனர். பெண்கள் மட்டும் கொண்ட குழுக்கள், உணவுவிடுதிகள், புத்தகக்கடைகள், பதிப்பகங்கள், பெண்கள் உடல்நலம் பேணும் நிறுவனங்கள் முதலியவை அவற்றில் சிலவாகும். பெண்களின் நசுக்குதல் என்பது சமூகத்தில் ஒவ்வொரு கூறிலும் நிகழ்வதால் சமூகத்தின் மேல் மட்டத்தில் பெண்களுக்காகச் செய்யப்படும் சீர்திருத்தங்கள் எந்தவித பயனையும் அளிக்காது; அதனால் புது சமுதாய அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தைத் தீவிரமாக ஆதரித்தனர். இதற்கு முதலாவதாக, குடும்பம் என்ற அமைப்பு தகர்க்கப்படவேண்டும்; பாலியல் தொடர்புகளில் முழு சுதந்திரம் வேண்டும்; இருபாலர் உடல் உறவு, பலருடன் உடலுறவு, ஒரு பாலரிடையே உடலுறவு, உடலுறவு இன்றி வாழ்வது என்ற வாழ்க்கை முறைகளில் எப்படி வேண்டுமானாலும் வாழச்சுதந்திரம் வேண்டும் எனக் கோரினர். பெண்களின் உடல் மனித மறு உற்பத்தியோடு இணைக்கப்பட்டிருப்பதால் ஆண் இனம் அதைக் காரணம் காட்டி பெண்களைத் தாழ்மைப்படுத்திற்று, அந்நிலையிலிருந்து பெண்கள் விடுதலையடைய குழந்தை பெறும் பொறுப்பிலிருந்து சுதந்திரம் பெற வேண்டும். இதற்கு சுலாமித் பயர்ஸ்டோன் என்பவர் குழந்தைகள் பெண்களின் உடலுக்கு வெளியே செயற்கையான சூழ்நிலையில் உருவாக்கப்பட வேண்டுமென்ற வழிமுறையைக் கூறினர். அதேபோன்று, குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பிலிருந்தும் பெண்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். குழந்தைகள் கூட்டுமுறையில் சமுதாயத்தால் வளர்க்கப்பட

வேண்டும். இது குழந்தை வளர்ப்பில் உள்ள மேம்பட்ட அறிவும், அனுபவமும் குழந்தைகளுக்குக் கிடைக்க வழி செய்யும் எனவும் கருதினார். மேலும், குழந்தைகளுக்கும் பொருளாதார சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வது அவர்களிடையே சுயநம்பிக்கையை ஏற்படுத்தும். பெண்களையும் குழந்தைகளையும் சமூகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஈடுபடுத்தி, ஒன்றுபடுத்த வேண்டும். ஆண் பெண் இருபாலருக்கிடையே உள்ள வேலைப் பாகுபாடுகளையும், வேறுபாடுகளையும் அறவே நீக்க வேண்டும் என்பவை தீவிரவாதப் பெண்ணியவாதிகளின் வழிமுறைகளாகும்.

### 2.6.4.3 குறைபாடுகள்

தீவிரவாதப் பெண்ணியவாதிகள் மிகத் தீவிரமாகச் செயற்பட்ட போதிலும் அவர்கள் கோட்பாடுகளிலும், அணுகுமுறைகளிலும் சில குறைபாடுகள் இருந்தன.

உயிரியல் காரணிகள் மட்டும் ஆண் பெண் வேறுபாடுகளைத் தீர்மானிப்பதில்லை. அதற்கு வேறு காரணிகளும் உண்டு. ஆயின், ஆண் பெண் வேறுபாடுகளுக்கு உயிரியல் காரணிகள் எந்த வகையிலும் ஆதாரமானதன்று என்பது தவறான வாதமாகும்.

ஆண், பெண் இருபாலருக்கிடையே உள்ள உயிரியல் வேறுபாடுகள் படைப்பில் அமைந்தவை; இயற்கையானவை. ஆயின், தீவிரப் பெண்ணியம் அதற்கு எதிரிடையாகச் செயற்பட்டது. அச்செயற்பாடுகள் தீவிரமாகவும் இருந்தன. இதைப் பெரும்பான்மையான பிற பெண்ணியவாதிகளும், பொது மக்களும் ஒப்புக் கொள்ளவில்லை. தீவிரப் பெண்ணியவாதிகள் ஆதரித்த ஒருபாலர் பாலுறவு, குடும்ப எதிர்ப்பு, கருப்பைக்கு வெளியில் குழந்தைகளை உருவாக்குவது போன்ற கருத்துக்களைப் பெரும்பான்மையோர் எதிர்த்தனர். தீவிரப் பெண்ணியவாதிகள் சிற்சிறு குழுக்களாகப் பிரிந்து, சரியான தலைவர்கள் இன்றி, வெவ்வேறுபட்ட இலக்குகளோடும், வழிமுறைகளோடும் செயற்பட்டனர். அவர்களிடையே ஒரு சரியான அமைப்போ, எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களோ இல்லை.

### 2.6.5 முடிவுரை

மிதவாதப் பெண்ணியம் சீர்திருத்தத்தில் நம்பிக்கை உடையது. சோஷலிசப் பெண்ணியமும், தீவிரவாதப் பெண்ணியமும் ஒரு சுதந்திரமான சமூகத்தை உருவாக்க முற்படுகின்றன. மார்க்சியப் பெண்ணியம் வர்க்கத்திற்கும், தீவிரப் பெண்ணியம் பாலியல் போராட்டத்திற்கும் முதலிடம் கொடுக்கின்றன. சோஷலிசப் பெண்ணியம் சமூக நசுக்குதலுக்குக் காரணமானவைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டுமென விழைகின்றது.

## 2.7 பழமைவாதக் குடும்பம் சார்ந்த பெண்ணியம்

1960-களில் பெருமளவில் பெண்கள் கல்வி கற்று, வெளியிடங்களில் வேலைக்குச் சென்றது குடும்பம் என்ற அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்படக் காரணமாயிற்று. இது பாலினக் கூறுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. மனைவி, தாய் என்ற பங்குகள் விரிவான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டன. 1960-70களில் பெண்ணியத்தில் தீவிரமாக ஈடுபட்ட பெண்கள் பெரும்பாலும் புதிய இடதுசாரியைச் சார்ந்த 20 வயதுப் பெண்களாவர். இவர்கள் திருமணத்தை மறுத்து, குழந்தை பெறுவதைக் காலம் தாழ்த்தி, பாலியல் உறவுகளிலும், புதுவிதமாகக் கூட்டுச்சேர்ந்து வாழும் வாழ்க்கையிலும் புதுமை காண முற்பட்டனர். மேலும், சில குடும்பப் பெண்கள் குழந்தை வளர்ப்பில் தங்கள் கணவர்களும் பங்கு கொள்ள வேண்டுமென்ற வழக்கத்தை நடைமுறைப்படுத்த முயன்றுகொண்டிருந்தனர். இவர்கள் அனைவரும் பெண்களின் இயற்கைக் குணங்களும், கலாச்சார மதிப்புகளும் மட்டுமே பெண்களைக் குழந்தை வளர்ப்பிற்கு முழுப்பொறுப்பாக்கும் என்ற கருத்தை எதிர்த்தனர். இதன் விளைவாகப் பாலின வேறுபாடுகளின் அடிப்படையில் அல்லாது, தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு, பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் விடுதலை அளிக்க முடியும் என நம்பினர். திருமணத்தையும், குழந்தைப் பேற்றையும் தவிர்ப்பதை பாலின சமத்துவத்தை அடைவதைவிட எளிதாகப் பெறமுடிந்தது.

ஆயின், அம்முடிவுகள் எல்லாப் பெண்களின் வாழ்க்கைக்கும் தகுந்த தீர்வாக அமையவில்லை என்பதை அவர்கள் காலப்போக்கில் உணர்ந்துகொண்டனர். சகோதரத்துவம் என்ற கோட்பாடு, பெண் இனம் முழுமைக்கும் ஏற்றவாறு அமையவில்லை என்பதையும் புரிந்துகொண்டனர். அதிக அளவில் பெண்கள் தனித்து வாழவும், குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாமல் வாழவும் வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் அன்பு, பாசம், அரவணைப்பு முதலிய உணர்ச்சிகளுக்காக ஏங்க ஆரம்பித்தனர்.

இவை தவிர, 1980-களில் எழுந்த புது இடதுசாரிகளின் எழுச்சி, பெண்ணியவாதிகளுக்கு எதிராக இயங்கிய இயக்கங்கள் ஆகியவை பெண்ணியத்தைப் பழமைவாதத்திற்குக் கொண்டு சென்றன. பெண்ணியவாதிகள், பெண்கள் அனைவருக்கும் பொருத்தமான, ஏற்றுக்கொள்ளத்தக்க கோட்பாடுகளையும், சமூக மாற்றங்களையும் கொண்டுவர இயலாது என்பதனை உணர்ந்து கொண்டனர். பெட்டி ப்ரைடன், ஜெர்மைன் க்ரீன், ஜீன் பெத்கே எல்ஷடைன் (Jean Bethke Elshtain) இவர்கள் குடும்ப அமைப்பை ஆதரிக்கும் பழைமைவாதப் பெண்ணியத்திற்கு வித்திட்டவர்கள் ஆவர். இதில் பெட்டி ப்ரைடன் முக்கியமானவர். ஏனெனில் இவர்தான் 1960-களில் தனது 'பெண்மையின் மாயை' என்ற புத்தகத்தின் மூலம் பெண்ணியத்தின் இரண்டாவது அலைக்கு வித்திட்டவர் ஆவார். ஜெர்மைன் க்ரீர் மக்கள் தொடர்புச் சாதனங்களில் புகழ்பெற்றுத் திகழ்ந்தவர். எல்ஷ்டைன் தனது கருத்துக்களைக் கோட்பாடுகளின் மூலம் உருவாக்க முயன்றார். இவர்களைத் தவிர, கேரல் மாக்மில்லன் (Carol Mc Millian) என்பவர் பெண்ணியத்தைத் தீவிரமாகப் பழமைக் காலத்திற்கே எடுத்துச் செல்ல முற்படுகின்றார்.

மேலே குறிப்பிட்டவர்களது பழமைவாய்ந்த, குடும்பம் சார்ந்த பெண்ணியக் கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2.7.1 பெட்டி ப்ரைடன்

பெட்டி ப்ரைடன் தனது இரண்டாவது கட்டம் (The Second Stage) என்னும் நூலில் தனது கருத்துக்களைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

அவரது கருத்துப்படி, 1960-களில் பெண்கள் சமூகத்தில் தங்களைச் சுற்றி எழுப்பப்பட்டிருந்த 'பெண்மையின் மாயை'களைத் தகர்த்துக்கொண்டு வெளிப்பட முதற்கட்டப் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. பெண்கள் தங்களிடம் உள்ள சக்திகளை வெளிப்படுத்தவும், வெளி வாழ்க்கையில் உள்ள வாய்ப்புக்களை முழுமையாக அடையவும் இது தேவையாக இருந்தது. தற்பொழுது ஆண் பெண் இருபாலரும் வாழ்க்கைப் பணிகளை மேற்கொண்டு, குழந்தைகளையும் வளர்க்க் வேண்டிய வாழ்க்கை முறையை மேற்கொண்டுள்ளனர். இவ்வாழ்க்கை முறைக்குத் தக்கவாறு சமூகத்தைச் சீர்படுத்துவது அவசியமாகின்றது. இந்நிலையை அடைய தற்காலத்தில் நிலவிவரும் 'பெண்ணியத்தின் மாயை' தடைக்கல்லாக உள்ளது. 'பெண்ணியத்தின் மாயை' ஆண்களையும் பெண்களையும் எதிரிகளாகக் கருதுகின்றது. இந்நிலை மாறி, ஆண்களும் பெண்களும் சமூகத்தில் இணைந்து செயல்புரிய வேண்டும். ஆண்களிடமும் பெண்களிடமும் பல நல்ல பண்புகள் உள்ளன. இவ்வாறான நல்ல பண்புகள் சமூகத்தில் இருபாலருக்கும் பொதுப்படையாக அமைதல் வேண்டும். இவ்வாறான வாழ்க்கை முறையில் பழமையான சமூக மதிப்புகளும், தலைமைப் பண்புகளும் ஆண்களுக்கு என்று விதிக்கப்பட்ட குணங்களைச் சார்ந்திருப்பதிலிருந்து மாறிப், பெண்களுக்கு என்று விதிக்கப்பட்ட குணங்களைச் சார்ந்தவைகளாக மாற வேண்டும். தற்பொழுது நிலவி வரும் 'பெண்ணியத்தின் மாயை' பெண்கள் பொதுவாழ்வில் ஆண்களின் சமூக மதிப்பிற்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்ட வாழ்க்கைப் பணிகளையும், வாழ்வின் குறிக்கோள்களையும் எவ்வித மாற்றமுமின்றி பெண்களும் அடைய வேண்டும் எனக் கருதுகின்றது. இந்நோக்கம் வாழ்க்கையின் முக்கியத் தேவைகளான குடும்பம், குழந்தைகள், அன்பு, ஆதரவு போன்றவைகளுக்கு இடமளிக்கவில்லை. இது பெண்ணியக் கோட்பாடுகளில் உள்ள முக்கியக் குறைபாடாகும். பெண்ணியவாதிகளுக்கு ஆண்கள்பால் ஏற்பட்ட வெறுப்பினால் குடும்பம் என்ற அமைப்பு பெண்களை அடிமைப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டதெனக் கருதினர். அதனால் பெண்களைக் குடும்பம் அல்லது வாழ்க்கைப் பணி இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டுமே

தேர்ந்தெடுக்குமாறு வற்புறுத்தினர். இது பெண்ணியவாதிகளுக்குக் குடும்ப வாழ்வின் மூலம் கிடைக்கும் ஆதரவை அழித்தது மட்டுமின்றி, ஆண், பெண் இடையே சமத்துவம் வேண்டுமெனில் குடும்பம் என்ற நிறுவனம் அழிக்கப்பட்டே ஆக வேண்டும் என்ற எண்ணத்தையும் மக்கள் மனத்தில் உருவாக்கியது. மனைவி, அன்னை என்ற பங்கு நிலைகளைப் பெண்ணியவாதிகள் எதிரிகளாகக் கருதியதால், பெரும்பான்மையான ஆண்களின் விரோதத்தையும் அவர்கள் எதிர் நோக்க வேண்டியதாயிற்று. அதனால் இப்பொழுது பெண்ணியவாதிகள் செய்ய வேண்டிய முக்கிய வேலை ஆண் பெண் இருபாலருக்கிடையே ஏற்பட்ட பிளவையும், பெண்ணியவாதிகள், பெண்ணியவாதிகளின் எதிரிகள் இவர்களுக்குள் ஏற்பட்ட பிளவையும் நீக்கி, இவர்களை எல்லாம் ஒற்றுமைப்படுத்துவதாகும். இதை வாழ்க்கையில் குழந்தைகளை மையமாகக் கொண்டு இயக்கும் சமூக அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் செயற்படுத்த முடியும். அதனால் பெண்ணியவாதிகள் பாலியல் சார்ந்த கோரிக்கைகளான பெண்களுக்குள் உடலுறவு, கருக்கலைப்பு இவைகளைத் தவிர்க்க வேண்டும். இதற்குக் கருக்கலைப்பு உரிமையைப் பெண்ணிய வாதிகள் கோரக்கூடாது என்பது அர்த்தமன்று. கருக்கலைப்பு கோரிக்கை பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தேர்ந்தெடுக்கும் உரிமைக்கு அடிப்படையாக அமைய வேண்டுமேயன்றி, பெண்களின் பாலியல் சுதந்திரத்திற்கு ஆதாரமாக அமையக்கூடாது. வாழ்க்கை வசதிகள் மிகுந்த தற்காலத்தில் ஆண் பெண் இருவரும் ஒன்று சேர்ந்து உழைப்பதற்கு ஏதுவான மாற்றங்கள் சமூகத்தில் உருவாகி இருக்கின்றன. ஆண்களும் தங்களுடைய மதிப்புகள், தலைமைப் பண்புகள் இவைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனர். ஆண்களும், பெண்களும் வீட்டிற்குள்ளும் வெளியிலும் இணைந்து செயற்படத் தகுந்த சூழ்நிலை உருவாகியுள்ளது. பெண்களும் ஆண்களும் சேர்ந்து செயற்பட்டு, முதலாளித்துவத்தின் மூலதனத்தை மனிதத்தன்மையுடையதாக்க முடியும். அவர்கள் முதலாளித்துவத்தின் விளைவுகளைத் தங்கள் வாழ்வு ஆக்கம் பெறப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சமூக நலத்திட்டங்கள், வீட்டு வசதித் திட்டங்கள் முதலியவைகளை வாழ்க்கையில் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### 2.7.2 ஜுன் பெத்தே எல்ஷ்டைன் (Jean Bethke Elshtain)

பெட்டி ப்ரைடனைவிட அதிக அளவிலான பழமைவாதத்துக்கு எல்ஷ்டைன் தன்னுடைய ‘பொது ஆண் தனிப்பெண்’ (Public Man Private Woman) என்ற புத்தகத்தின் மூலம் அழைத்துச் செல்கிறார். அவர் பெண்ணியவாதிகள் குடும்பத்திற்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்கள் நியாயமற்றவை; பொறுப்பற்றவை எனக் கருதுகின்றார். அவர்கள் தாய்மையை வெறுத்துக், குடும்பத்தைச் சிதறச் செய்து, மனிதர்களை அந்நியப்படுத்தினர் எனச் சாடுகின்றார். மேலும், எதிர்காலச் சமூகத்தில் குடும்பத்திற்கு மாற்றாக அவர்கள் ஏற்படுத்த நினைக்கும் கூட்டு வாழ்க்கை, அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு வெற்றியடைய முடியாது என்றும் கருதுகின்றார். ஏனெனில், வயதுவந்தவர்கள் சுயமாகத் தேர்ந்தெடுக்கும் அடிப்படையில் அமைந்த கூட்டு வாழ்க்கை முறை (Communes) உண்மையான கூட்டுவாழ்க்கையாக இயங்காது என்பது அவரது கருத்தாகும். அவற்றில் குழந்தைகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் வளர்க்கும் முறையை அமுல்படுத்த முடியாது. குழந்தைகளுக்குத் தங்கள் அன்னையின் முழுநேர அரவணைப்பு தேவை. அவ்வாறு கோருவது அவர்களின் பிறப்புரிமை. அது கூட்டு வாழ்க்கை முறையில் குழந்தைகளுக்குக் கிட்டாது.

அவர் சமூகப் பெண்ணியம் (Social Feminism) என்ற ஒரு கருத்தையும் உருவாக்கினர். இதில் குடும்பங்களும் சமூகப் பிரிவுகளும் நிலைபெற்று விளங்கும். குழந்தைகளைப் பாதுகாப்பது இதன் முதல் நோக்கமாக இருக்கும். வீடு, பொதுவாழ்வு இவை இரண்டிற்கும் இடையே தெளிவான இடைவெளி இருக்கும். சமூக வாழ்விற்குத் தேவையான பாலின வேறுபாடுகள் இருக்கும். இதில் பெண்மையின் குணங்கள் அதிக மதிப்பைப் பெறும் என்று அவர் கருத்து தெரிவிக்கின்றார்.

### 2.7.3 ஜெர்மைன் க்ரீர்

ஜெர்மன் க்ரீர் தனது ‘பாலியலும் விதியும்’ (Sex and Destiny) என்ற புத்தகத்தில் இக்கால கருக் (Nuclear) குடும்பத்திற்கும், பழங்கால

விரிவுற்ற குடும்பத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகளை விளக்கி, விரிவுற்ற குடும்பங்களே குழந்தைகளை வளர்ப்பதற்கு ஏற்ற சூழ்நிலையைக் கொண்டவை என விவரிக்கின்றார். இக்காலக் கருக் குடும்பங்களில் கணவன், மனைவி இருவரிடையே பாலியல் உறவுகளே முதலிடம் வகிக்கின்றன. ஆயின், விரிவுற்ற குடும்பங்களில் உணர்ச்சிகளும், சமூக நியதிகளும், ரத்த உறவுகளும் முக்கியமாக, தாய் சேய் இவ்விருவருக்குமிடையே உள்ள உறவுகளும், முக்கியத்துவம் பெறுகின்றன. ஆண்நாயகக் குடும்பங்களிலும் பெண்களிடையே அவர்களது சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் வசதி 'சகோதரித்துவ' (Sister hood) முறையில் இருந்தது. இவ்வாறான அமைப்பு குழந்தைகளை வளர்ப்பதற்கு ஏற்ற சூழ்நிலையைக் கொடுக்கின்றது. இதே போன்று, குடும்பத்தாரால் ஏற்பாடு செய்யப்படும் மணமுறை மிகவும் சிறந்ததென அவர் புகழ்கின்றார். மேலும், வளர்ந்த நாடுகள் தங்கள் நாட்டில் குழந்தைகளின் வாழ்வுக்கு மதிப்பளிக்காமல் மக்கள் தொகைத் திட்டங்களை வளரும் நாடுகளின் மேல் திணிக்கின்றன என்றும் அவர் சாடுகின்றார்.

### 2.7.4 கேரல் மக்மில்லன் (Carol Mc Millian)

'பெண் பகுத்தறிவு இயற்கை' (Woman, Reason and Nature) என்ற புத்தகத்தில் மக்மில்லன் தன்னைப் பெண்ணியவாதிகள் செய்த தவறுகளை ஆய்வு செய்யும் ஒரு தத்துவஞானி என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, தனது கருத்துக்களைக் கூறுகின்றார். அவர் மேல்நாட்டு விஞ்ஞானிகள் வகுத்த இருகூறுகளான, பகுத்தறிவு - உணர்ச்சிகள், இயற்கை - கலாச்சாரம் என்ற வேறுபாடுகளை எதிர்க்கின்றார். பெண்கள் அவர்களுக்கு இயற்கையில் அமைந்த குழந்தை பிறப்பு, குழந்தை வளர்ப்பு முதலிய பங்குகளுக்குத் திரும்பிப் போக வேண்டும் எனவும் கூறுகிறார். அதே போன்று, பாலுறவையும் குழந்தைப் பிறப்பையும் பிரிக்கும் கருத்தடைச் சாதனங்கள், கருக்கலைப்பு முதலியவைகளையும் அறவே விட்டுவிட வேண்டும் என்றும் கூறுகின்றார். மேலும், குழந்தை காப்பகம், முதியோர் மற்றும் குழந்தை பராமரிப்புத் திட்டங்கள் இவைகளையும் எதிர்க்கின்றார்.

1960-களில் பெண்ணியத்தில் மிகவும் பரவலாக எழுந்த கோட்பாடு 'பாலியல் அரசியல்' என்பதாகும். வாழ்க்கை, அகவாழ்வு, புறவாழ்வு என இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, பெண்கள் சமூக அமைப்பின் மூலம் தாழ்த்தப்படுவதை எதிர்க்கும் கோட்பாடாகும். ஆயின், குடும்பம் சார்ந்த பழமைவாதப் பெண்ணியவாதிகள் பாலியல் அரசியல் என்ற தீவிரப் பெண்ணியத்தின் உயிர்நாடியான இக்கருத்தை எதிர்க்கின்றனர். மேலும், தீவிரப் பெண்ணியக் கோட்பாட்டுக்கெதிராக ஆண், பெண், இருபாலருக்குமிடையே உள்ள வேறுபட்ட குணநலன்களை ஆதரிக்கின்றனர். அதுவும், பெண்களின் தாய்மை எனும் பண்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். பெண்களின் இயற்கையான குணநலன்களைப் பாராட்டி அவற்றை நிலைநிறுத்துவதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். ப்ரைடன் குறுகிய நோக்கங்களிலிருந்து மக்களை விடுவித்து, அவர்களை மனித இனத்திற்குப் பொதுவான பிரச்சனைகளில் கவனத்தைச் செலுத்துமாறு கோருகின்றார். எல்ஷ்டைன் ஆண், பெண் இருபாலருக்கும் இருக்கும் நற்குணங்களை விளக்குகின்றார். கிரீர் ஆண், பெண் பால் வேறுபாடுகள் சமூகத்தில் ஒரு இயைவு பெற்ற முழுமையை ஏற்படுத்த உதவுகின்றன என்கிறார்.

### 2.7.5 குறைபாடுகள்

பழமைவாதக் குடும்பம்சார்ந்த பெண்ணியக் கோட்பாடுகள், பெண்களின் இயற்கைக் குணங்கள் அவர்களை அடிமைப்படுத்துவதற்கு எவ்வளவு தூரம் காரணமாகின்றன என்பதனை விளக்க முற்படவில்லை. பெண்கள் பொது வாழ்வில் பங்கேற்பது, ஆண்கள் குடும்பப் பொறுப்புக்களில் பங்கேற்பது இவை பற்றிய விளக்கங்களையும் அளிக்க முற்படவில்லை.

இவ்வாறாகப். பழமைப் பெண்ணியவாதிகள் பாலியல் அரசியல் எனும் கோட்பாட்டை எதிர்த்ததன் மூலம் பால், பாலினம், பெண்களின் அடிமைத்தனம் இவைகளை ஆராய்வதற்கு எழுந்த கருத்துக்கள், கோட்பாடுகள் இவைகளையும் மறுக்கின்றனர். இந்த மறுப்பு பெண்களின் அடிமைத்தனம், பாலியல், பாலினம்

இவைகளை ஆராய்வதற்கு ஒரு மேம்பட்ட கருத்தினையோ, கோட்பாட்டினையோ உருவாக்கியதன் மூலம் பெறப்படவில்லை என்பது இதன் குறையாகும். இந்நிலை பெண்ணியவாதிகள் இதுவரை சமூகக் கோட்பாடுகளைப் புதுக்கோணத்தில் நோக்கியதையும், பழைய கோட்பாடுகளுக்குப் புது விளக்கங்கள் அளித்ததையும் நிறுத்திவிட்டது. இதேபோன்று, பெண்ணியவாதிகளின் ஆய்வுக்கு அதிக அளவில் உட்பட்டிருந்தது குடும்பம் என்ற அமைப்பாகும். குடும்பம் என்பது இயற்கையான அமைப்பு என்ற கருத்துக்கு மாறாக, அது ஒரு கோட்பாட்டின் அடிப்படையில், சமூக மதிப்புகளினால் உருவாக்கப்பட்ட ஒரு சமூகச் கூறு என்பது பெண்ணியவாதிகளின் கருத்தாகும். ஆயின், பழமைப் பெண்ணியவாதிகள் குடும்பம் என்ற அமைப்பு உலகம் முழுவதிலும் காணப்படுகின்றது. அதனால் அது இன்றியமையாதது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளும் நிலை, குடும்பம் என்ற அமைப்பை ஆராய்வதைத் தடை செய்கின்றது. மேலும், பழமைப் பெண்ணியவாதிகள் குடும்பம் என்ற அமைப்புக்குள் நிகழும் அரசியலையும் கவனிக்கத் தவறிவிட்டனர்.

பெண்ணியத்தின் கோட்பாடுகளிலும், அணுகுமுறைகளிலும் இருக்கும் குறைகளைச் சீரமைக்க பழமைவாத, குடும்பம் சார்ந்த பெண்ணியம் தகுந்த விடையாகாது. இந்நிலையைச் சரி செய்ம பெண்ணியத்தின் சில கருத்துக்கள் இன்னும் பரந்த அளவில் ஆராயப்பட வேண்டும். அவற்றில் முதன்மையானது, முழு அளவில் ஒருவரின் விருப்பத்துக்குத் தக்கவாறு சமூக உறவுகளை அமைத்துக் கொள்ள முடியுமா என்பதாகும். இரண்டாவது, குழந்தை வளர்ப்பு, குழந்தைகளின் முன்னேற்றம் இவை பற்றிய கருத்துக்களுக்குப் பெண்ணியக் கோட்பாடுகள் விடையளிக்க இன்னும் இயலவில்லை. மூன்றாவது, பெண்ணியவாதிகள் இரு பாலுறவைக் குறை கூறுவதோடு மட்டும் நிறுத்திக் கொண்டனர். அதன் சரித்திரம், சிக்கல்கள், உண்மை நிலை, மதிப்பு இவைகளை ஆராய முற்படவில்லை. இக்கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து, உள்ளடக்கி புது பெண்ணியக் கோட்பாட்டை வகுக்க வேண்டியது அவசியமாகின்றது.

## 2.7.6 முடிவுரை

பிரஞ்சுப் புரட்சிக்கும் அமெரிக்கப் புரட்சிக்கும் அடிப்படையாக அமைந்த கருத்துக்கள் பிற்காலத்தில் பெண்களின் வாழ்வைப் புதுக்கோணத்தில் ஆராய வழிவகுத்தது.

ஆரம்ப காலங்களில் பெண்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் காரணமாக அவர்கள் தங்களது நிலையை உணர்ந்து கொண்டனர். அதன் பின்னர் தங்களது உரிமைகள் ஒவ்வொன்றையும் போராடியே பெற வேண்டியதாயிற்று. இந்நிலையில் பெண்களுக்குக் குடும்பத்திலும், வெளியுலகிலும் கிடைத்த அனுபவங்களும், மகளிரைப் பற்றி பல்வேறு துறை அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வுகளும் பெண்ணியக் கோட்பாடுகள் உருவாகக் காரணமாயின. அவை வளர்ச்சியுற்று மாற்றம் பெற்றதும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.